பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 08செவ்வாய்க்கிழமை (24.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 363

### நேற்று நள்ளிரவு வர்த்தமானி அறிவித்தல்

# ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு; நவ.30 இல் பிரகடனம் வெளிவரும்

## நியமனப் பத்திரங்கள் டிசெம்பர் மத்தியில்

கொழும்பு, நவம்பர் 24

ஜனாதிபதித் தேர்தல் நடத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமக்கு உத்தியோக பூர்வமாக அறிவுறுத்தி உள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தாம் நேற்று நள்ளிரவு வெளியிட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தெரியப்படுத்தி உள்ளார்.

தேர்தல் விதிகளின் பிரகாரம் நவம்பர் 30 ஆம் திகதி அளவில் ஆணையாளரின் ஜனாதிபதித் தேர்தல் குறித்த பிரகடனம் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டிசெம்பர் மத்தியில் தேர்தலில் போட்டியிடுவோர் நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கான காலத்தை நிர்ண யித்து ஆணையாளர் அறிவிப்பார்.

நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்வதற்குரிய கடைசி நாளில் இருந்து நான்கு வாரங்களில் பின்னரான ஒரு திகதியை நிர்ணயித்து அதனை ஜனாதிபதித் தேர்தலுக்குரிய நாளாக ஆணையாளர் பிரகடனப்படுத்துவார். (20ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விஞ்ஞானம் I, தமிழ்மொழியும் இலக்கியமும் II,III பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்.

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான ஆங்கிலம் I,II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## பன்றிக் காய்ச்சல் நோய்; இதுவரை 8 பேர் பலி!

கொழும்பு, நவ. 24

இலங்கையில் பன்றிக்காய்ச்சல் நோய் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலில் பொதுச்சின்னத்தில் களமிறங்க சரத் பொன்சேகா இணக்கம்



கொழும்பு, நவ. 24

ஜனாதிபதித் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சிகளின் சின்னங்களைத் தவிர்த்து பொதுச் சின்னத்தில் போட்டியிட சரத் பொன்சேகா இணக்கம் தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியின் மக்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் நாள் வருவதை முன்னிட்டு முப்படைகளும் உஷார் நிலையில்

### கடற்கரைப் பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, நவ. 24

மாவீரர் நாளை ஒட்டி முப்படைகளையும் தயார் நிலையில் வைத்திருக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார் (20ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நாளை ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ. 24

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாளை நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பில் கல்வி அமைச்சுக்கு முன்பாக இடம்பெறவுள்ளதாக (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குக் கிழக்கை மீண்டும் இணைப்பதற்கு இந்தியாவிடம் மஹிந்த இணக்கம் தெரிவித்தார்



கொழும்பு, நவ. 24

வடக்கு - கிழக்கை இணைப்பதற்கு அரசு இணங்கியுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

கடந்தவாரம் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜியுடனான சந்திப் பின் போது இதுதொடர்பில் மஹிந்த ராஜபக்ஷ தமது இணக்கத்தை வெளிப்படுத்தினார் என்று அறியவந்துள்ளது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அடிப்படையாக வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு தனியான ஒரு அலகாக மாற்றப் படுவது அவசியமாகின்றது.

எனினும், 1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இணைக்கப்பட்ட இந்த இரு மாகாணங்களும் 2006ஆம் ஆண்டு நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரிக்கப்பட்டுள்ளன.



எனினும் அவற்றை ஜனாதிபதிக்குள்ள அதி (20ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களின் மீள்குடியேற்றம் அரசின் வெறும் கண்துடைப்பா?

### மறுக்கிறார் வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி

கொழும்பு, நவ. 24

பொதுமக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகளை அரசு கண்துடைப்பு வேலையாக மேற்கொள்ளவில்லை என்று வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

மீள் குடியேற்றப்பட்டவர்களுக்கு அவர்க ளின் வாழ்வாதாரத்துக்குத் தேவையான வசதிகள் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட் (20ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தக்குற்றம் புரிந்தவர்களை கட்டாயம் தண்டிக்கவேண்டும்

### ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வலியுறுத்து

கொழும்பு,நவ. 24

யுத்தக் குற்றவாளிகள் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அயர்லாந்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட அவர் யுத்தத்தின் போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மனித (20ஆம் பக்கம் பார்க்க)




வியத்தகு லான்ட் லைன் கட்டணங்களுடன்
வெளிநாடுகளுக்கு அழையுங்கள்

இந்தியா, கனடா, அமெரிக்கா, சிங்கப்பூர், சீனா ஆகிய நாடுகளின் எந்தவொரு தொலைபேசி இலக்கத்திற்குமான IDD அழைப்புகளை, நிமிடமொன்றிற்கு ரூ. 5/- என்ற ரீதியில், Per Second கட்டண முறை ஊடாக மேற்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு, எந்தவொரு Dialog வாடிக்கையாளர் சேவை நிலையத்தையும் நாடுங்கள்.

Fixed Line

www.dialog.lk

Dialog

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சாவகச்சேரிச் சந்தையில் திருடப்பட்ட பொருள்கள் படையினரால் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம் - நவ.22

சாவகச்சேரி பொதுச் சந்தையில் திருடப்பட்ட பொருள்கள் பொலிஸார் மற்றும் படையினரின் கூட்டு முயற்சியின் பயனாக மீட்கப்பட்டன.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: கடந்த வெள்ளிக் கிழமை வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து அழைத்து வந்த பொதுமக்களை கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலை யத்தில் இறக்கிய பின்னர் பேரூந்துகள் இரவுத் தரிப்புக்காக சாவ கச்சேரி பேரூந்து நிலையத்தில் தரித்து விடப்பட்டன.

காலையில் சந்தைக்கு வந்த வியாபாரிகள் பலர் சந்தையில் தாம் முதல் நாள் வைத்து விட்டுச் சென்ற பல பொருள்கள் திருட் டுப் போனதைக் கண்டு நகர்ப் பகுதி படையினரின் புலனாய்வுத் துறையினரிடம் முறையிட்டனர். படையி னர் உடனடியாக நடவடிக்கை மேற் கொண்டு சாவகச்சேரியிலிருந்து வவுனியா சென்ற பேரூந்துகளை தடுத்து வைத்திருக் குமாறு மிருசுவில் வாகன சோதனை முகா முக்கு அறிவித்த னர்.

கொடிகாமம் பொலிசாருடன் மிருசுவி லுக்குச் சென்ற படையினர் அங்கு நின்ற வானங்களைச் சோதனையிட்ட போது சந் தையில் திருட்டுப் போனதாகக் கருதப் படும் பொருள்கள் சில பேரூந்துகளில் இருப் பதைக் கண்டுபிடித்து பொருள்களுடன் பேரூந்துகளை சாவகச்சேரிக்கு அழைத்து வந்தனர்.

திருட்டுப்போன வாழைக்குலைகள், அப்பிள், மாம்பழம், விளாம்பழம், பனங் கட்டிக் குட்டான்கள்,வெற்றிலை பாக்கு உட்பட சுமார் 10 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் பேரூந்துகளிலிருந்து இறக்கப்பட்டு சந்தைக்கு கொண்டு வரப்பட்டன

திருட்டுப்போன பொருள்கள் மீட்கப் பட்டமை குறித்து சந்தை வியாபாரிகளும் பொது மக்களும் படையினருக்கும் பொலி சாருக்கும் பாராட்டுத் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட பொருள்கள் உரிய வியா பாரிகளால் அடையாளம் காட்டப்பட்ட தையடுத்து அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டன.

வவுனியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட தனியார் பேரூந்துகளிலேயே பொருள்கள் மீட்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (1-207)

## சட்டவிரோத மின்சாரம் பெற்ற இருவருக்கு அபராதமும் நஷ்டஈடும்

யாழ்ப்பாணம்-நவ.24

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற கைதடி, நுணாவிலைச் சேர்ந்த இரு வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 6 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக் கப்பட்டது. அத்துடன் மின்சார சபைக்கு நஷ்டஈடும் செலுத்துமாறும் உத்தர விடப்பட்டது.

இலங்கை மின்சாரசபை சாவகச் சேரிக் கிளையினால் சட்ட விரோமாக மின்சாரம் பெற்ற இருவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

வழக்குகளை நேற்று விசாரித்த நீதி வான், இருவருக்கும் தலா 6 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து, மின்சார சபைக்கு நஷ்ட ஈடாக முறையே 14 ஆயிரம் ரூபா, 15 ஆயிரம் ரூபா செலுத்து மாறும் உத்தரவிட்டார்.

அபராதத் தொகை செலுத்தத் தவ றின், தலா 6 மாத சாதாரண சிறைத் தண் டனையும், நஷ்ட ஈட்டுத் தொகை செலுத்தத் தவறின், முறையே 14 மாதங் கள், 15 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஓ-207)

## வடமராட்சி ஆசிரியர்களுக்கு சனியன்று செயலமர்வு

வடமராட்சி, நவ.24

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் 9ஆம் தரத்திற்கு புதிய பாடத்திட்ட தமிழ்ப்பாடம் போதிக்கும் ஆசிரியர்க ளுக்கு நெல்லியடி மத்திய மகா வித்தி யாலய ஆசிரிய நிலையத்திலும், 11ஆம் தரத்திற்கு புதிய பாடத்திட்ட வணிக, கணக்கீடு பாடம் போதிக்கும் ஆசிரியர் களுக்கு நெல்லியடி மத்திய மகா வித்தி யாலயத்திலும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு செயலமர்வு இடம் பெறும்.

இச் செயலமர்வில் சம்பந்தப்பட்ட ஆசி ரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (1-236)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் மைந்தனும், நலன் விரும்பியும் பழைய மாணவர் சங்க உப தலைவருமான

**திரு. ஆறுமுகநாதன் ஜனார்த்தனன்**

அவர்களுக்கு தொழில்திறன் வல்லுநர்களுக்கான ஜனாதிபதி விருது கிடைத்தமை குறித்து எமது இதய பூர்வமான நல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யா/தந்தை செல்வா
தொடக்க நிலைப்பள்ளி,
தெல்லிப்பழை.

(91377)

## பதவி வெற்றிடம்

யாழ்.நகரில் இயங்கும் மொத்த விற்பனை நிலையத்திற்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

1. சிட்டை எழுதுநர் ஆண்கள் (40-50 வயது விரும்பத்தக்கது)
2. விற்பனையாளர்கள் ஆண்கள் (25 வயதிற்கு மேல்)
3. அலுவலக எழுதுநர் பெண்கள்

**தகைமைகள்**

1. க.பொ.த. சாதாரணம் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. கணிதம் - C, வர்த்தகம் -C, ஆங்கிலம் - S

ஆகிய தகைமைகள் விரும்பத்தக்கது.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் 30.11.2009 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல - 3961
உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(91375)

## யாழ். கல்வி மேம்பாட்டுப் பேரவை புனரமைப்புக் கூட்டம்

காலம் - 29.11.2009 ஞாயிறு
காலை 9.30 மணி

இடம் - நல்லூர் சாதனா பாடசாலை
(வலய வளாகம்)

தலைமை - *செல்வி. திலகா பெரியதம்பி அவர்கள்*

உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளித்து ஒத்துழைப்பு வழங்கவும்.

*ஆ. சி. நடராஜா*
*செயலாளர்.*

(சி/562689)

## விற்பனைக்கு

★ கோப்பி, தேயிலை, ஏலக்காய், கறுவா, மிளகு, சாதிக்காய்.
★ சிறுவர்களுக்கான உடுப்புகள்
★ சான்றில்கள்
★ பஞ்சாபி துணிகள்
★ சப்பாத்து வகைகள் (இறக்குமதி செய்யப்பட்டவை)

குறைந்த விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு : 0775271806

(c/562693)

## காணவில்லை



85/ 5, தஞ்சிலேன், அரசடி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

**கணேசராசா கஜிதா**

என்பவரை நேற்று (23.11.2009) மாலை 5.30 மணிமுதல் காணவில்லை. (இவர் ஒரு சித்த சுவாதீனமற்றவர்) இவரைக் கண்டவர்கள் கீழ் உள்ள தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

T.P : 0770734735, 0212228775

(27111)

## கண்ணீர் அஞ்சலி

*2007 'A' தாதியப் பிரிவில் கல்வி பயிலும் தாதிய மாணவனாகிய செல்வன் தனபாலர் அர்ச்சுதானந்தனின் அன்புத்தாயார்*

**திருமதி தனபாலர் வேதபாக்கியம்**

*அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

தாதியக் கல்லூரிச் சமூகம்,
யாழ்ப்பாணம்.

(91387)

## தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 4 தொடக்கம் 10 பரப்பு வரையான காணி தேவை. தொடர்பு: 0712182856

## பசுவைக்காணவில்லை

சிவப்பு நிறம்,பட்டிபார்த்த சின்னக் கொம்பு, கழுத்தில் நீலக்கயிறையும் நீளமான வாலையும் கொண்ட பசுமாட்டை 21.11.2009 முதல் காணவில் லை. தகவல் தருவோருக்கு சன்மானம் வழங்கப்படும்

**தொடர்புக்கு:**

இல.100, [illegible] அரசடி வீதி, [illegible]. T.P-0212226740


## மரண அறிவித்தல்கள்

### இராசரத்தினம் கசிதரன்

(யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவன்)



போயிட்டி, நீர்வேலியைப் பிறப்பிட மாகவும் இங்கிலாந்து, Southen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராச ரத்தினம் கசிதரன் 22.10.2009 அன்று காலமானார். அன்னார் இராசரத்தினம்- தவமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்தி ரனும், கிருபாஜினி (கொலண்ட்), தர்சினி (ஆசிரியை), தர்மேந்திரா, கஜீபன் ஆகி யோரின் பாசமிகு சகோதரனும், மகேந் திரன் (கொலண்ட்), ஜெகதீஸ்வரன் (நிக் கொட்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஷமீலா, மிதுலன், திஷானா ஆகியோரின் பிரியமான மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

போயிட்டி,
நீர்வேலி.

(சி/562682)

தகவல் :
குடும்பத்தினர்.

### பிரான்ஷிஸ் யோசப் பெசில்

(முன்னாள் ஆலயப்பாதுகாவலர், St. Peter's Methodist Church, யாழ்ப்பாணம்)



நாவலப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், மாட்டின் வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட பிரான்ஷிஸ் யோசப் பெசில் நேற்று (23-11-2009) அன்று கர்த்தருக்குள் ளாக எடுத்துக்கொள்ளப்பட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பிரான்ஷிஸ் யோசப் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாரிமுத்து மற்றும் இலட்சுமி தம்பதியினரின் மருமகனும் சாந்தமலரின் அன்புக் கணவரும் சஞ்ஜீவன் (R.D.A பருத்தித்துறை), கிஷோக் குமார், அஷோக்குமார், டினேஸ்குமார் (மாணவர், யாழ்.மத்திய கல்லூரி), பிறிஷ்கில்லா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சுவேந்தினியின் அன்பு மாமனாரும் சஞ்ஜை, ஸரோன் ஆகி யோரின் அன்புப் பேரனுமாவார்.

நல்லடக்க ஆராதனை இன்று (24-11-2009) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி மெதடிஸ்த சேமக்காலை யில் நல்லடக்கம் செய்வதற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.31/1, மாட்டின் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(91380)

தகவல்:
மனைவி பிள்ளைகள்
தொ. பே : 0776179005

### சுப்பிரமணியம் ஆறுமுகசாமி.



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஆறுமுகசாமி நேற்று (23.11. 2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம் - தையல்நாயகி தம்பதியரின் மக னும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் சின்னமணிப்பிள்ளை தம்பதியரின் மருமக னும், மல்லிகாதேவியின் அன்புக் கணவரும், திருநாவுக்கரசு, காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், றஞ்சினி, கனகாம்பாள் ஆகியோரின் மைத்துனரும், கமலினி (லண்டன்), கலாஜினி(லண்டன்), நந் தினி (ஆசிரியை, யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், மணிமாறன்(லண்டன்), சிவறஞ்சன் (லண்டன்), மீரதவன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வலி.கிழக்கு பிரதேசசபை) ஆகியோரின் மாமனும், அஞ்சனா, துர்க்கவி, யதீசன், மதுஷாயினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.11.2009) புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டிப்பிட்டி இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆனைக்குட்டி ஒழுங்கை,
தலமன் கலட்டி, தெல்லிப்பழை.

(91388)

தகவல் :
குடும்பத்தினர்.

### திருமதி பஞ்சலிங்கம் செல்வமணி



உரும்பிராய் கிழக்கு , செல்லப்பா வீதியைச் சேர்ந்த திருமதி பஞ்சலிங்கம் செல்வமணி நேற்று (23.11.2009) திங்கட்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை பஞ்சலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம்-அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர் களான பொன்னுத்துரை- இராசம்மா தம்பதியின ரின் அன்பு மருமகளும், தவமணி, பரஞ்சோதி, கமலாம்பிகை ஆகி யோரின் அன்புச் சகோதரியும், வரதரஞ்சன், செல்வரஞ்சன், சிவ றஞ்சன், காலஞ்சென்ற ஸ்ரீரஞ்சன் மற்றும் நிரஞ்சன், சுதஞ்சன், நிஷாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், லலிதா, அருணா, றவி தா, கிரியா ஆகியோரின் அன்பு மாமியாரும், நிதர்சிகா, சிந்துஜன், தனுசன், கௌதம், தீபத், தினேஸ் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.11.2009) செவ் வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்லப்பா வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(சி/ 562688)

தகவல் :
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தேர்தல் அறிவிப்போடு சேர்ந்து பேரம் பேசலும் ஆரம்பிக்கும்

இலங்கையின் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எந்தச் சமயத்திலும் அறிவிக்கப்படலாம் என நேற்றுப் பரவலாக நம்பப்பட்டது. எதிர்பார்க்கப்பட்டபடி ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்டது. புதிய வருடம் - 2010 ஆம் ஆண்டு - தேர்தல் சூட்டோடுதான் பிறக்கப் போகின்றது.

எது, எப்படியென்றாலும் நடத்தப்படக் கூடிய இந்த ஜனாதிபதித் தேர்தல் இலங்கையின் அடுத்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில் அமர்கின்றவர் யார் என்பதைத் தீர்மானிக்கப் போகின்றது என்பதால் தமிழர்களைப் பொறுத்தவரை இது, இன்று முக்கிய விடயமாகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலைப் போன்று, 'இது தென்னிலங்கை தனது தலைமையைத் தேர்ந்தெடுக்கும் விவகாரம், இதில் தமிழர் தாயகத்துக்குப் பங்களிக்க ஏதுமில்லை!' - என்று தமிழர் தரப்பு விட்டேத்தியாக இருக்க முடியாது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் இருந்த ஆயுத வலுவையும் அரசியல் பலத்தையும் இழந்து இன்று ஏதிலிகள் போல் நிற்கும் தமிழினம், இந்த ஜனாதிபதித் தேர்தலை வகையாக - வசமாக - பயன்படுத்திக் கொண்டால்தான் மிச்சம், மீதி ஏதும் கிட்டும். அரசியல் ரீதியாகவேனும் எச்ச, சொச்ச அதிகாரத்தை -பலத்தை - தக்கவைத்துக் கொள்ளமுடியும்.

இந்த ஜனாதிபதித் தேர்தல் தென்னிலங்கையின் பிரதான இரு அணிகளுக்கும் இடையிலான நேரடிப் போட்டி என்றாலும், அதில் முடிவைத் தீர்மானிக்கும் வலிமை சிறுபான்மையினரின் - குறிப்பாகத் தமிழர், முஸ்லிம்களின் - கைகளில் வீழ்வதற்கான வாய்ப்புகள் அதிகம் தென்படுகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தை சாதுரியமாகப் பயன்படுத்துவதில்தான் தமிழர்களின் எதிர்காலம் தங்கியுள்ளது. சரியான உத்தியை வகுத்து, கனகச்சிதமாகக் காய் நகர்த்தி, விடயத்தை நாசூக்காக ஒப்பேற்ற வேண்டிய தகுந்த வேளை இது.

இந்தியத் தரப்போடும், புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் தமிழ்ப் பிரமுகர்களின் ஓர் அணியோடும் இலங்கை அரசுத் தலைமை அண்மையில் ஆரவாரம் ஏதுமின்றி நடத்திய பேச்சுகளின்போது, வடக்கு - கிழக்கு இணைப்புக்கு அரசுத் தலைமை உடன்பட்டது என்றும் -

எனினும், இதனை வெளிப்படையாகச் செய்தால் எதிர்வரும் தேர்தலில் தென்னிலங்கையில் அரசுத் தரப்புக்கு அது பெரும் பாதகமாகிவிடும் என்பதால், அதனை உடனடியாக, வெளிப்படையாகச் செய்யாமல், முதலில் வடக்கையும், கிழக்கையும் சேர்த்து ஐக்கிய பொருளாதார வலயமாக அறிவித்து, பின்னர் நிர்வாக ரீதியாக அந்த மாகாணங்களை இணைத்து, கடைசியாக ஓர் அரசியல் பிராந்தியப் பிரதேசமாக மாற்றலாம் என அரசு உறுதியளித்தது என்றும் -

சில செய்திகள் வெளியாகியுள்ளன. அவற்றில் உண்மை இருக்கலாம். பொய்யும் இருக்கலாம்.

சில சமயங்களில் பிரதான தேர்தல் வேளையில் தமிழர்கள் தரப்பை ஏமாற்றித் தமது வலையில் வீழ்த்தி அவர்களின் வாக்குகளைச் சுருட்டுவதற்காக அரசுத் தரப்பே பின்னிக்கொள்ளும் சூழ்ச்சியாகவும் கூட இப்படிக் கசியும் செய் திகளின் நோக்கம் இருக்கலாம்.

அப்படியில்லாமல், தமிழர்களுக்கு இணைந்த வடக்கு - கிழக்கைக் கொடுப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு தயாராகி விட்டது என்ற கதையைத் தென்னிலங்கையில் பரப்புவதன் மூலம், மஹிந்தருக்கு எதிரான உணர்வுகளை பௌத்த - சிங்கள மேலாண்மையில் மூழ்கிக் கிடக்கும் தென்னிலங்கை மக்கள் மத்தியில் கிளப்பி, அதன் மூலம் தேர்தலில் அரசியல் ஆதாயம் தேடுவதற்காக எதிரணிகளால் கசியவிடப்படும் செய்தியாகவும் கூட இது இருக்கலாம்.

இப்போது தேர்தல் என்றதும் தமிழர்களுக்கு சகாயம் செய்ய முயல்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்று காட்டி, அதற்கு எதிராகத் தென்னிலங்கையில் உணர்வலைகளைத் தூண்டிவிட்டு, அதனை எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக நிறுத்தப்படக் கூடிய ஜெனரல் சரத் பொன்சேகாவுக்குப் பாடமாகச் சுட்டிக்காட்டவும், இந்தக் காரணத்தால் எந்த நோக்கம் கருதியும் தமிழர்களுக்கு சகாயமான நிலைப்பாட்டை பொன்சேகா பிரதிபலிக்கவே கூடாது என அவரை எச்சரிக்கும் நோக்குடனும் இத்தகைய செய்திகள் கசிய விடப்பட்டிருக்கலாம்.

எது, எப்படியென்றாலும், சிறுபான்மையினரோடு - குறிப்பாகத் தமிழர் தரப்போடு - ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போகும் இரு பிரதான தரப்புகளின் வேட்பாளர்களும் எத்தகைய உறவாடல் போக்கைக் கையாளப் போகின்றார்கள் என்பது இத் தேர்தலின் முடிவைத் தீர்மானிக்கும் அம்சங்களுள் ஒரு முக்கிய விடயமாகப் போகின்றது.

இந்த வேட்பாளர்களோடு,திறந்த மேடைகளிலும், மூடிய அறைக்குள்ளும் தமிழர் தரப்பு பேரம் பேச வேண்டியிருக்கும். உடன்பாடுகள் காணவேண்டியிருக்கும். உறுதிமொழிகள் பெறவேண்டியிருக்கும்.உறுதிமொழிகளை செயலாக்குவதற்கு தூண்டும் தரப்புகளைத் தேடவேண்டியும் கூட வரலாம்.

ஒருபுறம் பகிரங்க அறிவிப்புகளைச் செய்வதும், மறுபுறம் இரகசிய உடன்பாடுகளைக் காண்பதாகவும் கூட இந்த அரசியல் சாணக்கிய விவகாரத்தில் தமிழர் தரப்பு பின்பற்ற வேண்டிய உத்தி அமையக்கூடும்.

இவற்றையெல்லாம் தமிழ்த் தலைமைகள் எப்படி ஒப்பேற்றப் போகின்றன, மதி நுட்பமாகக் காய் நகர்த்தப் போகின்றன என்பதே பிரதான கேள்வி. இவற்றுக்கு விடை காணப் பொறுத்திருந்து பார்த்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

## வடபகுதியில் மீன்பிடி அபிவிருத்திக்கு ஆயிரத்து 165 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, நவ.24

மஹிந்த சிந்தனையின் கீழ் வட மாகாண மீன்பிடித்துறை அபிவிருத்திக்கென அரசாங்கம் பல திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. அதன் ஓர் அங்கமாக வடமாகாணத்தில் மீன்பிடித்துறை அபிவிருத்திக்கான மத்திய காலத்திட்டத்திற்கென ஆயிரத்து 165 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சு தெரிவித்தது.

இதன்படி யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சு உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

வடக்கிலுள்ள மீன்பிடித் துறைமுகங்கள், இறங்குதுறைகள் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதோடு 'நாரா' நிறுவன பிரதேச அலுவலகங்களும் அங்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டங்களும், சிறியமீன் குஞ்சுகளை வளர்க்கும் நிலையங்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (50)

## வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 1,350 குடும்பங்கள் மீள்குடியேற்றம்

வலி.மேற்கு, நவ.24

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் இதுவரை நலன்புரிக் கிராமங்களில் இருந்து 1,350 குடும்பங்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளன. இவர்களுக்கான பதிவுகள் அனைத்தும் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன் இவர்களது வாழ்வாதாரத்தை மேன்படுத்துவதற்கான முயற்சிகளும் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிராம சேவகர்களும், செயலக உத்தியோகத்தர்களும் வீடு வீடாகச் சென்று மேற்கொண்ட பதிவின்படி மீள் குடியேறியவர்களில் 92 பேர் விசேட தேவைக்குரியவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு அவர்களின் விவரங்களை மாவட்ட அரசாங்க அதிபர், வட மாகாண சமூக சேவைத் திணைக்களம் ஆகியவற்றுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் பிரதேச செயலர் திருமதி தே.பாபு தெரிவித்துள்ளார். (04-112)

## தேவரையாளி இந்து மாணவர்கள் வடமராட்சியில் டெங்கு ஒழிப்புப் பிரசாரம்

வடமராட்சி,நவ.24

டெங்கு நோயைக் கட்டுப்படுத்த டெங்கு நோய் விழிப்புணர்வு ஊர்வலத்தை கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்கள் வடமராட்சிப் பகுதியில் நடத்தி வருகின்றனர்.

டெங்கு நோய் பரவும் வைரஸ் கிருமி, நோயின் அறிகுறிகள், அவற்றிற்கான சிகிச்சை முறை, டெங்கு நோய் பரவாமல் மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் என்பனவற்றைப் பிரதிபலிக்கும் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு விழிப்புணர்வு ஊர்வலம் நேற்றையதினம் காலை பருத்தித்துறையில் நடத்தப்பட்டது.

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியிலிருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம் வதிரிச்சந்தி, மாலிசந்தி, மந்திகை ஆஸ்பத்திரி வீதி, மந்திகைச் சந்தை, கிராமக்கோடு ஊடாக பருத்தித்துறை நகரம் வரை இந்த ஊர்வலம் இடம்பெற்றது.

ஊர்வலத்தில் சென்ற மாணவர்கள் நாத ஒலியை எழுப்பியவாறு முக்கிய சந்திகளில் சில நிமிடங்கள் வரை தரித்து நின்று சுலோக அட்டைகளை உயர்த்திப் பிடித்தவாறு நின்று கொண்டிருந்தனர்.

தேவரையாளி இந்துக் கல்லூரி சுகாதாரக்கழகம், வடமராட்சி கல்வி வலயத்திணைக்களத்தின் அனுசரணையுடன், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் வழிகாட்டலுடன் டெங்கு நோய் ஒழிப்பு ஊர்வலத்தை மேற்கொண்டு வருகிறது.

கடந்தவாரம் கல்லூரியிலிருந்து நெல்லியடிப் பட்டினம் வரை டெங்கு நோய் ஒழிப்பு ஊர்வலத்தை இக்கல்லூரி மாணவர்கள் நடத்தி இருந்தனர். (50-236)

## அன்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ.24

ஐப்பசிவெள்ளிக்கிழமை சிவ தீட்சை பெற்ற சிவனடியார்கள் தீட்சைக்குரிய மந்திரங்கள் அடங்கிய 'நித்தியகருமவிதி' என்னும் நூலைக் கே.கே.எஸ். வீதியிலுள்ள மில்க்வைற் சோப் தொழிற்சாலையில் அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

## பாடசாலை சீருடை நாளை பெறலாம்

யாழ்ப்பாணம், நவ.24

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான 2010 ஆம் ஆண்டுக்குரிய சீருடைத் துணிகளை இதுவரை பெற்றுக் கொள்ளாத பாடசாலைகளின் அதிபர்கள் நாளை புதன்கிழமை வலயக் கல்வி அலுவக நிதிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஒ-207)

## மீளக்குடியமர்ந்த மாணவர்களின் வசதி கருதி வன்னியிலும் பரீட்சை நிலையங்கள்

அச்சுவேலி, நவ.24

வன்னிப் பெருநிலப்பரப்பில் மக்கள் மீளக்குடியேறிய பகுதியில் உள்ள மாணவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதியாகப் பரீட்சை நிலையங்கள் நிறுவப்படவுள்ளன. இந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் கல்வி வலயத்திலும் பூநகரிக் கல்வி வலயத்தில் பூநகரியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி ஆகிய இடங்களிலும் பரீட்சை நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

பூநகரியில் 2 பரீட்சை நிலையங்களும், துணுக்காயில் 2 பரீட்சை நிலையங்களும், கிளிநொச்சியில் 2 பரீட்சை நிலையங்களும், மடுக் கல்வி வலயத்தில் 2 பரீட்சை நிலையங்களுமாக எட்டுப் பரீட்சை நிலையங்கள் வரையில் செயற்படவுள்ளன.

மாணவர் தொகை மேலும் அதிகரிக்கும் பட்சத்தில் பரீட்சை நிலையங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கலாம் என்று கூறப்பட்டது.

பரீட்சை நிலையங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் செயற்படவுள்ள பரீட்சை நிலையங்களுக்கான வழங்கல்களை மேற்கொள்வதற்கு வசதியாக இணைப்பு நிலையங்கள் மற்றும் ஒருங்கிணைப்பு நிலையம் என்பவும் நிறுவப்படவுள்ளன.

வவுனியாவிலிருந்து துணுக்காய், கிளிநொச்சி, பூநகரிக்கான பிரயாண வசதிகள் ஓரளவு சீரடைந்திருப்பதால் பரீட்சை தொடர்பான செயற்பாடுகளும் அந்த வழிப்பாதையின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளன. (50-11)

### யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள

## கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச ஊழியருக்கு கடமைக்குத் திரும்ப விசேட பஸ் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்.மாவட்டத்தில் தற்சமயம் வதியும் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கடமையாற்றிய அரச உத்தியோகத்தர்கள் கடமையின் நிமித்தம் போக்கு வரத்துச் செய்வதற்கு விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தலை வடக்கு மாகாண ஆளுநர் யாழ். செயலகத்துக்கு அனுப்பியுள்ளார்.

இது விடயமாக யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியுடன் கலந்துரையாடி இவர்களின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கான தேசிய அடையாள அட்டை, உத்தியோக அடையாள அட்டை ஆகியவற்றைக் காண்பித்துப் பிரயாணத்தை மேற்கொள்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவர்கள் வேறு எந்தவித ஏற்பாடுகளும் செய்யத் தேவையில்லை என்று யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார். (1)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை | 09 25.11.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | அட்டமி |
| | பி.ப. 01.39 வரை |
| நட்சத்திரம்: | சதயம் |
| | மு.இ.11.38 வரை |
| [illegible] | 04.42-06.12 வரை |
| [illegible] | 12.12-01.42 வரை |

## சேர்.பொன்.இராமநாதன் நினைவு நிகழ்வு நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில்

யாழ்ப்பாணம், நவ.24

பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுநரும் சைவப்பெருவள்ளலுமான சேர்.பொன்.இராமநாதனின் நினைவு தினவிழா யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

சேர்.பொன்.இராமநாதனின் குருபூசைத்தினமான நேற்று காலை 8.30 மணியளவில் பல்கலைக்கழக வளாகத்தில் எழுந்தருளியிருக்கும் பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட பூசைகள் இடம்பெற்றன.

தொடர்ந்து பல்கலைக்கழக சபா மண்டபத்தில் உள்ள சேர்.பொன்.இராமநாதனின் திருவுருவப்படத்திற்கு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து விரிவுரையாளர்கள், மாணவர்கள் மலர்சாத்தி அஞ்சலி செலுத்தினர்.

காலை 9.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் சேர்.பொன்.இராமநாதனின் பணிகள் தொடர்பான ஆய்வுரைகள் இடம்பெற்றன.

யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உயர்பட்டப்பின் படிப்புகள் பீடம், பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன், இந்து நாகரிகத்துறை பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இதில் யாழ்.பல்கலைக்கழகப் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (50-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி நாகரத்தினம் (இராஜதுரை)



அங்குடுவனை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், பத்தாவத்தை, இளவாலையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகரத்தினம் (23.11.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும், அன்னபாக்கியத்தின் (வெள்ளையம்மா) அன்புக் கணவரும், நாகலிங்கம் சரவணமுத்து - ஒய்வுபெற்ற சீமெந்துக் கூட்டுத்தாபன சாச்சான், K.K.S.) - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், முருகையா, வள்ளியம்மை, நாகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நளாயினி, புலேந்திரன் (C.T.B., கோண்டாவில்), புருஷோத்தமன் (கனடா), தவபாரதி (கணனியியல் கல்லூரி, இணுவில்), ஜெயகாந்தன் (இறுதியாண்டு மாணவன், பட்டப் படிப்புகள் கல்லூரி, யாழ்ப்பாணம்),வாசுகி,தர்மவாணி (கல்லப்பிரிவு 2010 A/L, இராமநாதன் கல்லூரி)ஆகியோரின் பாசமிகுதந்தையும், முருகையா, அமரர் தேவராஜா, நாகராஜா (கனடா), கலாதேவி, ஜெயபாலன், பூரணம், துரைராசா, கனகரட்ணம், அமரர் தனபாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2009) செவ்வாய்க்கிழமை அவரின் தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணிக்கு விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்தாவத்தை,* தகவல்:
*இளவாலை.* (91381) குடும்பத்தினர்.

# விலைக் கேள்விகளுக்கான கோருதல் கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், யாழ்ப்பாணம்

1. சிவில் நிர்வாகத்தை வலுவூட்டும் திட்டத்தின் கீழ் தவிசாளர், மாவட்ட பெறுகைக் குழு அவர்களால் கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைகளுக்காக தகவுடைய மற்றும் தகைமை பெற்ற கேள்விதாரர்களிடமிருந்து மூடிக் குறியீடு செய்யப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. கேள்வியானது தேசிய போட்டிக் கேள்வி நடைமுறைப்படி நடத்தப்படும்.
3. ஒப்பந்த வழங்கலிற்கு தகுதி பெறுவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலிடப்படாதவராகவும், நிர்மாண, பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகத்தில் கட்டட நிர்மாணத் துறையில் கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைகளுக்கான குறித்த பதிவை அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்த வழங்கலிற்கான தகைமையைப் பெறுவதற்குத் தேவையான தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக் கேள்வி ஆவணத்தின் பகுதி 4 இலும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வித் தரவிலும் (பகுதி 5) கொடுக்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை பிரதம பொறியியலாளர், பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வமா), கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் (தொ.பேசி, தொ.நகல் இல. 021 222 2632) இலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் விலைக்கேள்வி ஆவணங்களை மேற்கூறிய முகவரியில் காலை 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா 1,000.00 ஐ பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வமா), கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தில் பணமாகச் செலுத்துவதன் மூலம் 25.11.2009 ஆம் திகதியிலிருந்து 14.12.2009 ஆம் திகதி வரை காலை 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை ஆங்கில மொழியிலான பூரண தொகுதிக் கேள்வி ஆவணம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் இரண்டு பிரதிகளில் கீழ்வரும் மாவட்ட பெறுகைக் குழு முகவரியில் (மாவட்டச் செயலகம்) 17.12.2009 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி அல்லது அதற்கு முன்னராக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்படல் வேண்டும். காலந் தாழ்த்தி சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகவே வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமுகத்தில் திறக்கப்படும்.
8. கேள்விகளுடன், அட்டவணையில் கொடுக்கப்பட்ட தகவலிற்கமைய கேள்விப் பிணைப்பத்திரம் இணைக்கப்பட வேண்டும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பிடப் பட்ட செலவு (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான ICTAD தரம் (கட்டடங்கள்) | விலைக் கேள்வி பிணை பொறுப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைத் தொகை | செல்லுபடி யாகும் காலம் |
| JF/BD/GA/QUR/02/2009 | பிரதேச செயலாளருக்கான விடுதி அமைத்தல், பருத்தித்துறை | 6.82 | 4 மாதங்கள் | M6/C7 | 68,300.00 | 31.03.2010 |
| JF/BD/GA/DTC/01/2009 | மாவட்ட பயிற்சி நிலையம் அமைத்தல், யாழ்ப்பாணம் கட்டம் I | 6.36 | 4 மாதங்கள் | M6/C7 | 63,700.00 | 31.03.2010 |

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம்,
கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல. 021 222 2632

க.கணேஷ்
தவிசாளர், மாவட்ட பெறுகைக் குழு,
அரசாங்க அதிபர்
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(இ/562687)

# மாணவர்களுக்கான தொழிற்பயிற்சி

யாழ்ப்பாணம், நவ. 24

இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகாரசபை தொழிற்பயிற்சிகளுக்காக மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழிற்திறன் சான்றிதழிற்கான ஆறு மாதகாலக் கற்கை நெறிகளாக இவை அமைகின்றன.

இக்கற்கை நெறிகளில் கணனிப்பிரயோக உதவியாளர்கள், கணனி வன்பொறியியல், அலுமினியக் கட்டுமானம், மோட்டார் சைக்கிள் பொறிவலர், ஆடைவடிவமைப்பு (பெண்கள், சிறுவர்கள்) வெல்டிங், கட்டட மேற்பார்வையாளர் (ஒருவருடம்) நீர்க்குழாய் பொருத்துதல் ஆகிய கற்கை நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் ''இணைப்பாளர், இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல.375, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்'' ன்னும் முகவரிக்கு 15.12.2009 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு அதன் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கேட்டுள்ளார்.

(1-10)

# அச்சுவேலியில் வான்கோழி விற்பனை

யாழ்ப்பாணம், நவ. 24

அச்சுவேலி பிராந்திய கால்நடைப் பண்ணையில் வான்கோழி கிலோ 400 ரூபா விலையில் விற்பனைக்குள்ளதாக வடபிராந்திய கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வான் கோழிகளை பெற விரும்பும் பண்ணையாளர்கள் கைத்தொழில்பேட்டை வீதி, அச்சுவேலியில் அமைந்துள்ள திணைக்களப் பண்ணையில் பெற்றுக்கொள்ளலாம். என்று திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-10)

# சுயதொழில் நிவாரணக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ. 24

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் சுயதொழில் நிவாரணத்திற்கு விண்ணப்பித்த பன்னிரண்டு பேருக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவு பிரதேச செயலகத்திற்கு வந்துசேர்ந்துள்ளது.

பயனாளிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

(ஒ-207)

# மாகியம்பதியில் 'கோப்சிற்றி' திறப்பு

நவாலி, நவ. 24

மானிப்பாய் ப.நோ.கூ.சங்கத்தின் மாகியம்பதிக் கிளையில் 'மினிகோப் சிற்றி' நேற்று திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும் மாகாண கூட்டுறவு ஆணையாளருமான ந.சுப்பிரமணிய சர்மா இதைத் திறந்து வைத்தார்.

சங்கத்தின் தலைவர் இ.வன்னியசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கூட்டுறவுத்துறை சார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

(ஒ-1-100)

# நாய்களுக்கு நாளை தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்.மாநகரசபைப் பிரதேசத்தில் நல்லூர், கொழும்புத்துறை, அரியாலை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளுக்கு உட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த்தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு நேற்று ஆரம்பமானது.

நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை மூன்று சுகாதார அதிகாரிகள் பிரிவுகளிலும் இந் நிகழ்வு இடம்பெறவுள்ளது. அந்த செயலகங்கள் வருமாறு:-

நல்லூரில் மணல்தறை ஒழுங்கை, சிவன்கோயில் வீதி, கொழும்புத்துறையில் சுவாமியார் வீதி, விபுலாந்தர் வீதி, அரி[illegible] (ஒ-1)

# வாடகை/குத்தகைக்குக் கட்டட வசதி தேவை

கணனிப்பயிற்சி நிறுவனம் ஒன்றுக்கு யாழ். குடாநாட்டில் பின்வரும் இடங்களில் கட்டட வசதி தேவை. கட்டடமானது 1200 சதுர அடி பரப்பிற்குக் குறையாததாக இருப்பதுடன் குடிதண்ணீர், மின்சாரம், பஸ்வண்டிப்பாதை ஆகிய வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. யாழ்.நகர் கந்தர்மடம் சந்தி.
2. திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தி அல்லது ஆடியபாதம் வீதி.
3. ஆனைக்கோட்டை.
4. கொக்குவில்.
5. சுன்னாகம்.
6. மானிப்பாய்.
7. நெல்லியடி.

வாடகை/குத்தகை அடிப்படையில் கட்டடம் தர விரும்புபவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் - 0787055829.

(இ/562674)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30.06.1942

மறைவு 05.12.2008

திதி:அட்டமி

## அமரர் சுப்பிரமணியம் சுந்தரலிங்கம்

(இளைப்பாறிய வருமானவரி உத்தியோகத்தர்)

பழகி வந்த உங்கள் முகம்
பாரினிலே மறைந்தாலும்
எழுதி வைத்த ஓவியம் போல்
இருக்கின்றீர் எம்மனதில்

58, லோட்டஸ் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (91382) குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 07.05.1940

மறைவு 25.10.2009

## அமரர் கந்தையா வேலாயுதபிள்ளை

திதி - ஸப்தமி

கடந்த 25.10.2009 அன்று இறைவனடி சேர்ந்த அமரர் கந்தையா - வேலாயுதபிள்ளை அவர்களின் இறுதி நிகழ்வில் பங்கு கொண்டு ஆறுதல் கூறிய நிக்கொட் (கச்சேரி) அதிகாரிகள், சக ஊழியர்கள், இலுவல் பிள்ளையார் கோவில் அர்ச்சகர், பரிபால சபையினர், நியூ மற்ஸ் அக்கடமி சக ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், திருக்கணித அச்சகத்தினர், கல்விமான்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மேலும் பல வகையில் உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன்,

அன்னாரின் 31ஆம் நாள் நினைவான இன்று (24-11-2009) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

குடும்பத்தினர்,
*சாவகச்சேரி வடக்கு, மீசாலை.* K.V.மதனா (மகன்). (91385)

# மரண அறிவித்தல்

## தம்பிப்பிள்ளை நாகம்மா



இடைக்காடு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், மாரீசன்கூடல், இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை நாகம்மா நேற்று (23-11-2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பிள்ளை தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற பண்டகசாலை பொறுப்பாளர், பண்.பரிஸ் ப.நோ.கூ. சங்கம்), தர்மலிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர், இடைக்காடு மகாவித்தியாலயம்), தர்மரத்தினம்(ஈசன் ஸ்ரோஸ், இளவாலை.), நடேசபிள்ளை (முன்னாள் கைத்தறியாலை ஊழியர், பண்டத்தரிப்பு.), மகேந்திரன்(பொறியியலாளர், கனடா.), தெய்வநாயகி (கொழும்பு), ஆகியோரின் அன்புத் தாயாரும், மாணிக்கம், தவமணி, சிவஞானசோதி, நாகேஸ்வரி, ஆனந்தவல்லி (கனடா), பாலகுமாரன் (ஆசிரியர், கொழும்பு), ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-11-2009) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மாரீசன்கூடல், மட்டிவளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாரீசன்கூடல்,* தகவல்: பிள்ளைகள், மருமக்கள்,
*இளவாலை.* (91379) பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரப்பகுதியில் போக்குவரத்தை சீரமைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள்

## விசேட குழுவொன்றும் அமைக்கப்பட்டது

யாழ்ப்பாணம்.நவ.24

யாழ்.நகர் மையப்பகுதியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடியினை தவிர்க்குமுகமாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இந்த விடயம் தொடர்பாக கடந்த 21 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது.

யாழ்.பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், யாழ்.மாநகர சபை ஆணையாளர் மற்றும் பொறியியலாளர்கள், யாழ். வர்த்தக சங்க தலைவர் உள்ளிட்ட அங்கத்தவர்கள், யாழ். பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி, தனியார் போக்குவரத்து சேவை, முச்சக்கர வண்டிச் சேவைகளின் சங்க உறுப்பினர்கள், யாழ்.நகர இராணுவ உயர் அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பொறியியலாளர்கள் என ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதன் போது மேற்படி பிரதிநிதிகளை உள்ளடக்கிய யாழ்.நகர போக்குவரத்து ஒழுங்கமைப்புக் குழுவொன்று உருவாக்கப்பட்டது.

இக்குழு கடந்த 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டரை மணித்தியாலங்கள் யாழ்.நகரின் மையப்பகுதிக்கு விஜயம் செய்து போக்குவரத்து ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தது.

இதன்போது தனியார் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள், தனியார் போக்குவரத்து சேவை மினிபஸ்களின் தரிப்பிடங் கள், மற்றும் பயணிகளை ஏற்றியிறக்கும் நடவடிக்கைக்கான தனியார் போக்குவரத்துச் சேவை, மினிபஸ்கள் நிறுத்துமிடம், கனகரக வாகனங்கள் மற்றும் லொறிகளில் பொருள்களை ஏற்றுதல், இறக்குதலுக்கான இடங்கள் மற்றும் அதற்கான நேரங்கள் என்பன குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் யாழ்.நகரின் முனீஸ்வரன் வீதி, ஆஸ்பத்திரி வீதிகளில் களைகட்டியிருக்கும் நடைபாதை வியாபார நடவடிக்கைகளுக்கு ஏற்ற இடத்தினை ஒதுக்குதல் குறித்தும் ஆராயப்பட்டது.

நகரின் போக்குவரத்துக்கு எவ்விதமான நெருக்கடிகளையும் ஏற்படுத்தாத வகையில் போக்குவரத்தினை ஒழுங்கமைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வுகளின் முன்மொழிவுகள் யாழ்.மாநகர சபையின் பரிசீலனைக்கென சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும், அதற்கான அங்கீகாரம் கிடைத்தவுடன் வீதிகளில் பெயர்ப்பலகைகள், குறியீடுகள் மற்றும் அறிவுறுத்தல்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன. எனவும் தெரிய வருகிறது. (50-14)

# மணற்காட்டுக்கு புதிய பஸ்சேவை

வடமராட்சி. நவ.24

இடம்பெயர்ந்த இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள மக்களின் வசதி கருதி பருத்தித்துறையிலிருந்து மணற்காடு வரை புதிய பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை இ.போ.ச டிப்போவினால் பருத்தித்துறையிலிருந்து தினமும் (காலை 8.30 மணி, 11 மணி, 1.30 மணி, 3.15 மணி, 4.15 மணி ஆகிய நேரங்களில்) நான்கு சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்து, மணற்காடு இடைத்தங்கல் முகாமிற்கு மாற்றப்பட்டுள்ள வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த சுமார் 160 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 463 மக்களின் வசதி கருதி இப் புதிய பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை பருத்தித்துறை - மருதங்கேணி வீதியில் பருத்தித்துறையிலிருந்து அம்பன், பொற்பதி, மணல்காடு ஆகிய இடங்களுக்கென மூன்று பஸ் சேவைகள் இடம்பெற்று வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (50-236)

# தென்மராட்சியில் அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்.நவ.24

க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சை -2009 இறுதிப் புள்ளிப்பட்டியல் விநியோகம் செய்தல் தொடர்பான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் குறித்த பாடசாலை அதிபர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் கேட்டுள்ளார். (1)




# மணல் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான புதிய நடைமுறை நேற்று முதல் அமுல்

யாழ்ப்பாணம்.நவ.24

யாழ்.மாவட்ட செயலகத்தினால் வழங்கப்பட்டு வரும் மணலுக்கான அனுமதிப்பத்திரங்களை பெறும் நடைமுறை நேற்று 23 ஆம் திகதியில் இருந்து மாற்றப்பட்டுள்ளதாக யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இந்தப்புதிய நடைமுறை நேற்றில் இருந்து அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தப் புதிய நடைமுறையின்படி கிராம அலுவலர் பிரதேச செயலர் ஆகியோரின் சிபாரிசு செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை வழமைபோல பயனாளிகள் மாவட்ட செயலக மணல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் கிளையில் சமர்ப்பித்து அனுமதிக்கப்படும் மணலின் அளவுக்கு ஏற்ப பணம் செலுத்துதல் வேண்டும்.

ஓர் உழவு இயந்திரச் சுமை மணலுக்கான பெறுமதியாக 1,250 ரூபா செலுத்தப்பட வேண்டும்.

மண்ல் அனுமதிப்பத்திரம் வழங்கும் கிளையின் பயனாளிகளில் இருந்து பணத்தைப் பெற்று அதற்கான பற்றுச் சீட்டையும், அனுமதிப்பத்திரம் வழங்கல் தொடர்பான ஆவணத்தையும் பூர்த்தி செய்து பயனாளிகளிடம் ஒப்படைப்பார்கள்.

புவிச்சரிதவியல், அளவை, சுரங்கங்கள் பணியாளர்களின் யாழ்ப்பாணப் பிரதேச அலுவலகம் தற்போது யாழ். தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் கட்டடங்களில் இயங்கி வருகின்றது.

பயனாளிகள் செயலகத்தால் வழங்கப்பட்ட ஆவணங்களை குறித்த புவிச்சரிதவியல், அளவை, சுரங்கங்கள் பணியகத்தில் கையளித்து மணலுக்கான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளமுடியும். (04-224)

# யாழ்.மாவட்டத்தில் ஆசிரியர் இடமாற்றம் உரிய முறையில் மேற்கொள்ளப்படும்

## மாகாணக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

அச்சுவேலி.நவ.24

யாழ்.மாவட்டத்தில் தொடர்ந்து ஒரே பாடசாலையில் 6வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய ஆசிரியர்களை அயலில் உள்ள வேறுபாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்ய வேண்டிய பணி வலயக்கல்வி பணிப்பாளருக்குரியது. குறித்த பணி உரிய முறையில் மேற்கொள்ளப்படும்.

வடக்குமாகாண கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து ஒரே பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்களின் இடமாற்றம் மற்றும் ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றம் தொடர்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்-

வடக்குமாகாண ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான சுற்றறிக்கை குறித்த காலப்பகுதியில் முன்கூட்டியே வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட சகல அலுவலர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்ட டுள்ளது.

ஒரே பாடசாலையில் 6 வருடங்கள் தொடர்ந்து கடமையாற்றிய ஆசிரியர்களை வேறுபாடசாலைகளுக்கு இட மாற்றம் செய்வது உட்பட வலயத்துக் குள்ளே, மாவட்டத்துக்குள்ளே, மற்றும் மாகாணத்துக்குள்ளே, மாகாணத்துக்கு வெளியே இடம்பெறும் இடமாற்றங்கள் தொடர்பாக விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரே பாடசாலையில் 6 வருடங்கள் தொடர்ந்து கடமையாற்றிய ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது தொடர்பாகவும் மற்றும் இடமாற்றங்கள் தொடர்பான செயற்பாடுகள் தொடர்பாக மாதாந்த அறிக்கை கோரப்பட்டுள்ளது.


ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக வலயத்துக்கு வலயம் மாறுபட்ட செயல்முறை இல்லாமல் ஒரே விதமான நடைமுறை பின்பற்றப்பட்ட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டே அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது வலயக்கல்விப் பணிப்பாளர்களின் பணியாகும். அதில் மாற்றுக்கருத்துக்களுக்கு இடமில்லை-என்றார் வீ.இராசையா. (50-11)

# புதிய ஆயிரம் ரூபாய்த் தாள் குடாநாட்டில் புழக்கத்தில்!

இலங்கை மத்திய வங்கியால் அச்சிடப்பட்டு அண்மையில் வெளியிடப் பட்ட புதிய ஆயிரம் ரூபா நாணயத்தாள் யாழ்ப்பாணத்தில் புழக்கத்துக்கு வந்துள்ளது.

இந்தப் புதிய நாணயத்தாள்கள் யாழ். நகரில் உள்ள வங்கிகளில் வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

புதிய ஆயிரம் ரூபா நாணயத்தாளில் ஜனாதிபதி மகிந்தவின் படம் பொறிக்கப்பட்டுள்ளதுடன் யுத்த வெற்றியைக் குறிக்கும் படங்களும் அதில் காணப்படுகின்றன. (04-51-224)




இலங்கை மத்திய வங்கியால் 2009 மே 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினது படத்துடனான புதிய 1000 ரூபா தாள் நாணயத்தை இங்கு காண லாம். யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி மேற்றரக் கிளையில் இப் பணம் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப் படுகிறது. புதிய 1000 ரூபா பணத்தின் இரண்டு பக்கங்களும் இப்படத்தில் காணப்படுகின்றன.




பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுனர் சேர்.பொன்.இராமநாதனின் நினைவு தின நிகழ்வுகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் சேர்.பொன்.இராமநாதனின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டிருப்பதையும், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சி.க சிற்றம்பலம் ஆய்வுரை நிகழ்விற்கு தலைமை வகித்து உரையாற்றுவதையும், உயர்பட்டப் பின் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் மற்றும் பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன் ஆகியோர் கருத்துரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். (படங்கள்-ஓங்காரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹீரோ சைக்கிளின் விசேட அம்சங்கள்

நீங்கள் சைக்கிள் ஒன்று வாங்க எதிர்பார்க்கிறீர்களா? அப்படியானால் உங்கள் தெரிவை இலகுவாக்கும் வண்ணம் ஹீரோ சைக்கிளின் விசேட அம்சங்கள்.

ஹீரோ சைக்கிள்கள், நெஷனல் பெனசொனிக், வீட்டுப்பாவனைப் பொருள்களைத் தயாரிக்கும் ஜப்பானின் மட்சுசிடா நிறுவனத்தின் தொழில் நுட்பத்தினால் உறபத்தி செய்யப்படுகின்றது.

ஹீரோ சைக்கிள்கள் ISO 9001,9002 ஆகிய சர்வதேச தரத்தை வென்ற 8 வருட உத்தரவாதமுடைய சைக்கிள் ஆகும்.

லொக், பெல்,ஸ்ராண்ட், உபகரணப் பை, சய்ட் கண்ணாடி மற்றும் சேர்தாங்கி இலவசம்.

90 இற்கும் அதிகமான நாடுகளில் ஒரு நாளுக்கு 18,500 இற்கும் அதிகமான உற்பத்தியாகும். மேலும் ஐம்பது மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சைக்கிள் உரிமையாளருக்கு இலவசமாக வழங்கப்படும் மரணம் மற்றும் ஆகியவைகளுள் ஒரு லட்சம் பெறுமதியான காப்புறுதியும், ஒரு நாளுக்கு ரூபா ஐயாயிரம் பெறுமதியான வைத்திய சாலைக் கட்டணக் காப்புறுதியும் வழங்கப்படும்.

ஹீரோ சைக்கிள் 1986 ஆம் ஆண்டு முதல் உலகின் விசாலமான சைக்கிள் உற்பத்தியாளரான அதேவேளை கின்னஸ் சாதனை புத்தகத்திலும் தனது பெயரைப் பதித்துள்ள நிறுவனமாகும். ஹீரோ சைக்கிள்கள் இலங்கையிலுள்ள 50 வருடத்துக்கும் அதிகமான காலம் விற்பனையாகும் சைக்கிள்களாகும்.

ஹீரோ சைக்கிள்கள் ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், நெதர்லாந்து ஆகிய ஏற்றுமதிச் சந்தைகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

நாளுக்கு றிம் 31,000 உம் ஹப்ஸ் 65,000 உம் 41,000 மீற்றர் செயின் ஆகியவையான உற்பத்தித்திறனை ஹீரோ சைக்கிள் நிறுவனம் கொண்டுள்ளது.

ஹீரோ சைக்கிளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் நீங்கள் எடுப்பது சரியான தெரிவாகும்.

பைசால் ஹட்வெயார் ஸ்ரோர்ஸ், இல.74,டாம்வீதி,
கொழும்பு-12,தொலைபேசி:-433727,423278,384250-3
பக்ஸ்:446088

விளம்பர வரணம்

# வட்டி விகித அனுகூலங்கள் வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்க இலங்கை வங்கி ஏற்பாடு

## அதன் தலைவர் தரும் விவரம்

வரிவிகித வீழ்ச்சிகளை வழிகாட்டலாகக் கொண்டு இலங்கை வங்கியானது கடன் வழங்குவதில் வட்டிவிகிதங்களை மீள் அமைப்பதன் மூலம் விரிவாக்கத்துக்குரிய கடன் வழங்கும் கொள்கையை உருவாக்கியுள்ளது. வீடமைப்பு, கைத்தொழில், விவசாயம், மீன்பிடி, மிருக வளர்ப்பு, உல்லாசப் பயணத்துறை மற்றும் ஏற்றுமதி போன்ற விடயங்களில் இது செயல்படுத்தப்படுகின்றது.

இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஊக்கமளிக்கும் வகையில் குறிப்பிட்ட சில கடன் வழங்கும் துறைகளுக்கு விகிதாசாரத்தை இலங்கை வங்கி 8.12% அளவுக்கு அண்மையில் குறைந்துள்ளது. இதனை முன்மாதியாகக் கொண்டு வேறு வர்த்தக வங்கிகளும் பொருளாதார வளர்சியை உத்தேசித்து வட்டி விகிதாசாரத்தை சீரமைத்துள்ளன.

வட்டிவிகிதங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள குறைப்புக்களின் காரணமாக உற்பத்திக் காரணிகளுக்கான வங்கிகள் கடன்வழங்குவதை ஊக்குவிப்பதாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை வங்கியின் தலைவர் டாக்டர் காமினி விக்கிரமசிங்க.

### அரச ஊழியர்களுக்கு நிவாரணம் அளிக்கும்

நாங்கள் விஷேட வீடுகளுக்கான கடன் வழங்குதல் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளோம். இது அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் அளிப்பதாக இருக்கும். எமது வங்கியின் செயற்பாடுகளுக்கு பின்புலமான எம்மிடம் நன்றாக ஆலோசித்து உருவாக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் உண்டு. கடன் வழங்கும் வட்டி விகிதங்களை நாம் குறைத்தாலும் கீழ் நிலைகளில் ஏற்படக்கூடிய தாக்கங்களைக் குறைப்பதற்கான மாற்று வழிகளும் எம்மிடமுண்டு. கீழ் நிலைகளில் தேவைப்படுவோருக்கு நிதிகளை வழங்குவதில் நாங்கள் துரிதமாக செயற்பட ஆரம்பித்துள்ளோம். பழைய புதிய இரண்டு விதமான கடன்களுக்கும் கீழ்நிலை வட்டி விகிதங்கள் பொருத்தமுடையதாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பணம் கொடுப்பவை விரைவுபடுத்துவதிலும் விகிதங்களை திருத்தி அமைப்பதிலும் வங்கி தீவிரமாக செயற்பட்டு வருகிறது என்று அவர் மேலும் கூறினார்.

வடக்கு- கிழக்கில் வங்கியின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக டாக்டர் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவிக்கையில்- நாம் நாட்டின் எதிர்காலத்துக்காகவும் முதலீடு செய்து வருகின்றோம். வடக்குக் கிழக்கிற்கு முதலீடுகளை வழிப்படுத்ததுவதன் மூலம் வளர்ச்சிக்கு நாம் அடித்தளம் அமைத்து வருகின்றோம் என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

### வடக்குக் கிழக்கிற்கு இரண்டு முதலீட்டுத் திட்டங்கள்

வடக்குக் கிழக்கின் வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு இலங்கை வங்கி இரண்டு முதலீட்டு நிதியங்களை ஆரம்பிக்கவிருக்கின்றது. கால்நடை வளர்ப்பு, விவசாயம், மீன்பிடி, சமூக உள் கட்டமைப்பு புதுப்பிக்கப்படும். எரிசக்திபோன்ற துறைகளில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தில் எமது கிளைகளின் வலையமைப்பானது மேலும் முன்னேற்றம் கண்டு வருகின்றது. செப்ரெம்பரில் 3 கிளைகள் திறக்கப்பட்டுள்ளன. ஒக்ரோபரில் மேலும் இரு கிளைகள் திறக்கப்பட்டுள்ளன.

வளரும் பொருளாதார செயற்பாடுகளுக்கு இவை மேலும் வலுவூட்டுவதாக அமையும் என்று டாக்டர் விக்கிரமசிங்க கூறினார். .

# விசேட தேவையுள்ளோருக்கு உபகரணங்கள் வழங்கல்

வலி.மேற்கு,நவ.24

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட விசேட தேவைக்குரியவர்கள் இரண்டுபேருக்கு முச்சக்கர வண்டிகளும் ஐந்து பேருக்கு சக்கர நாற்காலியும் வழங்குவதற்காக அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை பதினொரு முச்சக்கர வண்டிகளும் சக்கர நாற்காலிகள் ஐந்தும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன எனவும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள இருபத்திநான்கு பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடியும் வழங்கப்பட்டுள்ளது எனவும் வலி.மேற்குப் சமூக சேவைகள் உத்தியோகத்தர் வி.செல்வம் தெரிவித்துள்ளார்.

(04-112)


## பாராட்டுகின்றோம்



Lion சுப்பிரமணியம் வீரசுதாகரன்
(B.A.,P.G.D. in Ed., population, Dip.in Fisheries)
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 22ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் இன்று (24.11.2009) செவ்வாய்க்கிழமை பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (B.M.I.C.H) கல்வியியல் Diploma பட்டத்தைப் பெறும் ஆசிரியரை வாழ்த்துவதுடன் மேலும் பல்வேறு பட்டங்களைப் பெற்றுக்கொள்ள எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(சி/562645)

நெல்லியடி. ஆசிரிய நண்பர்கள் (கஜன், சிவா, குகன்).

## வாழ்க! வளமுடன் பல்லாண்டு!



உயர்திரு. பிரான்சிஸ் சேவியர் அன்ரன்
BA (Hons), M.phill, MA, Dip - in - Ed, SLPS - 2 - I)
(அதிபர் - யாழ்.நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்)

எமது வித்தியாலய அதிபர் திரு.பிரான்சிஸ் சேவியர் அன்ரன் அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 2 - I இற்குப் பதவியுயர்வு பெற்றமையை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். கடமையுணர்வுடன் கூடிய மனிதநேயம் மிகுந்த அர்ப்பணிப்பான சேவை தொடரவும் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்றுச் சிறக்கவும் இறையாசிவேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்.

(91371)

## கைமாறிவிட்டது

17-11-2009 செவ்வாய்க்கிழமை காலை கே.கே.எஸ். வீதியிலுள்ள செல்சிற்றி எனும் போன்கடைக்கு முன்னால் எனது லுமாலா பெண்கள் சயிக்கிளை ஒருவர் தவறுதலாக எடுத்துச் சென்றுவிட்டார். அவருடைய லுமாலா பெண்கள் சைக்கிள் மேற்படி போன் கடையில் வேலை செய்யும் தனுசனிடம் உள்ளது. மாறி எடுத்தவர் எமது சயிக்கிளை கொடுத்துவிட்டு அவருடைய சயிக்கிளைப் பெற்றுச் செல்லவும்.
தொ.பே.:071 2087175

## விற்பனைக்கு

புதிய P4 Computerகள் (05)
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: தொ.பே.:077 2840064

## தேவை

22.11.2009 அன்று நேரம் தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டமைக்காக இன்று மீள் பிரசுரமாகின்றது.

யாழ்.நகரில் உள்ள தொலைத்தொடர்பு நிலையத்துக்கு கொம்பியூட்டர் ரைப்பிங் வேலை தெரிந்த பெண் பிள்ளைகள் உடனடியாகத் தேவை. சான்றிதழ்களுடன் நாளை (25.11.2009) புதன்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்குமிடையில் நேரில் வரவும்.

T.P: 0212223302
0773671545

JOHNS COMMUNICATION
243, Hospital Road, Jaffna.

(E/562628)


# ஆசிரிய கலாசாலை அனுமதி; மேன்முறையீடு செய்யலாம்

அச்சுவேலி,நவ.24

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அனுமதிக்குக் கடந்த வருடம் விண்ணப்பித்து அனுமதி கிடைக்காதவர்கள் மற்றும் போர்காலச்சூழலினால் ஆசிரியபயிற்சியை தொடர முடியாதவர்கள் கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரிவுக்கு மேன்முறையீடு செய்யலாம்.

கடந்த வருடம் ஆசிரிய கலாசாலை அனுமதி பெறுவதற்கு முயற்சி செய்து போக்குவரத்து மற்றும் நாட்டுச் சூழலினால் ஆசிரியை கலாசாலை பயிற்சியைப் பூர்த்தி செய்ய முடியாமல்போன ஆசிரியர்களுக்கு 2010 ஆம் ஆண்டில் விசேட ஏற்பாடுகளின் கீழ் ஆசிரிய கலாசாலை அனுமதியை வழங்கி சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாகச் செய்வதற்கு கல்வி அமைச்சு ஏற்பாடு செய்யவுள்ளது. சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் 2008 ஆம் ஆண்டில் தமக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை எடுத்துக்காட்டி மேன்முறையீடு செய்யமிடத்து 2010 ஆம் ஆண்டு ஆசிரியர் கலாசாலை அனுமதியின்போது அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அனுமதி வழங்கப்படவிருக்கின்றது.

இதனால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தமது மேன்முறையீட்டை 'செயலாளர், ஆசிரியர் கல்வி நிர்வாகப் பிரிவு கல்வி அமைச்சு இசுருபாய' என்ற முகவரிக்கு உடனடியாக மேன்முறையீடு செய்வதன் மூலம் 2010 ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அனுமதியினை இவர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

(04-111)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி கார்த்திகேசு பூமணி

ஈராறு மாதங்கள் கடந்தும் அம்மா
ஆறவில்லை எம் மனம்-இன்றும்
உங்கள் நினைவலைகளைச் சுமக்கின்றோம்
எத்தனை உறவுகள் வந்தாலும்
எம் அம்மாபோல உறவு வருமா?
பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
மறவாது-உம் அன்புக்காக ஏங்கி நிற்கின்றோம்.

இன்று (24.11.2009) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.14, சந்தனமாதா கோயில் வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.
(சி/562685)

தகவல்:
திருமதி கு.கெங்காதேவி
(மகள்).

## காயத்திரி பப்ளி கேஷனின்

பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

யாழ்.அன்னை புத்தகசாலை அனுசரணையில்

### மாபெரும் புத்தகப் பெருவிழா

எதிர்வரும் நவம்பர் 29, 30, டிசம்பர் 1 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கழிவு 30% வரை

காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை

அனுமதி இலவசம்

சிறுவர் நூல்கள், புலமைப் பரிசில் நூல்கள், பொது நூல்கள், பயிற்சி நூல்கள், கணனி நூல்கள், பாடசாலை உபகரணங்கள், இலக்கிய நூல்கள் மலிவு விலையில்........

பாடசாலை மாணவர்களுக்கு, நூலகங்களுக்கு விசேட விலைக்கழிவு

காயத்திரி பப்ளிகேஷன் - கொழும்பு
011 4981906, 0727374750

(சி/562684)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தவிர்க்க முடியாத சவாலை முறியடிப்பாரா மஹிந்த



**விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் உருவாக்கி விட்ட 'வீர புருஷர்கள்' இருவருக்கிடையில் நிகழவிருக்கும் ஜனாதிபதிப் பதவிக்கான போர் குறித்து ஆழமாக அலசும் விதத்தில் அமைக்கிறது இக்கட்டுரை. விக்ரர் ஐவனால் எழுதப்பட்ட இவ் ஆய்வுக்கட்டுரை, கடந்த 15ஆம் திகதிய 'ராவய' பத்திரிகையில் வெளி யாகியுள்ளது. அதன் தமிழ் வடிவமே இது.**

யுத்தத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈட்டிக் கொண்ட வெற்றியானது அவரை இராட்சதப் பலவானாகவும் நாட்டின் ஏனைய அனைத்து அரசியல் தலைவர்களையும் சித்திரக் குள்ளர்களாகவும் ஆக்கிவிட்டுள்ளது.

இந்த நிலைப்பாடானது அந்த இராட்சதப் பலவானுக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் ஆற்றலுடன் போட்டியிடக் கூடிய எவரும் மேற்படி அரசியல் தலைவர்கள் மத்தியில் தென்படாததொரு நிலையையும் உருவாக்கி விட்டிருந்தது.



அதேபோன்று, மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகத்துக்கே உரிய எவ்விதமான வரையறைகள் நிலவினாலும் கூட, கடும் போட்டியென்ற சவால் எதுவுமின்றியே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் இலகுவான வெற்றியை ஈட்டிக் கொள்ளத்தக்கதான நிலைப்பாடொன்றும் நாட்டில் உருவாகியிருந்தது.

**மூன்று பிரபலங்கள்**

இறுதியில் சம்பிரதாயமான எதிர்க்கட்சித் தலைவருக்குப் பதிலாக, யுத்தம் உருவாக்கி விட்ட மேலுமொரு இராட்சதப் பலவானை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் போட்டியில் நிறுத்தும் நிலைப்பாடொன்று உருவானதன் மூலம் அந்த இடைவெளி நிரப்பப்பட்டது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான வெற்றி யுத்தமானது மூன்று பிரபலங்களை உருவாக்கி விட்டிருந்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோரே அந்த மூவரும்.

யுத்தத்தில் இந்த மூவரும் வகித்த பாத்திரங்கள் மிக விசேடமான மற்றும் அசாதாரணத் தன்மை கொண்டதாகவே இருந்தன. இராணுவத் தளபதியான ஜெனரல் சரத் பொன்சேகா அந்த யுத்தத்துக்கு அவசியமான யுத்தமயத் தலைமைத்துவத்தை வழங்கி நின்றார். பாதுகாப்புச் செயலாளரான கோத்தாபய ராஜபக்ஷ இவ்விரண்டு சாதக நிலைகளையும் ஒருமுகப்படுத்தி நின்றார். இவர்கள் அந்த யுத்தத்தில் வகித்த விசேடமான பாத்திரத் தன்மையின் காரணமாக யுத்தம் முடிவுக்கு வந்தபோது அம்மூவரும் அசாதாரணமான வீர புருஷர்களாக வரலாற்றில் இடம்பெற்றனர்.

அதேவேளை, இம் மூவருமே எதிர்க்கட்சியின் கடும் விமர்சனங்களுக்கும் உள்ளாகியிருந்தனர். இந்த யுத்தம் குறித்த எதிர்க்கட்சியின் பார்வை, தனது ஆளுமையின் இருப்பைப் பலப்படுத்திக்கொள்வதற்கு மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்தை ஒரு சாதனமாகப் பயன்படுத்திக்கொள்கிறார் என்பதாகவே இருந்தது.

எதிர்க்கட்சியின் விமர்சனங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கோ பாதுகாப்புச் செயலாளருக்கோ ஒரு பொருட்டாக இருக்கவில்லை. தமது அரச பணியென்ற ரீதியில் இராணுவ வீரராகக் கருதக்கூடிய ஜெனரல் சரத் பொன்சேகா மீது எதிர்க்கட்சித் தலைவரிடமிருந்து மிகக் கடுமையான விமர்சனங்கள் எழுந்த சந்தர்ப்பங்களும் அமைந்தன. அத்தகைய சில விமர்சனங்களுக்கு கோபாவேஷத்துடன் இராணுவத் தளபதி பதிலடி கொடுத்த சந்தர்ப்பங்களும் இருக்கவே செய்தன.

**ஐ.தே.க. - ஜே.வி.பி. இணைப்பு**

இவையனைத்தும் அவ்வாறிருக்கையிலும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த தமது வசத்தில் எவரொருவரும் இல்லாததொரு நிலையிலிருந்த எதிர்க்கட்சியானது, யுத்தம் உருவாக்கி விட்டிருந்த எஞ்சியிருந்த வீரர்களுள் ஒருவரை மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தல் களத்தில் நிறுத்துவதற்குத் திறன் பெற்றுள்ளமையானது எதிர்க்கட்சி ஈட்டிக்கொண்டுள்ளதொரு வெற்றியேயெனக் கருதமுடிகிறது. இங்கு புதுமையானதொரு நிகழ்வாகக் கொள்ளத்தக்கது, இணைசேர்ந்து செயற்பட இயலாததொரு நிலையில் இருந்துள்ள ஐ.தே.கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் ஒரு முகப்பட்டுச் செயற்படத் தக்கதொரு பின்புலத்தை இத் தெரிவு வழங்கியுள்ளதேயாகும்.

முக்கியமாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வசத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பலம் கிட்டியிருந்தபோது, ஐ.தே.கட்சிக்கு நாடாளுமன்றப் பலம் கிட்டியிருந்த சந்தர்ப்பத்தில் ரணில் விக்கிரம சிங்கவின் நாடாளுமன்றப் பலத்துடனான அரசுக்குச் சாவுமணியடித்து விடுவதற்கு கச்சை கட்டிக் கொண்டு களமிறங்கி நின்றது இந்த ஜே.வி.பி. கட்சியேயாகும்.

தமது அக் கைங்கரியம் குறித்த ஜே.வி.பியின் அன்றைய பார்வை, தேசத்துரோக அரசொன்றை நாட்டிலிருந்து நீக்கிவிடும் உத்தமமானதொரு பெரும் பணியென்பதாகவே இருந்தது.

அதன்பின்னர் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதிக் கதிரையில் அமர்த்திவிடும் அரசியல் செயற்பாட்டில் ஜே.வி.பியானது சுகப்பிரசவமொன்றுக்காகப் போராடும் மருத்துவ மாதொன்றின் பாத்திரம் வகித்துச் செயற்பட்டது.

இன்று அதே ஜே.வி.பி ., தேசப்பற்று மிக்க இரட்சகனாகக் கருதித் தம்மால் பதவியில் அமர்த்தப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவின் அரசுக்கு அரசியல் சவக்குழி தோண்டும் பாத்திரத்தையும், தம்மால் தேசத்துரோகி என முத்திரை குத்தப்பட்டு அதிகாரத்திலிருந்து துரத்தி விடப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவை வேறு விதத்தில் பதவியில் அமர்த்திவிடும் அரசியல் செயற்பாடொன்றையும் வகிக்க வேண்டி நேர்ந்திருக்கிறது. ஜே.வி.பி. மற்றும் ஐ.தே.கட்சியென்ற இவற்றுக்கிடையில் நிலவிய பகை அதன் மூலமாகவேனும் தீருமானால் அதை நாட்டின் அரசியல் மேம் பாட்டுக்குக் காரணமாகும் சாதகமொன்றாகக் கருதமுடியும்.

**ரணிலின் தந்திரம்**

ஐ.தே.கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க பிரச்சினைகள் மலிந்த இச்சிக்கலினுள் பல வர்ணங்கள் கொண்டதொரு பாத்திரதாரியாகவிருப்பது தெரிகிறது.

இதற்கு முன்னர் அவரது நிலை இலகுவில் வெளியேற இயலாத கழுத்தளவுக்கு சேற்றுக் குழியில் அமிழ்ந்துபோயிருந்ததொரு நிலைப்பாடாகியிருந்தது. இந்த ஜனாதிபதித் தேர்தலில் வலுவானதொரு போட்டியாளராகி விடும் திறனாற்றலை அவர் பெற்றிருக்கவில்லை. விடுதலைப் புலிகளுக்கு எதிரான அந்த யுத்த வெற்றியானது மஹிந்த ராஜபக்ஷவை ராட்சதப் பலவானாகவும் அவரைச் சித்திரக்குள்ளனாகவும் ஆக்கிவிட்டிருந்தது. சம்பிரதாய ரீதியில் நோக்கும்போது இப் போட்டியில் அடுத்த போட்டியாளராக அமைய வேண்டியது அவரேயாவார். இருந்தபோதிலும், போட்டியின் மூலம் கிட்டும் தோல்வியானது அவரது எதிர்கால அரசியல் இருப்பை அற்றுப்போகச் செய்வதற்கு இடமிருந்தது. மறுபுறத்தில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை கட்சியின் வேறுமொரு பிரமுகருக்கு வழங்கும் கொள்கையை அவர் பின்பற்றினாலும் கூட, அதன் மூலமும் கட்சித் தலைமைத்துவத்தை அவர் இழந்துவிடும் நிலை மற்றும் அரசியல் எதிர்காலமொன்று அற்றுப்போகும் நிலை உருவாகவும் இடமிருந்தது. இந்நிலையில், தனது கட்சித் தலைமைத்துவத்தையும் பேணிப் பாதுகாத்துக் கொண்டு, அதேசமயம், மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகக் கடும் போட்டியை முன்னிறுத்திவிடும் முறைமையொன்றை இச் சந்தர்ப்பத்தில் கண்டறிந்து கொள்வதற்கு ரணில் திறனாற்றல் பெற்றுள்ளமையானது, தனது அரசியல் வாழ்க்கையில் அவர் ஈட்டிக் கொண்டுள்ள முகியத்துவம் பெறும் வெற்றியொன்றாகவே கருதமுடியும்.

ஜெனரல் சரத் பொன்சேகா இந்த ஜனாதிபதிப் போட்டியில் வெற்றிபெற்றதாக ஊகித்துக்கொண்டு, அதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்புக்கு அமைய அனைத்துச் செயற்பாடுகளும் நிகழுமானால், வெற்றிப் புருஷரான ஜெனரல் சரத் பொன்சேகாவை அந்த வெற்றியின் சின்னமாகக் கருதச் செய்யும் - முக்கியத்துவம் பெறும் - வரையறைக்கு உட்படும் பதவியொன்றில் நிறுத்திவைத்து, நாட்டை நிர்வகிக்கும் அதிகார பலத்தைத் தனதாக்கிக்கொள்ளும் ஆற்றல் அவருக்குக் கிட்டக்கூடும்.

வெற்றியீட்டிக் கொள்பவர் தனது வெற்றியின் பின்னர் ரணில்விக்கிரமசிங்கவின் அரசியல் செயற்றிட்டத்தை நிராகரித்துவிட்டாலும் கூட, குறைந்தபட்சம் கட்சித்தலைமைத்துவத்தையாவது பாதுகாத்துக்கொள்ளும் திறனாற்றல் ரணிலுக்குக் கிட்டக்கூடும். அந்த அர்த்தத்தில் நோக்கும்போது இத் தேர்தலில் கிட்டும் பெறுபேறு எவ்வாறானதாக அமைந்தாலும் கட்சித் தலைமைத்துவத்தைப் பேணிப் பாதுகாத்துக்கொள்ளும் திறனாற்றல் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிட்டுகிறது.

**தமிழ் அரசியல் கட்சிகள்**

ஆறுமுகன் தொண்டமான், டக்ளஸ் தேவானந்தா மற்றும் கருணா போன்றோர் அரச தரப்பிலேயே உள்ளனர். மனோ கணேசன், ஜெனரல் சரத் பொன்சேகாவைச் சார்ந்து நிற்கிறார். இங்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பு யாருக்குக் கிட்டப் போகின்றது என்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைபின் தலைவர்கள் அரசியல் கண்ணோட்டத்தில் ஆழமானதொரு மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்தாலும் கூட, இந்த ஜனாதிபதிப் போட்டியில் அவர்கள் கைக்கொள்ளவிருக்கும் கொள்கை எதுவென்பது தெளிவற்றதாகவே உள்ளது.

அவர்கள் [illegible] லது அதற்கு [illegible] ஆட்சி முறைமை தொடர்பான எண்ணத்தைக் எட்டும் தீவிர சக்திகளோடு அல்லாது, அதற்கு முற்றிலும் மாறான கருத்து நிலைப்பாடுகளைக் கொண்டுள்ள தீவிர சக்திகளுடன் இணைந்தே ஜெனரல் சரத் பொன்சேகா செயற்பட வேண்டி நேர்ந்துள்ளது. முக்கியமாக, தாம் முன்னெடுத்துச் சென்ற யுத்தத்துக்குச் சார்பாக நின்று செயற்பட்ட தரப்புடன் அல்லாது, கடும் எதிர்ப்பைக் காட்டிச் செயற்பட்டுள்ள தரப்பொன்றுடன் இணைந்தே அவர் செயற்பட வேண்டி நேர்ந்துள்ளது. இந்தப் பொருந்தாத தன்மை தெளிவாகப் புலப்படும் நிலைப்பாடே நிலவுவதோடு, அது இக்கூட்டமைப்புக்கேயுரிய பலவீனமான இலட்சணமெனவும் கொள்ள முடிகிறது.

மேலும், ஜெனரல் சரத் பொன்சேகா முதிர்ந்ததொரு அரசியல் தலைவரல்ல. தேர்ச்சி பெற்றதொரு இராணுவத் தலைவரேயாவார். இராணுவத் தலைவரொருவரிடத்தில் அரசியல் தலைவரொருவருக்கு அமையாத சீரொழுக்கக் கட்டுக்கோப்பு அமைந்திருந்தாலும், அரசியலில் போன்றல்லாது யுத்தமொன்றில் முக்கியத்துவம் பெறுவது கட்டளைகளைப் பிறப்பித்தல் மற்றும் கட்டளைகளைப் பின்பற்றலேயாகும்.

**பிரான்ஸியப் புரட்சி**

மனித சுதந்திரத்தின் நவீனமயமான பெறுமதியை வெளிப்படுத்தி நின்ற புரட்சியாகவே பிரான்ஸியப் புரட்சி அடையாளப் படுத்தப்படுகிறது. பிரான்ஸில் அதுவரையிலும் நிலவிய முடியாட்சி நிர்வாகத்தை இல்லாதொழித்து ஜனநாயகவாத ஆட்சியை மலரச் செய்ய அப்புரட்சியின் மூலம் முடிந்திருந்தாலும் கூட, அப்புரட்சியின் மூலம் உருவான ஜனநாயகவாதக் கூட்டரசு ஆட்டம் கண்ட வேளையில், அதைப் பேணிக்காத்து முன் நகர்த்திச் செல்லும் பொறுப்பு நெப்போலியனிடம் கையளிக்கப்பட்டது. ஆனால், நெப்போலியனோ, அதுவரை நிலவிய ஜனநாயகவாத ஆட்சியைக் களைந்தெறிந்து, தானே பிரான்ஸின் ஏகாதிபதியாக முடிசூடிக் கொண்டதோடு மீளவும் சர்வாதிகார முடியாட்சி நிர்வாகத்தையே பிரான்ஸில் கொண்டு வந்தார்.

ஆனாலும், இரண்டாம் உலகப் போரின் பின்னர், பிரான்ஸில் ஐந்தாவது கூட்டாட்சி அரசை நிறுவிய சார்ள்ஸ் டிகோல் நெப்போலியன் வழியில் செல்லாது பிரான்ஸை ஜனநாயகவாத ராச்சியமாக அடையாளப் படுத்திவிடத் திறன் பெற்றிருந்தாலும் கூட, நெப்போலியன் கட்டமைத்த அரசமைப்பைப் போன்றே டிகோலின் நிர்வாகப் போக்கினுள்ளும் கூட

**தமிழில்: சரா**

ஏதோவொரு அளவு சர்வாதிகாரத்தின் இருண்ட நிழல் படர்ந்திருந்ததாகக் கூறமுடியும்.

எவ்வாறோ, ஜெனரல் சரத் பொன்சேகா அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வாரானால், முன்னுதாரணமாக நெப்போலியனின் வழியைப் பின்பற்றக்கூடுமா? அல்லது சார்ள்ஸ் டிகோலின் வழியைப் பின்பற்றக்கூடுமா? இவையிரண்டுமே இல்லாதவாறு மூன்றாவது மார்க்கமொன்றில் பயணிக்கக்கூடுமா? என்பது தெளிவற்றதாகவே உள்ளது.

ஜே.வி.பி. மற்றும் ஐ.தே.கட்சியென்ற இவையிரண்டுமே நேரடியாகவும் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் சுற்றிவளைத்தும் வெளிப்படுத்தி நிற்பது, வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமது பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா என்பதையே ஆகும். அவர் பதவியேற்று நூற்றியெண்பது தினங்களுக்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்துத் தமது 'பத்து அம்ச அரசியல் செயற்றிட்டத்தை' நடைமுறைப் படுத்த வேண்டியுள்ளதாகவும் ஐ.தே.கட்சி கைவிட்டிருந்தாலும் கூட தமது இனம் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு நியாயமானதும் நீடித்து நிலைத்து நிற்பதுமான தீர்வொன்றைக் கோரி நிற்கின்றனர். ஆனாலும், அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாகும் ஆக்கபூர்வமான தீர்வொன்றை முன்வைக்க இன்னமும் அரசு திறன்பெற்றிருக்கவில்லை.

யுத்த காலத்தில் மிகப்பெரும் சாதனை படைத்து அதன்மூலம் வீரபுரஷரென்ற பெயரைத் தட்டிக்கொண்ட பிரமுகராக ஜெனரல் சரத் பொன்சேகா திகழ்கின்றார். யுத்தத்தில் கிட்டிய கௌரவம் அந்த யுத்தம் உருவாக்கிய வீரபுரஷர்கள் மூவரிடையில் எவ்விதத்தில் பகிரப்பட வேண்டியுள்ளது என்பது குறித்துப் பல்வேறு கருத்துகள் வினவினாலும் கூட, அவர் யுத்தகளத்தில் வழங்கியுள்ள பங்களிப்பு மிக விசேடமானதாகும்.

ஜெனரல் சரத் பொன்சேகா களமிறங்கவுள்ளார் என்ற சலசலப்பு வரும் வரையிலும் எதிர்க்கட்சியினால் விடுக்கப்படும் கடும் சவாலொன்று இல்லாத தனிப்பயணத்தையே மஹிந்த அரசு மேற்கொண்டு வந்திருந்தது. ஆனால், ஜெனரல் சரத் பொன்சேகாவின் வருகையானது, அந்த நிலைப்பாட்டில் ஏதோவொரு மாற்றத்தை ஏற்படுத்திவிடக் காரணமாகியுள்ளதோடு, அதைச் சற்று ஆழமாக நோக்கும்போது, அதை நல்லதொரு நிலைப்பாடாக அன்றி தீயதொன்றாகக் கருத இயலாது. பலமிக்கதொரு அரசு, பலமிக்கதொரு எதிரணி அமைப்பினால் விடுக்கப்படும் சவால்கள் மற்றும் விமர்சனங்களுக்கு மத்தியிலேயே முன்னோக்கிப் பயணிக்க நேர்ந்துள்ளது.

இருந்தபோதிலும், தமது பார்வைக்கு



தெரிவிக்கிறது.

மேற்படி ஆய்வுக் கண்நோக்கு அமைந்த வேளையில் நாட்டில் யதார்த்தமாக நிலவியிருந்த நிலைப்பாடு பற்றிய ஆய்வையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டியுள்ளது.

அதாவது, இராணுவச் சேவையிலிருந்து விலகிச் செல்லாத நாடொன்றின் இராணுவ நிலையில் உயர்மட்டப் பதவியிலுள்ள ஜெனரல் சரத் பொன்சேகா அப்பதவியிலிருந்துகொண்டே அரசியலில் ஈடுபடுவது சிறப்பானதல்ல என்பதோடு, அத்தகைய இராணுவ அதிகாரியொருவருடன் அரசியல் கட்சிகள் அரசியல் அணுகல்கள் குறித்துப் பேசுவதும் முறையற்றதாகிறது.

அது ஒரு புறமிருக்க, தம்மைப்பற்றி அரசியல் களத்திலும் நாட்டிலும் பிரபலப்படுத்தப்பட்டு வரும் - அடிபட்டுவரும் விடயம் குறித்து தமது கருத்து வெளிப்பாடு எத்தகையது என்பதை அவர் இன்று வரையிலும் வெளிப்படுத்தவில்லை. எதிர்க்கட்சியின் பொது வேட்பாளராகப் போட்டியிடும் எண்ணம் அவருக்கிருக்குமானால் அவர் பதவியிலிருந்து விலகி அரசியல் களத்தில் இறங்கிச் செயற்படவேண்டியுள்ளது.

கூட்டுப்படையாளிகளின் தளகர்த்தா என்ற அவரது பதவி நிலை தொடர்பான புதிய சட்ட விதிகளுக்கு அமைய ஜனாதிபதியின் அனுமதியில்லாது அவர் தற்போது வகிக்கும்



பதவியிலிருந்து விலகுவதற்கு இடமில்லாததால் ஜெனரல் சரத் பொன் சேகாவுக்குப் பொது வேட்பாளராகப் போட்டியிடுவதற்குச் சட்ட ரீதியான தடையிருப்பதான கருத்தொன்றும் நாட்டில் நிலவுகிறது. இவை அர்த்தமற்ற வெறுமையான வாதங்களாக இருந்தாலும், அவருக்கு எதிர்க்கட்சியின் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அவசியமிருப்பின் எவ்வித தடையுமின்றி அந்த வாய்ப்பு அவருக்கு வழங்கப்படவேண்டியுள்ளது. இவையனைத்துக்கும் மேலாக அவர் ஜனாதிபதிக்கு எதிராகவே போட்டியிடவுள்ளார் என்பதும், அவ்வாறு தனக்கு எதிராகப் போட்டியிடும் பிரமுகரொருவரைத் தவிர்த்துவிடுவதற்கு ஜனாதிபதியானவர் ஏதோவொரு சட்டவலுவை ஆயுதமாகப் பயன்படுத்துவாரானால், தமது வெற்றி தொடர்பான ஆத்ம பலமுள்ள ஜனாதிபதியொருவராக அல்லாது தோல்வியுற்றதொரு ஜனாதிபதியாகவே மக்கள் அவரை நோக்கக் கூடுமென்பதும் இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. இவையும் கூட வெறும் வதந்திகள் மட்டுமேயாகும். இருந்தபோதிலும், ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு அந்த அவசியம் இருக்கும் பட்சத்தில் ஜனாதிபதி அதற்கு அவ்விதத்திலான தடையை ஏற்படுத்தக் கூடுமெனக் கருத இயலாது. ஆனாலும், ஜெனரல் சரத் பொன்சேகாவின் கடப்பாடு, எதிர்க்கட்சியின் பொது வேட்பாளராகத் தாம் முன்நிற்பதாயின் தமது பதவியிலிருந்து நீங்கித் தமது நிலைப்பாட்டை நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்துவதேயாகும்.

(14 ஆம் பக்கம் ...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி ஜெபநேசன் அடிகளாரின் 'இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமரிக்கமிஷன்' நூல் வெளியீட்டு விழா யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் கற்கைப் பிரிவு மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.பல்கலைக்கழக உத்தியோகத்தர் வேலுப் பிள்ளை கலாநிதி பேராயர் ஜெபநேசனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், கலாநிதி ஜெபநேசனி டமிருந்து யாழ்.பல்கலைக்கழக பதில் நூலகர் செல்வி என். அருளானந்தம் நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொள்வதை யும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் முதல் வரிசையிலும், இலங்கைத் திருச்சபையின் யாழ்.குருமுதல்வர் ஜெயக்குமார் அடிகள், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், தென்னிந்தியத் திருச்சபையின் குருமுதல்வர் ராஜ்குமார் அடிகளார் ஆகியோர் உரையாற்றுவதை கீழ்வரிசையில் உள்ள படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் இலங்கை வங்கி, வர்த்தக வங்கி என்பவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டி தொட ரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் சுது மலை யுவசக்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற வுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

மானிப்பாய் பெஸ்வுறம் வி.க. அணி எதிர் ஐங்கரன் வி.க அணி. (50-23)

## உதவிப்பணக் கொடுப்பனவு

வலி.மேற்கு,நவ.24

நலன்புரிக் கிராமங்களில் இருந்து சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேறியவர்களுள் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்று வந்த 66 பேருக்கான ஐப்பசி, கார்த்திகை; மார்கழி மாதங்களுக்குரிய பொதுசன உதவிப் பணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ளது.

அதன்படி இவர்கள் தமது கொடுப்பனவை டிசம்பர் 5 ஆம் திகதி தபாலகத்தில் பெற்றுக் கொள்ள்லாம் என சமூக சேவை உத்தியோகத்தர் திரு.வி.செல்வம் தெரிவித்துள்ளார். (04-112)

## சங்கானைப் பிரதேச செயலகத்தில் சமூகப் பாதுகாப்பு நிலையம்

வலி.மேற்கு,நவ.24

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் முதியவர்கள், விசேட தேவைக்குரியவர்கள் ஆகியோருக்கு இலகுவாகச் சேவை வழங்குவதற்கென சமூக பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையத்திற்கான கட்டடப் பணிகள் பூர்த்தியடையும் நிலையை எட்டியுள்ளன. இந்த வேலைத்திட்டம் நிறைவுற்றதும் முதியோர்கள், விசேட தேவைக்குரியவர்கள் தங்களுக்குரிய சேவைகளைச் சிரமமின்றி இலகுவாகச் சமூக பாதுகாப்பு நிலையத்தினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும். (04-112)

## பருவமழை காரணமாக வீதிகள் பலவும் சேதம்

யாழ்ப்பாணம், நவ.24

தற்போது பெய்துவரும் பருவமழையை அடுத்து குடாநாட்டின் பிரதான வீதிகள் மீண்டும் சேதமுற்ற நிலையில் காணப்படுகின்றன.

வீதிகளில் குழிகள் ஏற்பட்டு அதற்குள் மழை வெள்ளம் தேங்குவதால் வீதியூடாகப் பயணம் செய்யும் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர். அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்ட அனேகமான வீதிகள் தற்போது பெய்யத் தொடங்கியுள்ள பருவமழையால் சேதமுற்றுக் காணப்படுகின்றன.

இதேவேளை வீதிகளை உடனுக்குடன் தார் ஊற்றி புனரமைப்பதில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் ஈடுபட்டு வருகின்றனர். (04-224)

## சுயதொழில் கொடுப்பனவு

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் ஊனமுற்ற 24பேருக்கு வடக்கு மாகாண சமூக சேவை திணைக்களத்தினால் 50ஆயிரம் ரூபா வீதமும் மாதாந்த உதவிப் பணம் பெறும் 26 பேருக்கு 15 ஆயிரம் ரூபா வீதமும் சுயதொழில் மேற்கொள்வதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறும் சுயதொழிலாளர்களின் முன்னேற்றத்தின் அடிப்படையில் ஆறு மாதத்திற்குப்பின் அவர்களது பொதுசன மாதாந்த உதவிப்பணம் நிறுத்தப்படும் எனவும் மேலும் பொதுசன உதவிப்பணம் பெறும் பதினாறுபேருக்கு சுயதொழில்கொடுப்பனவை பெறுவதற்கான விண்ணப்பங்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கும் விரைவில் சுயதொழில் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் சங்கானைப் பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் வி.செல்வம் தெரிவித்துள்ளார். (04-112)

**தவறிவிட்டது**

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் தெற்கு என்னும் முகவரியுடைய அருணாசலம் - சிவஞானம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.582610436 V) கவருடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே.:0213001601 (61370)

## நன்றியுடன் பாராட்டுகின்றோம்



கடந்த 2000ஆம் ஆண்டில் இருந்து கொழும்புத்துறை ஐயனார் கோயில் பிரதேசம் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

ஆலய நிர்வாக சபையின் கோரிக்கையினை ஏற்று பாதுகாப்பு வலயத்தைத் தளர்த்தி 15.11.2009 அன்று சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்து ஆலய வழிபாட்டிற்கு வழிசமைத்த யாழ்.மாநகர உதவி **மேயர் றீகன்** மற்றும் **வெலிந்** தோழனுக்கும் அத்துடன் மக்கள் சேவையை மகேசன் சேவையென்று சேவை புரிகின்ற சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ **கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும் கொழும்புத்துறை வாழ்மக்கள் சார்பாகவும், ஆலய நிர்வாக சபையினர் சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**கொழும்புத்துறை வாழ்மக்கள்.**

(சி/562661)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் **விசாலாட்சி கனகசபை**

மலர்வு: 02.10.1930

உதிர்வு: 26.10.2009

கடந்த 26.10.2009 அன்று சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடிவந்து ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர்க்கும், அனுதாபச் செய்தியைத் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, நாளை (25.11.2009) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வடலித் தோட்டம், மானிப்பாய் வடக்கு, மானிப்பாய். **குடும்பத்தினர்.**


**சுடர் ஒளி** THE SUDAROLI வாரமலர்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

(நவ.22 - நவ.28)

இன்று விற்பனையில்



- தமிழ்க் கட்சிகளின் இணைவு சவால்களும் எதிர்காலமும்?
- மாவீரர் நாளில் என்ன நடக்கப்போகின்றது?
- தலைவிதியை நிர்ணயிப்பவர் யார்?
- உயிர் வலிக்கும் கணங்கள் ...... (தொடர்ச்சி)
  - இரத்த வெள்ளத்தில் தோய்க்கப்பட்ட குழந்தைகள்!
- சிறையில் நடந்த அடிதடி!
- மாவோ கிளர்ச்சியாளர்களை தூண்டிவரும் சீனா!
- மெல்லமெல்லக் கட்டவிழும் உள்வீட்டு இரகசியங்கள்
- சிறுகதை, சினிமா, கலைப்பூங்கா, இளஞ்சுடர், பித்தன் பதில்கள் மற்றும் பல்சுவை அம்சங்கள்

இன்று விற்பனையில்

உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்


## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 07 ★ 10 ★ 1948



மறைவு 24 ★ 11 ★ 2003

**திருமதி எட்வேட் நிர்மலா (ராணி)**

ஆண்டுகள் ஆறு மறைந்தாலும் ஆறுமோ எம் இதயம்?
குடும்பத்தின் குல விளக்காய் பாசத்தின் திருவுருவாய்
திகழ்ந்த தாயே!

உங்கள் நினைவலைகளில் நிற்கின்றோம் நாம் எல்லாம்
உங்கள் ஆத்மா இளைப்பாற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

'அன்னம்ஸ்', சங்கானை.

**ஞா.எட்வேட் குடும்பத்தினர்.**

(சி/562279)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆவண நூலாகத் தயாராகிறது ஈழத் தமிழினப் படுகொலை!

சென்னை, நவ.24

ஈழத் தமிழர்கள் மீது 1956ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டு மே மாதம் வரையில், இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் தகவல் தரவுகள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்ட 'தமிழினப் படுகொலைகள்' என்ற ஆவண நூல் மிகவிரைவில் வெளிவரவுள்ளது என இணையத்தளத்தில் செய்தி வெளியாகியுள்ளது.

இதுகுறித்து அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

கிளிநொச்சியை மையமாகக் கொண்டு இயங்கி வந்த 'வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம்' தன்னிச்சையாகவும், சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்களுடன் இணைந்தும் இத்தகவல் தரவுகளை சேகரித்து ஆவணமாக்கியுள்ளது.

ஈழத்தமிழர் மீதான படுகொலைகளில் மிக மோசமான படுகொலைகளின் தொடக்கமான 1956ஆம் ஆண்டு இங்கினியாகலைப் படுகொலையிலிருந்து 2008ஆம் ஆண்டு இறுதிவரை சேகரிக்கப்பட்ட விவரங்கள் இந்நூலில் பதிவாக்கப்பட்டுள்ளன.

மேலும் இந்நூலில் இறந்தவர்கள் யார், காயமடைந்தவர்களின் பெயர்கள், எந்த ஊரைச் சேர்ந்தவர்கள், 14 வயதுக்கு கீழுள்ள குழந்தைகள் எத்தனை பேர், படுகொலை நடந்த இடம், திகதி ஆகியவற்றுடன் படுகொலை நிகழ்ந்த இடங்களின் வரை படங்களும், படுகொலையில் சிக்குண்டவர்களின் ஒளிப்படங்களும் முடிந்தவரை பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆவணப்புத்தகத்திற்கான முன்னுரையை அமெரிக்காவில் ஈழத்தமிழர்களின் மனித உரிமை மற்றும் விடுதலைக்காகச் செயற்படும் திருமதி.எலின் சாடார் எழுதவுள்ளார். புத்தகத்தின் அட்டை வடிவமைப்பை ஈழத்து ஓவியர் நந்தா கந்தசாமி மேற்கொள்கிறார்.

இந்நூல், தமிழ், ஆங்கிலம், பிரன்ஞ், ஜேர்மன், சிங்களம் மற்றும் ஹிந்தி ஆகிய ஆறு மொழிகளில் வெளிவர உள்ளது.

வடகிழக்கு மனித உரிமைகள் செயலகத்திடமிருந்து உரிமம் பெற்றுள்ள 'மனிதம்' அமைப்பு மற்றும் சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம் ஆகியன இணைந்து இந்நூலை வெளியிடுகின்றன. (சி)

# வன்னி அகதிகளுக்கு நடமாட்ட சுதந்திரம் பாராட்டுக்குரியது என்கிறது பிரிட்டன்

கொழும்பு, நவ. 24

வவுனியா இடம்பெயர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் சுதந்திரமாக இடம் நகர முடியும் என இலங்கை அரசு அறிவித்துள்ளமை திருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளதென பிரித்தானிய சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் மைக் பொஸ்டர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் வவுனி யா இடம்பெயர் முகாம் மக்கள் சுதந்திரமாக இடம் நகர முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இடம்பெயர் முகாம்கள் பாரிய நன்மைகளை அடைவார்கள்.

யதார்த்தமான இடம் நகரும் சுதந்திரம் மூலம் மக்கள் எங்கு செல்ல வேண்டுமென தாங்களாகவே தீர்மானிப்பார்கள்.

மீள்குடியேற்றப்பட்ட கிராமங்களில் நிவாரணங்களை வழங்குவதற்கு சர்வதேச நிறுவனங்களுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

நிலக்கண்ணி வெடிகளை அகற்றி மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகளுக்கு பிரிட்டன் அரசு பூரண ஆதரவளிக்கும் - என்றார்.

இடம்பெயர் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு மேலதிக நிதி உதவிகளை வழங்க முடியும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

இடம்பெயர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை மீள் குடியேற்றுவதற்கு அரசு முன்னுரிமை அளிக்க வேண்டுமெனவும் பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது. (சி)

# உள்ளூர் விமான சேவைக்கு புதிதாக ஆறு விமானங்கள்

கொழும்பு, நவ.24

மஹிந்த சிந்தனை அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்ப உள்ளூர் விமான சேவையின் மேம்பாடு கருதி 6 புதிய சிறிய விமானங்கள் விரைவில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சுமார் 50 பேர் பயணம் செய்யக்கூடிய எம்.ஏ - 60 என்ற இந்த சிறியரக விமானங்களைக் கொள்வனவு செய்ய 10 கோடி 50 லட்சம் அமெரிக்க டொலர் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவுவதால் விமானப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

சீன அரசு 5 வருடங்களில் திரும்பிச் செலுத்தக் கூடிய வகையில் கடனுதவியாக இந்த விமானங்களை வழங்க முன்வந்துள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (சி)

# முன்னாள் போராளிகள் சித்திரவதைக்கு உட்படுத்தக்கூடிய அபாயம் நிலவுகிறது

## சர்வதேச மன்னிப்புச் சபை

கொழும்பு, நவ.24

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் சித்திரவதைக்கு உட்படுத்தப்படக்கூடிய அபாயம் நிலவுகிறது என சர்வதேச மன்னிப்புச் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிறுவர் போராளிகள் உள்ளிட்ட பெருந்தொகையான விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் தற்போது படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் குறைந்தபட்சம் 12 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த உறுப்பினர்கள் தனிமைப்படுத்தப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் எனக் குறிப்பிடப்படுகிறது.

விடுதலைப் புலி சந்தேக நபர்களை விசாரணை செய்யும் பொறிமுறையில் வெளிப்படைத் தன்மையில்லை என சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னாள் போராளிகள் தொடர்பான விசாரணை நடவடிக்கைகளின்போது சர்வதேச சட்ட திட்டங்கள் பின்பற்றப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (சி)

# ஓமந்தை - பளை இடையே ரயில் பாதை அமைக்கும் பணி இந்திய நிறுவனத்திடம்

கொழும்பு, நவ.24

ஓமந்தையிலிருந்து பளை வரையான 96 கிலோமீற்றர் ரயில் பாதையை நிர்மாணிப்பதற்கு இலங்கை ரயில்வேத் திணைக்களம், இந்திய நிறுவனமொன்றுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் சட்டத் தன்மையை ஆராய்வதற்கென, ஒப்பந்தம் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என ரயில்வேத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் பீ.பீ.வி.ஜேசேகர குறிப்பிட்டார்.

ஒப்பந்தம் கைச்சாத்தானதும் இரண்டரை வருடங்களுக்குள் இப்பாதை நிர்மாணப் பணிகள் பூர்த்தியடையுமெனவும் அவர் கூறினார்.

இதேவேளை, காங்கேசன்துறையிலிருந்து பளை வரையிலான ரயில்வேப் பாதையை நிர்மாணிக்க சீன நிறுவனமொன்று முன்வந்துள்ளதென பொது முகாமையாளர் குறிப்பிட்டார்.

10 கிலோமீற்றர் நீளமான தாண்டிக்குளம் - ஓமந்தை ரயில் பாதையை அமைப்பதற்கு ஏதுவாக இராணுவத்தினர் கண்ணி வெடிகளை அகற்றியுள்ளனர். இதனையடுத்து 7 கிலோ மீற்றர் தூரத்துக்கு ரயில் பாதைக்கான மண் நிரப்பப்பட்டு கற்களும் பரவப்பட்டுள்ளன என முகாமையாளர் குறிப்பிட்டார். (சி)

# பொது வேட்பாளராக சரத் பொன்சேகா நிறுத்தப்பட்டால் பதவி விலக நேரிடும்

## எஸ்.பி.திஸாநாயக்க எச்சரிக்கை

கொழும்பு, நவ.24

எதிர்க்கட்சிகளின் பொதுவான வேட்பாளராக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டால் பதவி விலக நேரிடும் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸாநாயக்க உள்ளிட்ட சில கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஜெனரல் பொன்சேகாவை பொதுவேட்பாளராக நியமிப்பதன் மூலம் தேவையில்லாத பிரச்சினைகள் உருவாகக்கூடும். இவ்வாறானதோர் பின்னணியில் தாம் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க நேரிடும் அல்லது அரசியலிலிருந்து ஓய்வு பெற நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ ஆட்சியாளர்களால் ஆட்சி முன்னெடுக்கப்படும் நாடுகளில் எவ்வாறானதோர் நிலைமை காணப்படுகின்றது என்பதனை தனியாக விளக்க வேண்டிய அவசியமில்லை' மக்கள் அமைதியாகவும் சமாதானமாகவும் வாழ வேண்டியது மிகவும் அவசியம். எனவே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முனைப்புக்களில் தீவிரம் காட்டப்பட வேண்டும் என்றும் -

ஜெனரல் சரத் பொன்சேகாவின் தலைமைத்துவம் நாட்டின் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலாக அமையக் கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரபல ஆங்கில வார இதழொன்றுக்கு எஸ்.பி.திஸாநாயக்கவின் நெருங்கிய நாடாளுமன்ற நண்பர் ஒருவர் இந்தத் தகவல்களை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# கெக்கிராவையில் இராணுவ நகரம்: திறந்துவைத்தார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு,நவ.24

இராணுவத்தினருக்காக 'நமக்காக நாம்' எனும் நிதியத்தின் முலம் கெக்கிராவை, இப்பாலோகம பகுதியில் அமைக்கப்பட்ட ரணஜய விரு இராணுவ நகரத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் திறந்து வைத்தார்.

இவ் வீடமைப்புத் திட்டத்தின் முலம் 200 ஏக்கர் நிலப்பரப்பில் 1,509 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் 767 வீடுகள் இராணுவத்தினருக்கும் 742 வீடுகள் விமானப் படையினருக்கும் என பிரித்து கொடுக்கப்பட்டுள்ளன.

இங்கு குடிநீர், போக்குவரத்து தொலைத்தொடர்பு என அனைத்து தொழில் நுட்பத்துடனும் கூடிய வைத்தியசாலை, ஆரம்பப் பாடசாலை, சந்தை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இவ்வீடமைப்புத் திட்டத்தைத் திறந்து வைத்த ஜனாதிபதி உள்ளிட்டோர் குழு வீடுகள் ஒவ்வொன்றிற்கும் சென்று சிற்றுண்டி வைபவங்களில் கலந்து கொண்டனர்.

இங்கு அமைக்கப்பட்டிருந்த பாடசாலை குழந்தைகள் பராமரிப்பு நிலையம் போன்றவற்றை ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ திறந்துவைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மும்மதத் தலைவர்களின் சம அனுஸ்டானங்களுடன் ஆரம்பமான இந் நிகழ்வில் ஜனாதிபதியுடன் அவரது பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, வட மத்திய மாகாண பேர்டி பிரேமலால் உட்பட இராணுவ முப்படைத் தளபதிகள் கலந்து கொண்டனர். (சி)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான மதிப்பளித்தல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள் பான்ட் வாத்திய அணி வகுப்புடன் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மேலதிக மாகாணக் கல்வி அலுவலகத்தின் பிரதம பொறியியலாளர் கு.சிவபாலன் சாதனை மாணவி ஒருவருக்கு தங்கப் பதக்கம் அணிவிப்பதை முதல் இரு படங்களிலும் சிறப்பு விருந்தினரான மக்கள் வங்கி பிரதிப் பொது முகாமையாளர் எஸ்.தர்மரட்ணம் மாணவி ஒருவருக்கு பணப் பரிசில் வழங்குவதையும், திருமதி வசந்தமாலா சிவபாலன் புலமைப் பரிசில் மாணவர்களின் பயிற்சி ஆசிரியை திருமதி சுமதி மகேஸ்வரனுக்கு உருவம் பதித்த நினைவுப் பரிசில் வழங்குவதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகவான் சத்தியசாயி பாபாவின் 84 ஆவது அவதார தின நிகழ்வுகள் நேற்று குடாநாட்டின் பல இடங்களிலும் சிறப்பாக நடைபெற்றன. கொக்குவில் சத்யசாயி சேவா நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பகவான் சத்யசாயி பாபாவின் திருவுருப்படத்துக்கு தீபாராதனை நடைபெறுவதை முதலாவது படத்திலும், பஜனை இடம்பெறுவதையும் பால விகாஸ் சிறுமிகளின் வரவேற்பு நடனத்தையும் நிலையத்தின் முன்னாள் தலைவர் வி.கே. இராஜலிங்கம் பாலவிகாஸ் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் அடுத்துள்ளபடங்களில் காணலாம். (படங்கள்:இதயராஜ்)

# நிவாரணப் பொருள்களை நுகர்வோர் சரிபார்த்துப் பெற்றுக்கொள்ள வேண்டும்

## கூட்டுறவு உதவி ஆணையாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.24

ப.நோ.கூ. சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டுவரும் நிவாரணப் பொருள்களை நுகர்வோர் சரிபார்த்துப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

சங்கக் கிளைகளில் நிவாரணப் பொருள்களைப் பெற்றுக்கொள்வோர் அவற்றின் தரம், நிறை போன்றவற்றை அங்கேயே சரிபார்த்து உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

அதனைவிட சங்கங்களும் நிவாரணத்திற்குத் தரமான பொருள்களையே விநியோகிக்க வேண்டும் - என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஒ-50-224)

# படையினருக்கு நிதி சேகரிப்பதாகக் கூறி குடாநாட்டில் விஷமிகள் கைவரிசை

## ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு எச்சரிக்கை

குருநகர், நவ. 24

யாழ். குடாநாட்டில் சில பகுதிகளில் விஷமிகள் உயிர்நீத்த படையினருக்கு நிதி சேகரிப்பதற்காகக் கூறி பொதுமக்களிடம் பணம் கோரிவருவதாகக் கூறப்படுகிறது.

சிங்கள மொழியில் பேசி பொதுமக்களைப் பயன்முறுத்தும் பாணியில் பலவந்தமாக இவர்கள் நிதி சேகரித்து வருவதாகத் தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக படைத்தரப்பினர் கூறியுள்ளனர்.

குறிப்பாக யாழ். நகரை அண்டிய கரையோரப் பகுதிகளில் கடந்த சில தினங்களில் விஷமிகள் தங்கள் கைவரிசையைக் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோசடி குறித்து மக்களை உஷாராக இருக்கும்படியும் இவ்வாறானவர்களின் நடமாட்டம் இருப்பின் தமக்குத் தகவல் தருமாறும்படையினர் கடந்த ஞாயிற்று இரவு குருநகர்ப் பகுதியில் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துள்ளனர்.

குருநகர்,பாஷையூர், கொழும்புத்துறை படை முகாம் பொறுப்பதிகாரிகள் மற்றும் யாழ். நகர படைத்தலைமையகத்துக்கும் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தால் உடன் நடவடிக்கை எடுக்கமுடியும் என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப் பட்டது. (ஒ-51)

# உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்கியிருக்க பொன்சேகாவுக்கு அரசு மீண்டும் அனுமதி

## சமயத் தலைவர்கள், பொதுமக்களின் அழுத்தம் காரணமாக

கொழும்பு, நவ. 24

ஜெனரல் சரத் பொன்சேகாவை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து உடனடியாக வெளியேறுமாறு உத்தரவிட்ட அரசு பொதுமக்களினதும், சமயத் தலைவர்களினதும் அழுத்தங்களைத் தொடர்ந்து அந்த உத்தரவை வாபஸ் பெற்று இன்னும் சிறிது காலத்திற்கு அந்த இல்லத்தில் தங்கியிருப்பதற்கு பொன்சேகாவுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளதாக ஐ.தே.கட்சி எம்.பி. ஜயலத் ஜயவர்தன நேற்று கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊட கவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

சரத் பொன்சேகா அவரது பதவியை இராஜிநாமாச் செய்ததைத் தொடர்ந்து அவர் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்று அரசு உத்தரவிட்டது.

அந்த உத்தரவை அரசில் உள்ள சிலர் நியாயப்படுத்தினர். சட்டப்படி தனது பதவியை இராஜநாமாச் செய்த ஓர் அதிகாரி இராஜிநாமாச் செய்தது முதல் மூன்று மாதங்களுக்கு உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்கியிருக்கலாம்.

ஆனால், அரசு அவரை உடனடியாக வெளியேறுமாறு உத்தரவிட்டது. ஆனால், அந்த உத்தரவை வாபஸ் பெறுமாறு மக்களும், மதகுருமார்களும் அரசுக்கு அழுத்தங்கொடுத்தனர்.

அந்த அழுத்தத்தைத் தொடர்ந்து சரத் பொன்சேகா இன்னும் சிறிது காலத்திற்கு அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்கியிருக்கலாம் என்று ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டுக்காகப் பாடுபட்ட இராணுவச் சிப்பாய்களை இந்த அரசு கௌரவப்படுத்தும் விதம் இதுதான். யுத்தத்தில் ஊனமுற்ற படையினருக்கு அரசு எதுவித கொடுப்பனவுகளையும் வழங்கவில்லை. அதேபோல் மரணமடைந்த படையினரின் குடும்பங்களுக்கும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் எவற்றையும் அரசு வழங்கவில்லை. (ஒ-சி)

# காவலரனுடன் மோதியது பஸ்

யாழ்ப்பாணம்,நவ.24

ஏ-9 வீதியில் ஒன்றையொன்று முந்திச் செல்ல போட்டி போட்டு ஓடிய பேரூந்து படையினரின் காவலரனுடன் மோதியது. பேரூந்தில் பயணித்த பயணிகள் மயிழையில் உயிர் தப்பினர்.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை கைதடி பாலத்துக்கு அருகில் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

# அநுராதபுரத்தில் சூடு ஆறுபேர் காயம்!

அநுராதபுரம் தஹயாகம பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் 6 பேர் காயமடைந்துள்ளனர்

இரு கோஷ்டிகளுக்கிடையிலான மோதலின்போது இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஒ-சி)

# இடம்தேடி அலையும் ஈழத்தமிழர் விடயத்தில் நடவடிக்கை எடுக்கச் சர்வதேசம் தவறிவிட்டது

## சர்வதேச மன்னிப்புச்சபை குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 24

பாதுகாப்பான இடம் தேடி அலையும் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் சர்வதேச சமூகம் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டது என சர்வதேச மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

அல்-ஜசீரா தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியில் இதனை தெரிவித்துள்ள மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ஜரிக்கன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்பான இடம் தேடி அலைகிறார்கள். இந்த விடயத்தில் சர்வதேச சமூகம் அவர்களுக்கு சிறிதளவும் உதவவில்லை.

அகதிகளின் பாதுகாப்பு என்பது பலவீனமாக உள்ளது. இதன் காரணமாக அந்த மக்கள் தங்களுக்குப் பாதுகாப்பான இடத்தை தேடிச் செல்கிறார்கள்; அலைகிறார்கள்.

எல்லைகள் மூடப்படும்போது, அடைக்கலம் கோருபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பாரிய மனிதாபிமான நெருக்கடி உருவாகும்.

இந்த மக்கள், ஆபத்தான படகுகளில் தமது உயிர்களை பணயம் வைத்து - பாதுகாப்பான இடம் தேடி பயணிக்கின்றனர். அவர்களைக் கடலில் காப்பாற்றா விட்டால் பல படகுகள் கவிழ்ந்திருக்கும்.

அதேவேளை, நடுக்கடலில் காப்பாற்றப்பட்டவர்களும் நிச்சயமற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

ஆஸ்திரேலிய அகதிகளுக்கு அடைக்கலம் வழங்கும் நடைமுறைகளைத் துரிதப்படுத்த வேண்டும். அதிகளவானவர்களுக்கு அடைக்கலம் வழங்கவேண்டும்.

அகதிகள், அடைக்கலம் கோருபவர்கள் தொடர்பாக எதிர்மறையான பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படுவதால் அச்சம் காணப்படுகின்றது.

இவர்கள் பொருளாதார நோக்கத்துடன் வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. உண்மையில் இவர்கள் தங்கள் உயிர்களைக் காப்பாற்ற தப்பி வெளியேறியவர்களாவர்.

அகதிகள், அடைக்கலம் கோருபவர்களை நோக்கும் விதத்தை அரசியல் தலைவர்களும், அரசுகளும் மாற்றிக்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளனர். (ஒ-சி)

# கிறிஸ்மஸ் தீவு மோதலில் ஈடுபட்டோரின் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்படும்?

கொழும்பு,நவ. 24

கிறிஸ்மஸ் தீவுகளின் தடுப்பு முகாம்களில் மோதலில் ஈடுபட்டவர்களின் அகதி அந்தஸ்து கோரிக்கை நிராகரிக்கப்படலாம் என அவுஸ்திரேலியா எச்சரித்துள்ளது.

ஆப்கான்- இலங்கை அகதிகளுக்கிடையில் இடம்பெற்ற மோதல்கள் குறித்து அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கையிலேயே பிரதமர் கெவின் ரூட் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் 43 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களுக்கு மருந்துவ சிகிச்சை தேவைப்படுகின்றது என தெரிவித்துள்ள பிரதமர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்மஸ்தீவின் தடுப்பு முகாமைச் சேர்ந்த ஐந்து பணியாளர்களும் சிறு காயங்களுக்குள்ளாகினர்.

மிகக் கடுமையாக குற்றச்செயல் இடம் பெற்றுள்ளது. இவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்குவதா என்பது குறித்து ஆராயும்போது இதனையும் கருத்தில் கொள்வோம் என பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த மோதல் சம்பவத்தைத் தொடர்ந்து இலங்கை, ஆப்கான் அகதிகள் தனியாகப் பிரிக்கப்பட்டு வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இரு நாடுகளைச் சேர்ந்த அகதிகளும் தனித் தனியாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிட்டுள்ள செனட்டர் இவான்ஸ் கடந்த சில நாள்களாகவே இலங்கை அகதிகள் மத்தியில் பதற்ற நிலைமை காணப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அகதிகளில் சிலர் தாம் மீண்டும் தமது நாட்டிற்குத் திரும்பி அனுப்பப்படலாம் என குழப்பமடைந்திருந்தனர். ஓர் இடத்தில் பலர் இருக்கும் போது சிறிய விவாதமும் மோதலாக [illegible] இவான்ஸ் [illegible]

# இந்தோனேஷிய கப்பலில் தங்கியுள்ள ஈழ அகதிகள் பலர் நோயால் பாதிப்பு

ஜகார்த்தா, நவ.24

இந்தோனேஷியாவின் மெராக் கடற்பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளுக்கிடையில் வயிற்றுளைவு நோய்கள் அதிகமாகப் பரவி வருகின்றன எனத்தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக கடந்த வார இறுதியில் பெரும்பாலானோர் வைத்தியசாலைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

இந்தோனேஷியாவில் தரையிறங்கப் போவதில்லை எனக் கூறி சுமார் ஒரு மாதத்துக்கு மேல் 250 இலங்கை அகதிகள் குறித்த படகில் தங்கியுள்ளனர். அந்தப் படகு தரித்து நிற்கும் கடற்பகுதியில் மழை பெய்து கொண்டிருக்கிறது. இதனாலேயே நோய்ப்பரவல் இடம்பெற்றதாக இந்தோனேஷிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் இந்தோனேஷிய சுகாதார அதிகாரிகளும், ஆஸ்திரேலிய அதிகாரி ஒருவரும் தொலைபேசி யினூடாகப் படகில் உள்ள மக்களுக்கு சுகாதார அறிவுரைகளை வழங்கியுள்ளனர்.

சிறுவர்கள் உட்பட 60 பேர் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர்களின் பேச்சாளர் அலெக்ஸ் குறிப்பிட்டார். நோயாளிகளுக்குப் படகில் மருத்துவ வசதிகள் எவையுமில்லை என அவர் குறிப்பிட்டார்.





சில சமயங்களில் இந்தோனேஷிய கடற்படையினர் வந்து சோதனையிடும் போது அவர்களுடன் நோயுற்றவர்கள் அனுப்பப்படுகின்றனர் எனவும் கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞானம் I - தொடர்ச்சி.....

32. எதற்கென இப்பரிசோதனை அமைப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
    1) இலைகளில் மாப்பொருள் உற்பத்தியாகும்போது பக்க விளைவாக ஒட்சிசன் வெளிவருகிறது என்பதை அறிவதற்காக.
    2) நீர்த்தாவரங்கள் ஒளித்தொகுப்பு என்பதனை அறிவதற்காக.
    3) ஒளித்தொகுப்பு வீதத்தை அளவிடுவதற்காக.
    4) இலைகள் நீரினுள் உள்ள போதுதானா ஒளித்தொகுப்பை நடத்தும் என அறிவதற்காக.

33. மின்சுற்றொன்றிலே வோல்ற்றுமானியும் அம்பியர்மானியும் சரியான முறையில் இணைக்கப்பட்டுள்ள விதம் கீழ்வரும் எப்படத்தில் காட்டப்படுகிறது.

1)

2)

3)

4)


34. காற்று விலங்குகள் நீர், வெடித்தல் பொறிமுறை ஆகிய செயன்முறைகள் மூலம் பரவும் வித்துக்கள் முறையே,
    1) கடல் மாங்காய், துத்ததிரி, தாமரை, காசித்தும்பை.
    2) எருக்கலை, மா, தென்னை, இறப்பர்.
    3) எண்ணெய், ஜம்பு, சேம்பு, பயறு.
    4) அச்சி,பலா, அவரை, கடுகு.

35. கீழ்வரும் இரசாயச் சமன்பாடுகளில் திணிவு மாறா விதிக்கு அமையாதது,
    1) $Fe_2O_3 + 3CO \rightarrow 2Fe + 3CO_2$
    2) $CaO + SiO2 \rightarrow Ca\,S + O3$
    3) $CaCO3 \rightarrow CaO + CO2$
    4) $H2 + O2 \rightarrow H_2O$

36. சமப்படுத்தப்பட்ட இரசாயனச் சமன்பாடொன்றிலிருந்து அறிந்துகொள்ள முடியாத காரணி,
    1) இரசாயனச் தாக்கத்திலீடுபடும் தாக்கிகள்.
    2) இரசாயனச் தாக்கதின் விளைபொருட்கள்.
    3) இரசாயனத் தாக்கத்தின் தாக்க வீதம்.
    4) இரசாயனத் தாக்கத்திலீடுபட்ட மூலக்கூறுகளின் எண்ணிக்கை.

37. 20Ω எனில் அக்குமிழ் 5 நிமிடங்களில் எவ்வளவு வெப்ப சக்தியை வெளியேற்றும்,
    1) $1.5 \times 20 \times 5$
    2) $1.5^2 \times 20 \times 5$
    3) $1.5 \times 20 \times 300$
    4) $1.5^2 \times 20 \times 300$

38. படத்தில் காட்டப்பட்டிருப்பது எவ்வகைக் கலமாகும்?
    1) மழமழப்பான தசை.
    2) வன்கூட்டுத் தசை.
    3) இதயத் தசை.
    4) வரிகொண்ட தசை.



39. குறுக்கிடை முடி போன்றவற்றால் இனப்பெருக்கம் செய்யும் ஒரு தாவரம்,
    1) அன்னாசி.
    2) இஞ்சி.
    3) வெங்காயம்.
    4) உருளைக்கிழங்கு.

40. புவின் பிரதான பாகம் அல்லாதது,
    1) அல்லி. 2) குறி. 3) தம்பம். 4) கலகம்.

## தமிழ்மொழியும் இலக்கியமும் - II — 22-T-II

01. பின்வரும் வினாக்களுக்குச் சரியானதும் மிகப் பொருத்தமானதுமான குறு விடைகளைத் தருக.
    01) ஆண்களும் பெண்களும் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். மேற்படி தொடர் வாக்கியத்தை ஆக்கப்பயன்பட்ட உத்திகள் எவை?
    02) உயிர் மெய் குரைகடல் என்பன எவ்வகைத் தொகைகள்?
    03) ''பிறைநுதல்'', கயற்கண் என்னும் ஆமினா என்பதில் பிறைநுதல், கயற்கண் என்னும் தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக.
    04) கையெழுத்துப் போடத் தெரிஞ்சால் போதும் மோனே - இதில் பேச்சு வழக்குச் சொற்களை எழுதி, எழுத்து வழக்கிலும் எழுதுக.
    05) தொகா நிலைத்தொடரின் பண்புகள் இரண்டு எழுதுக.
    06) மற்றொன்று, கடி நகர் என்பன எவ்வகைத் தொடர்கள்?
    07) மழை விழுந்ததும் விதைப்போம், களவெடுத்தாலும் பொய் சொல்லாதே என்பவற்றில் உம் இடைச்சொல் எவ்வெப்பொருள்களில் வந்துள்ளது?
    08) பெயரெச்சம், வினையெச்சம் என்பவற்றுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.
    09) ஒரு பகுபதத்தில் இடம்பெறும் மிகக்குறைந்த உறுப்புக்கள் எத்தனை?அவை எவை?
    10) வற்றல் உண்டான், இலங்கை வென்றது என்பவற்றில் இடம்பெற்ற ஆகு பெயர் வகைகளை எழுதுக.

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களுக்கு குறையாது எழுதுக.
    அ. ''நீர் ஓர் அரிய வளம்'' அதனை நாம் விரயம் செய்தலாகாது என்பது பற்றி உமது கருத்து வெளிப்பாடு?
    ஆ. பல இனத்தவர்களையும் மதங்களையும் கொண்ட ஒரு நாடு அபிவிருத்தியடைய வேண்டுமாயின் இன ஐக்கியமும் சமாதானமும் இன்றியமையாதனவாகும் என்ற கருத்தினை விளக்கி நீர் நிகழ்த்தும் ஒரு சொற்பொழிவு.
    இ. நீர் பார்த்து ரசித்த திரைப்படம் ஒன்றின் கதையம்சம், பாடல்கள், ஒளி, ஒலி அமைப்பு, பாத்திரப்படைப்பு என்பன பற்றிய விமர்சனம்.
    ஈ. முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும் என்பதை விளக்கப் பொருத்தமான ஒரு கற்பனைச் சிறுகதை.

03. பின்வரும் உரைப்பகுதியை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக. நீங்கள் பயன்படுத்திய சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

அவர் பத்திரிகாசிரியராக இருந்து பத்திரிகைகளில் கையாண்ட நடை வேறு. இலக்கியங்களைச் சிருட்டித்தபோது கையாண்ட நடை வேறு. பத்திரிகைகளில் எழுதியவை அப்பத்திரிகையை படிப்போர் பொருளறிதற்கென எழுந்தவையாதலின் அவற்றின் கண் கையாண்ட நடை வழக்கிலிருந்த சாதாரண நடையாகும். அவர் காலத்தில் வடமொழிச் சொற்களை அமைத்து எழுதும் வழக்கு நன்கு பரவியிருந்தமையாலும், மக்கள் அந்நடையினை விரும்பிப் படித்தமையாலும் அவர் மட்டுமின்றி ஏனைய எழுத்தாளர்களும் நாவலாசிரியர்களும் அந்நடையினைப் போற்றி வந்தனர். அந்நடை வகை தவிர பழைய செந்தமிழ் நடையைத் தழுவி அவர் எழுதிய கட்டுரைகளும் சில உள. அந்நடை வகையிலே அவரது சொல்லாற்றலைச் செவ்வையாகக் காட்டல் முடியாது. அவர் கற்பனைச் சித்திரங்களை உருவாக்கியபோது கையாண்ட நடையிலேதான் புதுமையும் ஜீவகளையும் மிளிரக் காண்கிறோம். அதனைச் செய்யுட் பண்பு வாய்ந்த நடையெனக் கூறலாம். அவர் கண்ட கற்பனைக் காட்சிகளை எம் கண்முன்னே நிறுத்தவல்லதாக இருத்தல்தான் அந்நடைக்குரிய தனிச் சிறப்பாகும். சொற்களும் சொற்றொடர்களும் தனித்தனி வாக்கியங்களாக நின்று கருதிய பொருளைச் செவ்வனே புலப்படுத்துகின்றன. அந்நடை தமிழுக்குப் புதியது. அதனை ஆங்கில மொழியிலிருந்தே அவர் பெற்றார் எனக் கூறுதல் வேண்டும். அவர் காட்டிய வழியைப் பின்பற்றிய பல எழுத்தாளர் அந்நடையில் எழுதியபோதும் அவரைப் போலப் பிறர் அதைக் கையாள்வதில் வெற்றிபெறவில்லை என்றே கூறலாம்.

பாரதியார் எழுதிய கதைகளும் கட்டுரைகளும் பல மக்களுக்கு அறிவு கொளுத்தும் நோக்கமாகப் பல்வகைப்பட்ட விஷயங்களைப் பற்றியும் எழுதியிருக்கின்றார். தம்முடைய வாழ்க்கையனுபவங்களையும் கற்பனையில் உதித்த காட்சிகளையும் பிறவற்றையும் உணர்ச்சிக்கலப்புள்ள நடையில் வரைந்திருக்கிறார். அவர் எழுதிய எதுவாயினும் அதை நாம் படிக்கும்போது இது பாரதியார் எழுதியது என்று திட்டமாகக் கூறக்கூடும் வகையில் அவர் நடை அமைந்திருக்கின்றது. வசன நடையிலே தெளிவு ஒளி தன்மை தட்டுத்தடையின்றி நேரே பாய்ந்து செல்லும் தன்மை என்பன அமைதல் வேண்டும் என ஓரிடத்தில் உரைநடைக்கு வரைவிலக்கணம் அவரே அமைந்திருக்கிறார். அவ்விலக்கணத்திற்கு அமையவே அவர் நடையும் செல்வதைக் காணலாம். அவர் உள்ளத்திற் குடிகொண்டிருந்த நேர்மை, தைரியம் என்னும் குணங்கள் அவர் நடையிற் பிரதிவிம்பிக்கின்றன. எதைக் கூற எடுத்துக் கொண்டபோதும் அதைத் தன்னம்பிக்கையோடும் உறுதியோடும் கூறுதலால் அவர் வாக்கியங்கள் தத்தளிப்பின்றி நேராகச் செல்லும் இயல்பினவாக உள்ளன.

04. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

மனிதன் நன்றும் தீதும் கலந்த கலவையென மிளிர்கின்றான். அவன் உள்ளம் நன்மையவாங்கு குணங்களும் தீமையவாங்கு குணங்களும் போரிடும் ஒரு களமென இலங்குகின்றது. புராணங்கள் புகழும் தேவாசுரப் போர் இதுதான் போலும் நற்குணம் வென்றால் வாழ்க்கை புகழுடன் கூடி வெற்றிப்பேறெய்தி மிளிர்கிறது. தீக்குணம் மிக்கால் இகழ்ச்சியினும் இயைந்து இருண்டு விடுகின்றது. கோவலன் மரபு வழியாக வந்த குன்றனைய பெரும் பொருள்களையெல்லாம் தொலைத்து தன்னகத்தடக்கிய தீமைக் குணத்திற்கு நறும்புகையூட்டி வளர்த்து வருகிறான். ஐயோ, அவன் நற்பண்புகள் அனைத்தும் நலிந்து வாட்டமுற்று வன்பக்கல் நின்றும் விடைபெற்று விடுகின்றன. தானே தனக்குக் கூற்றுவனாய் உருப்பெற்று வருவதை அறியாத அவன் மாதவிப் பொன்மயிலின் அழகும் அன்பும் ஆடலும் பாடலும் தன்னைக் காப்பாற்றும் என்று கற்பனைத் தேரில் சஞ்சரிக்கின்றான்.

1) மனிதனது உள்ளக் களத்தில் எவை போரிடுகின்றன?
2) வாழ்க்கை வெற்றிப் பேறெய்தி மிளிர்வது எப்போது?
3) கோவலன் எதனை வளர்த்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது?
4) கோவலன் கண்ட கற்பனை என்ன?
5) பொருள் எழுதுக.
   1. குன்று. 2. நறும்புகை.

05. உமது பிரதேசத்தில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால் ஏற்படும் அசௌகரியங்களை எடுத்துக்காட்டி மின்சார சபைத் தலைவருக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

## தமிழ்மொழியும் இலக்கியமும் - III — 22-T-III

*** இல. 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5-7 வரையான வினாக்களில் ஏதாவது ஒரு வினாவுக்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.
    01) ''மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர் கன்னி யானாகிற் கடிமாலை அன்னந்தான் சொன்னவனைச் சூட்ட அருள்.'' இக்கூற்று யாரால்? யாருக்கு கூறப்பட்டது?
    02) ''திண்டோள் வயவேந்தர் - செந்தாமரை முகம் போய் வெண்டாமரையாய் வெளுத்தவே.'' இவ்வடியில் இடம்பெற்ற அணியை விளக்குக.
    03) உருவக அணியை ஓர் உதாரணம் தந்து விளக்குக.
    04) கவிச்சக்கரவர்த்தி எனப்பட்டவர்கள் யாவர்?
    05) ஒரு பதிவிரதையின் சரித்திரம் உணர்த்தும் படிப்பினைகள் இரண்டு தருக.
    06) கடற்புறம் என்ற கவிதையில் கோணல் நினைப்பு எனக் கவிஞர் எதைக் கூறினார்?
    07) மலையக நாட்டார் பாடலில் சிருங்காரச் சுவை வெளிப்படும் முறையினை எழுதுக.
    08) ஏர் எழுபது எப்படிப்பட்ட நூல்?
    09) முன்னோக்கு என்ற கவிதைத் தலைப்பின் பொருத்தத்தினை விளக்குக.
    10) கல்வியே அழியாச் செல்வம் என்றது ஏன்?

02. தரப்பட்டுள்ள செய்யுட்பகுதி, உரைநடைப்பகுதி என்பவற்றின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் காணப்படும் பகுதியின் சிறப்பினை எழுதுக.

அ. கண்ணிற் சிறந்த உறுப்பில்லை **கொண்டானின்**
**துன்னிய கேளிர் பிறரில்லை** மக்களின்
ஒண்மை வாய்ச் சான்ற பொருளில்லை
ஈன்றானோடெண்ணக் கடவுளுமிய்

ஆ. மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம்
**உடல் சிறியர் என்றிருக்க வேண்டா** - கடல் பெரிது
மண்ணீருமாகா ததனருகே சிற்றூரல்
உண்ணீரும் ஆகிவிடும்.

இ. இங்ஙனமெல்லாம் ஆழ நினைத்து பார்க்குங்கால் ஆண் மக்களுக்கு கல்வி இன்றியமையாததாய் இருத்தல் போலவே அவர் போல் மக்கட் பிறப்பினரான **பெண் மக்கட்குங் கல்வியானது இன்றியமையாதது** அழிவில் செல்வம் ஆகுமென்பது நன்கு புலப்படுகின்றது.

ஈ. மரத்தருகே நின்ற இருவரையும் இனிது நோக்கி, ''ஐயா நீங்கள் இருவரும் அயலூரார் என்பதையறிந்தேன். ஏனெனில், இவ்வூரார் எவரும் இப்பாழான **மரத்தைக் கண்ணெடுத்தும் பாரார்கள்**'' என்று அதன் தன்மையை விரிவாகக் கூறிமுடித்தான்.

03. திருக்குறளை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. திருவள்ளுவர் செங்கோண்மையின் சிறப்பு கொடுங்கோன்மையின் இழிவு என்பவற்றை எவ்வாறு எடுத்துக் காட்டுகிறார்? அவை இக்காலத்திற்கு ஏற்புடையனவா? என்பதை விளக்குக.

04. நந்திக் கலம்பகம் செய்யுட்களில் நந்திவர்மனின் வீரம், கொடைச்சிறப்பு என்பன சித்திரிக்கப்பட்டிருக்குமாற்றை விளக்குக.

அல்லது

பார்வைகள் என்ற சிறுகதை மூலம் கல்வியின் முக்கியத்துவம் எவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது என்பதை விளக்குக.

அல்லது

உண்மையின் சிறப்பு இறைவனே பெரியவர் என்ற கருத்துக்கள் நட்சத்திரக் குழந்தைகள் என்ற சிறுகதை மூலம் சித்திரிக்கப்பட்டிருக்குமாற்றை விளக்குக.

*** இல. 5ஆம், 6ஆம், 7ஆம் வினாக்களுள் ஏதேனும் ஒன்றைத் தெரிவுசெய்து விடை தருக.**

05. பாரதியார் உலகில் சிறந்த கவிவாணருள் ஒருவர் என்பதைப் பாரதி கவி நயம் என்ற கட்டுரையை அடிப்படையாகக்கொண்டு விவரிக்குக.

06. மங்கையற்கரசியின் காதல் என்ற சிறுகதைக்கு சூசிகை எழுதப்பட்டமைக்கான காரணங்களைத் தருக.

07. நல்ல மரமும் நச்சு மரமும் என்ற கட்டுரையை ஆதாரமாகக்கொண்டு அறிவுடையார் கட்பட்ட செல்வம் பற்றி யாது கூறுகிறார்?

-நிறைவுற்றது-

ஆசிரியர்: M.ராஜ்குமார்,
மட்/கல்லடி முகத்துவாரம் விபுலானந்த வித்தியாலயம்,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும்....

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வடமராட்சி மண்ணில்

## பிராந்திய காரியாலயத்தினை திறந்திருப்பதனை ஒட்டி வடமராட்சி மாணவர்களுக்காக நடத்தும் மாபெரும் புதிர்ப் போட்டி

### போட்டி விதிகளும் பரிசுக் குவியலும்

1. வடமராட்சிப் பிரதேசத்தினைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மட்டுமே இப் போட்டியில் பங்குபற்ற முடியும்.
2. விடைத்தாள்களைப் பாடசாலை அதிபர்கள் உறுதி செய்தல் வேண்டும்.
3. ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சம எண்ணிக்கையான சரியான விடைகளை எழுதினால் குலுக்கல் முறை மூலம் பரிசுக்குரிய அதிஸ்டசாலி தெரிவு செய்யப்படுவார்கள்.
4. விடைகளை இந்த விடைத் தாளிலேயே எழுதுதல் வேண்டும். பிரதிகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
5. பூரணப்படுத்தப்பட்ட கூப்பனுடன் கூடிய விடைத்தாள்களை உதயனின் முகவர் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் அல்லது உதயனின் நெல்லியடிக் கிளையிலுள்ள பெட்டியினுள் போட முடியும்
6. 20.11.2009 முதல் உதயனில் வெளிவரும் இலச்சினைகளை தொடராக விடைத்தாளுடன் இணைத்து அனுப்பினால் வெல்கின்ற பரிசு மடங்குகளால் அதிகரிக்கப்படும்.

   உதாரணமாக : முதலாம் பரிசுக்குரிய மாணவரொருவர் உதயன் இலச்சினைகளை ஒழுங்கு தவறாமல் ஒட்டி அனுப்பி இருந்தால் முதலாம் பரிசான ரூபா பத்தாயிரம் முப்பதாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும்
7. கூடுதலான எண்ணிக்கையான மாணவர்களைப் பங்கு பெறச்செய்யும் முதல் மூன்று பாடசாலைகளுக்கும் சிறப்புப் பரிசாக ரூபா பத்தாயிரம் வீதம் வழங்கப்படும்
8. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.
9. சாதாரண விண்ணப்பத்திற்கு குறைந்தது 3 இலச்சினைகளாவது உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**1ஆம் பரிசு** (ஒருவருக்கு மட்டும்)
ரூபா 10,000.00
(சாதாரணமாக அனுப்பினால்)
ரூபா 30,000.00
(அனைத்து இலச்சினைகளையும் இணைத்து அனுப்பி இருந்தால்)

**2ஆம் பரிசு** (ஒருவருக்கு மட்டும்)
ரூபா 6,000.00
(சாதாரணமாக அனுப்பினால்)
ரூபா 20,000.00
(அனைத்து இலச்சினைகளையும் இணைத்து அனுப்பி இருந்தால்)

**3 ஆம் பரிசு** (ஒருவருக்கு மட்டும்)
ரூபா 2,500.00
(சாதாரணமாக அனுப்பினால்)
ரூபா 10,000.00
(அனைத்து இலச்சினைகளையும் இணைத்து அனுப்பி இருந்தால்)

**4 ஆம் பரிசு**
ஒரு மாதத்துக்குரிய உதயன் நாளிதழ் பிரதிகளை இலவசமாகப் பெறும் வாய்ப்பு
(ஐம்பது பேருக்கு)

வினாத்தாள்கள் தேவைப்படும் பாடசாலைகள் மற்றும் மாணவர்கள் நெல்லியடியில் அமைந்துள்ள உதயன் பிராந்தியப் பணிமனையில் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம். இதன்மூலம் போட்டியில் பங்குபற்றி பெறுமதிமிக்கப் பணப்பரிசுகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

வடமராட்சி

இதோ!
ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி. தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔடதம்

**பீம் வாசக சிரப் (Vasaka Syrup)**
இருமல் பாணி

யாழ்.குடாநாட்டின் அனைத்து பாமசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*Manufactured By:*
*Beamhela osulanka (PVT) LTD*
*18/263 Kethsiry Place*
*High Level Road, Kottawa*
*Pannipa Panniptiiya*
*Puttalam, Road, Chilaw.*
*(Reg.No: 6382)AR/PR/No.228*

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
தொ.பே: 021 222 2567
(செ/562080)

## 25 ஆவது திருமண நிறைவு நாளும் 50 ஆவது பிறந்த நாள் வாழ்த்தும்

24.11.2009



இன்று 25 ஆவது
திருமண நாளையும்
50 ஆவது பிறந்த தினத்தையும்
கொண்டாடும் எங்கள் அன்பு
அப்பாவையும் அம்மாவையும்
இந்த நன்நாளில் வான் பொழியும்
மழைத்துளியையும், மலரிதழையும்
தூவி மீனாட்சி அம்மன்துணையுடன்
சீரும் சிறப்பும் பெற்று
பல்லாண்டுகாலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

திரு. திருமதி மனோகர்-சியாமளா

வாழ்த்துவோர்:
மகன்-வினோபாஜி [சுவிஸ்]
மகள்மார்-சங்கீதா, கயல்விழி
சு.கந்தசாமி [ஆசிரியர்] குடும்பத்தினர்.

4 ஆம் குறுக்குத்தெரு,
கச்சாய் வீதி - சாவகச்சேரி.
(91292)

### 'லைசன்ஸ்'இன்றி வாகனம் ஓட்டியவருக்கு நீதிமன்றம் அபராதம்

கரவெட்டி,நவ.24

சாரதி அனுமதிப் பத்திரமின்றி ஹன்ரர் வாகனம்ஓட்டிச் சென்றவருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதமும் வாகன உரிமையாளருக்கு ரூபா 5 ஆயிரம் ரூபா அபராதமும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டன.

சாரதி அனுமதிப் பத்திரமின்றி ஹன்டர் வாகனம் ஓட்டிச் சென்ற ஒருவர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி க.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

விசாரணையின் போது எதிரிகள் இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். அதனைத்தொடர்ந்து சாரதி அனுமதிப் பத்திரமின்றி ஹன்ரர் வாகனம் ஒட்டிய குற்றத்திற்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிமன்றம் ஹன்ரர் வாகன உரிமையாளருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது. (50-70)

### உதவிப்பணம் கையளிப்பு

யாழ்ப்பாணம், நவ.24

முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட நல்லூர் அரசடியைச் சேர்ந்த பதினைந்து குடும்பங்களுக்கு யாழ்.நல்லூர் ஜனசக்தி சனசமூகநிலையத்தினரால் உதவு தொகைப் பணம் கடந்த வியாழக் கிழமை வழங்கப்பட்டுள்ளது. (04)

### வெள்ளத்தால் மூழ்கியுள்ள குளங்கரை பிரதான வீதி

கரவெட்டி,நவ.24

கரணவாய் மத்தி குளங்கரை பிரதான வீதி வெள்ளத்தால் மூழ்கியுள்ளதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக மேற்படி வீதி எவ்வித திருத்தமும் இன்றி காணப்படுகின்றது.

பொன்னம்பல வித்தியாசாலையும் இந்த வீதியில் உள்ளது. அத்துடன் கரணவாய், நவிண்டில் போன்ற இடங்களின் பிரதான இணைப்பு வீதியாகவும் இது அமைந்துள்ளதால் மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இந்த வீதியால் பயணிப்பதில் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர். (50-70)

### மிதிபலகையில் நின்றவர் தவறி விழுந்து காயம்

கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்திலிருந்து வீழ்ந்து மாணவன் காயமடைந்தார்.

குறித்த பஸ்ஸில் நுணாவில் சந்தியை அண்மித்தவேளை மிதிபலகையில் நின்ற மாணவன் வீழ்ந்ததில் படுகாயமடைந்தார். மட்டுவில் தெற்கினைச் சேர்ந்த கிருசாந்தன் என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார். அவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (50-15)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
19 ★ 07 ★ 1928



மறைவு
25 ★ 10 ★ 2009

### சுவாமிநாதர் வினாசித்தம்பி

அன்பான குணத்தாலும்
அயராத உழைப்பாலும்
அனைவரையும் அரவணைத்து
அகிலத்தில் ஏற்றமுடன் எம்மை
சிறந்திருக்கச் செய்தீர் ஐயாவே!

உசன், மிருசுவில். (91365) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
25 ★ 08 ★ 1958



உதிர்வு
25 ★ 10 ★ 2009

### அமரர் பரசுராமர் இராஜபுவனேந்திரன்
(சாரதி ICRC)

கடந்த 25.10.2009 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (24.11.2009) செவ்வாய்க்கிழமை மு.ப 9 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து சுன்னாகம் கதிர மலைச் சிவன் தேவஸ்தான மண்டபத்தில் மதியபோசன நிகழ்வு நடை பெறும். இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மரணச் செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி, மலர் வளையம் வைத்தும், துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டும், எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், பலவழிகளிலும் உதவி செய்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நெடும்புலம்,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
T.P 0213210185 (91211) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
29 ★ 09 ★ 1945



உதிர்வு
25 ★ 10 ★ 2009

### திருமதி ஆறுமுகம் நாகம்மா

கடந்த 25.10.2009 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (24.11.2009) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவி நோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது சிகிச்சை அளித்த யாழ்.போதனா வைத்தியசாலை 26 ஆம் விடுதி வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் கேன் புற்றுநோய் காப்பகத்தில் பணிபுரிந்த அனைவருக்கும் மரணச்செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசி மூலமும் அனுதாபங்கள் தெரிவித்து எமது துயரில் பங்குகொண்டவர்களுக்கும் பல வழிகளிலும் உதவிசெய்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

98, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (912260) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'அக்கடமி ஒவ் ஒறியன்ரல் மார்சல் ஆட்ஸ்' கழகத்தின் ஏற்பாட்டில் இரண்டு நாள் கராத்தேப் பயிற்சி முகாம் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. பயிற்சி முகாமில் கழகத்தின் பிரதம ஆசிரியரும், பிரதம பரீட்சகருமாகிய பெனடிக் றேமன் கபிரியேல் மற்றும் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள இலங்கை கராத்தே சங்கப் பணிப்பாளர் கே.இராமச்சந்திரன் ஆகியோருடன் கழக மாணவர்கள் இணைந்து கராத்தே பயிற்சியில் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நந்தன்)

## 13 வயதுப்பிரிவு உதைபந்தாட்டம்:

# வலிகாமம் வலயச் சம்பியனாகியது வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்

வலி.வடக்கு நவ.24

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் சம்பியனாகியது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயமும், மாதகல் சென்.யோசேப் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை மிகவும் விறுவிறுப்பான நிலையில் ஆட்டம் இடம்பெற்றுப் பார்வையாளர்களைப் பரவசப்படுத்தியது.

முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்ட போதிலும் கோல்கள் பெறும் வாய்ப்பு எதுவும் இரு அணிகளுக்கும் கிடைக்கவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்கு கோல்கள் பெறும் வாய்ப்புகள் கிடைக்கப்பெற்ற போதிலும் உரியவகையில் அந்த அணி வீரர்கள் பயன்படுத்தத் தவறிவிட்டனர்.

இதேவேளை ஆட்டவேளையின்போது தண்டனை உதையொன்று கிடைக்கப் பெற்ற போதிலும் அதனையும் உரிய முறையில் பயன்படுத்தி கோல்பெறும் வாய்ப்பை வசாவிளான் மத்தியமகாவித்தியாலய வீரர்கள் கோட்டைவிட்டனர்.

இதேவேளை சென்.யோசேப் வித்தியாலய கோல் காப்பாளர் சுகிர்தன் மிகவும் நுட்பமாக இரண்டு பந்துகளைத் தடுத்து எதிரணியினர் கோல்பெறும் வாய்ப்புக்கு முட்டுக்கட்டை போட்டார்.

இரு அணிகளும் கோல்கள் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இதனால் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்குச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதிக்கொண்டன.

ஆட்ட நிறைவில் அருணோதயாக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (04-86)

## தாச்சிப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு நவ.24

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டிகளின் முடிவுகள் சில வருமாறு:-

தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகத்திற்கும் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழகத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் 6:3 பழங்கள் என்ற அடிப்படையில் சிந்து விளையாட்டுக் கழகத்தை வெற்றிபெற்றது.

சுதுமலை ஐங்கரன் விளையாட்டுக் கழகத்திற்கும், மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஐங்கரன் விளையாட்டுக்கழகம் 11:5 பழங்கள் என்ற அடிப்படையில் ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தை வெற்றிபெற்றது. (50-86)

# 12 வயதுப் பெண்களுக்கான தாச்சிப் போட்டியில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் சம்பியன்

வலி.வடக்கு நவ.24

வலிகாமம் கல்வி வலயப் பாட சாலை அணிகளுக்கிடையே 12 வயதுப் பிரிவு பெண்களுக்கு இடையே நடைபெற்ற தாச்சிச் சுற்றுப் போட்டியில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் சம்பியனாகியது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் காங்கேசன்துறை வீமன்காமம் மகாவித்தியாலயமும் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

முதலில் பழம் பெறுவதற்கு களமிறங்கிய வீமன்காமம் வித்தியாலயம் 6 பழங்களைப் பெற்றுக்கொண்டது.

பதிலுக்குப் பழம் பெறுவதற்குக் களமிறங்கிய ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் 03 பழங்களை மட்டும் பெற்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் மீண்டும் களமிறங்கி பழம் பெறுவதில் வீமன்காமம் மகாவித்தியாலயம் ஈடுபட்டபோதிலும் இந்நடவடிக்கையை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் முறியடித்து விளையாடியமையால் 04 பழங்களை மட்டும் பெற முடிந்தது.

பதிலுக்குக் களமிறங்கிப் பழம் பெறத் தொடங்கிய பாலசுப்பிரமணியம் வித்தியாலய வீராங்கனைகள் மிகவும் வேகமாக விளையாடினார்கள். இவர்கள் பழம் பெறுவதைக் கட்டுப்படுத்த எதிரணியினரால் முடியாமல் போக குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் 06 பழங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவுற்றது.

ஆட்டநிறைவில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் 10:9 பழங்கள் என்ற அடிப்படையில் வீமன்காமம் வித்தியாலயத்தை வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. (50-86)

# மின்சார ஊழியர்களுக்கிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டி முடிவுகளில் சில

இலங்கை மின்சாரசபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கம் இணைந்து மின்சார சபையின் ஊழியர்களுக்கு இடையே மூன்று பிரிவுகளாக நடத்திய விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்றோரின் விவரங்கள் அறிவிக் கப்பட்டுள்ளன.

அவற்றின் விவரங்கள் சில வருமாறு:

★ அங்கத்தவர்கள்

100 மீற்றர் ஓட்டம்

(ஆண்கள்-35 வயதிற்கு உட்பட்டவர்கள்)

முதலாம் இடம்-அன்னராசிங்கம் றெக்னோ, 2ஆம் இடம்-நவரட்ணம் கிருபானந்தன், 3ஆம் இடம்-பாலசுப்பிரமணியம் ஜெயபிரசாத்.

100 மீற்றர் ஓட்டம்

(பெண்கள்-35 வயதிற்கு உட்பட்டவர்கள்)

முதலாம்ஆம் இடம்-திருமதி லிங்கரூபன் கிருஸ்ணவேணி, 2ஆம் இடம்-செல்வி சோதிலிங்கம் கஜனி, 3ஆம் இடம்-செல்வி ராஜிதா மாணிக்கவாசகர்.

100 மீற்றர் ஓட்டம்

(ஆண்கள்-35 வயதிற்கு மேற்பட்டவர்கள்)

முதலாம்ஆம் இடம்-இராயப்பு றிச்சாட் டானியல், 2ஆம் இடம்-இராசா பாலகிருஸ்ணா, 3ஆம் இடம்-கண்ணையா சண்முகநாதர்.

100 மீற்றர் ஓட்டம்

(பெண்கள்-35 வயதிற்கு மேற்பட்டவர்கள்)

முதலாம் இடம் - செல்வி மாலதி அருணாசலம், 2ஆம் இடம்-திருமதி பத்மப்பிரியா பிரபாகரன், 3ஆம் இடம்-திருமதி ஜெயராணி மதியோகநாதர்.

வேகநடை

(ஆண்கள்-35 வயதிற்கு உட்பட்டவர்கள்)

முதலாம் இடம்-தோமஸ் ரமேஸ், 2ஆம் இடம்-நவரெட்ணம் கிருபானந்தர், 3ஆம் இடம்-அன்னராசசிங்கம் றெக்னோ.

வேகநடை

(பெண்கள்-35 வயதிற்கு உட்பட்டவர்கள்)

முதலாம் இடம்-திருமதி லிங்கரூபன் கிருஸ்ணவேணி, 2ஆம் இடம்-பிரபா பத்மபிரியா, 3ஆம் இடம்-செல்வி சோதிலிங்கம் கஜனி.

வேகநடை

(ஆண்கள்-35-50 வயதிற்கு உட்பட்டவர்கள்)

முதலாம் இடம்-இராமலிங்கம் இராசேந்திரன், 2ஆம் இடம்-இளையதம்பி தயானந்தன், 3ஆம் இடம்-சண்முகநாதன் சத்தியலிங்கம்.

வேகநடை

(பெண்கள்-35-50 வயதிற்கு உட்பட்டவர்கள்)

முதலாம் இடம்-திருமதி நந்தினி பார்த்தீபன், 2ஆம் இடம்-திருமதி ஜெயராணி மதியோகநாதன், 3ஆம் இடம்-செல்வி மாலதி அருணாசலம்.

வேகநடை

(ஆண்கள்-50 வயதிற்கு மேற்பட்டவர்கள்)

முதலாம் இடம்-ஆழ்வாப்பிள்ளை தங்கராசா, 2ஆம் இடம்-இராசசிங்கம் ஜெயராசா, 3ஆம் இடம்-பரராஜசிங்கம் செந்தில்செல்வன். (வளரும்)



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற 12 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தாச்சி இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகாவித்தியாலயமும் மயிலிட்டி கலைமகள் வித்தியாலயமும் மோதிக்கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்:நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று பாடசாலைச் சமூகத்திற்குப் பெருமை தேடிய மாணவச் செல்வங்கள்

அண்மையில் வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் அந்தந்தப் பாட சாலை மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் தமது சொந்த ஊருக்கும் பெருமை தேடிக்கொடுத்த மாணவச் செல்வங்களின் கருத்துக்களைத் தொகுத்து 'உதயன்' வாசகர்களுக்காகத் தருகின் றோம். தொடர்ந்து படியுங்கள்.



## கனகராசா - தர்சனா
### யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
### புள்ளிகள்-150

நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததை இட்டு மகிழ்ச்சியடைகின்றேன். நான் பரீட்சையில் சித்திய டைவதற்குக் காரணமாக இருந்தவர்கள் அதிபர் திரு.இ. இராக வன், எனது வகுப்பாசிரியர் செல்வி ஆனந்தநாயகி கந்தசாமி, தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் புஸ்பராணி. இவர்கள் எனக்கு கொடுத்த ஊக்கம் தான் நான் 150 புள்ளிகளைப் பெறக் காரணம். எதிர்காலத்தில் வைத்தியராக வருவதே எனது இலட்சியமாகும்.



## சிவமூர்த்தி கம்ஷா
### யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
### புள்ளிகள்-158

நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு மகிழ்வதோடு எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர் திரு.இ.இராகவன், ஆசிரியர் செல்வி ஆனந்தநாயகி கந்தசாமி, புஸ்பராணி ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், சகோதரர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருந்தேன். நான் இதே விடா முயற்சியுடன் கல்வி பயின்று எதிர்காலத்தில் சிறந்த வைத்தியராக வர விரும்புகின்றேன்.



## குகனேசன் நிதுசா
### யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
### புள்ளிகள்-165

நான் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளேன். நான் இப்பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடையப் பிரதான காரணம் திருமதி சுமதி மகேஸ்வரன் ஆசிரியரும் அதிபரின் வழிகாட் டலும் பெற்றோரின் ஊக்கமும் தான்.

எமது பாடசாலை முடிவடைந்த பின்பு 4 1/2 மணிவரை மட்டும் நடைபெறும் பிரத் தியேக வகுப்புகளும், விடுமுறைக் காலங்களில் தொடர்ச்சியாக நடைபெறும் வகுப் புக்கள் ஆகியவற்றின் மூலம் நாம் 18 பேர் சித்தியடைவதற்குக் காரணமாக அமைந் துள்ளது.

எமது பாடசாலையில் ஒவ்வொரு வருடமும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் பதக்கங்களும், பரிசில்களும் வழங்கிக் கௌரவிக் கப்படுவார்கள். இவ்வாறான ஊக்குவிப்புத்தான் நாமும் கற்க வேண்டும் என்ற ஊக்கத்தைக் தந்தது.

பொதுவாக வகுப்பறையில் செய்யப்படும் எல்லா வினாத்தாள்களிலும் 170 இற்கு மேல் புள்ளிகளைப் பெறுவேன். தேசிய பரீட்சையிலும் அதிக புள்ளிகளை எதிர் பார்த்தேன். இது எனக்குச் சிறிது ஏமாற்றம்தான். என்றாலும் நான் தொடர்ந்து ஊக் கமுடன் கற்று வைத்தியராக வருவேன். இதுவே எனது இலட்சியம் ஆகும்.



## சிவகுமார் லக்ஷிகா
### யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
### புள்ளிகள்-168

எனது அப்பா சமுர்த்தி முகாமையாளராகப் பிரதேச செயலகத் தில் கடமையாற்றுகிறார். நான் புலமைமைப்பரிசில் பரீட்சை யில் 168 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முத லாம் நிலை பெற்றேன். எனது கல்லூரி அதிபர் திரு.இராகவன் அவர்களின் வழிநடத்தலும் எனது வகுப்பாசிரியர் செல்வி ஆனந்தநாயகி கந்தசாமி அவர்களின் கற்பித்தலும் எனது பெற்றோரின் ஒத்துழைப்பும் நான் பரீட்சையில் சித்தியடைவதற்குக் காரணமாக அமைந்தன.

அத்தோடு திரு.வல்லிபுரம் ஆசிரியரின் பங்களிப்பும் முக்கியமானதாகும். நான் எனது ஆசிரியர்களின் வழிநடத்தல்களைப் பின்பற்றி அவர்களின் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கேட்டு கற்றுத் தேறியமையே இந்தப் புள்ளிகளைப் பெறக் காரண மாக இருந்தது. இதற்காக எனது அதிபர், ஆசிரியருக்கும் எனது பெற்றோருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.



## பிரதீபன் வைஸ்ணவி
### யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
### புள்ளிகள்-157

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவற்குப் பெரிதும் உதவிய எனது வகுப்பாசிரியை திருமதி சுமதி மகேஸ்வரன், பாடசாலை அதிபர், பெற்றோர்கள், மற்றும் என் பாசமிகு மாமா (சிறிரகுபதி) ஆகிய அனைவரும் எனது மதிப்பிற்குரியவர்கள்.

பாடசாலையில் நடைபெறும் பாடங்களை நன்றாக அவதா னித்து, அதில் எழும் சந்தேகங்களை உடனுக்குடன் ஆசிரியரிடம் கேட்பேன். ஆசிரியரும் பொறுமை யுடன் சொல்லித்தருவார்.

வகுப்பில் கூறும் விடயங்களை வீட்டிற்குக் கொண்டு சென்று மீட்டல் செய்வேன். அது மட்டுமன்றி பாடசாலையில் நடைபெறும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள்களிலும் 150, 160, 170 புள்ளிகளைப் பெற்றுவந்தேன். இதனடிப்படையில் புலமைப்பரிசில் பரீட்சையில் நான் எதிர்பார்த்த புள்ளிகள் கிடைக்கவில்லை.

இதனால் நான் ஒரு சிறு ஏமாற்றம் அடைந்துள்ளேன். மேலும் மேற்படிப்புக்களில் சிறந்த பெறுபேறு பெறவேண்டும் என ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் கல்விகற்று வருவேன். என் எதிர்கால இலட்சியம் ஓர் வைத்தியராக வருவதே ஆகும். இதற்கு தச்சை ஐங்கரன் அருள் புரிவார்.

**சந்திப்பு : ஓங்காரன், தமிழ்வண்ணன்**

**நேற்றைய உதயனில் அரசியல், சமயம், கல்வி, கலாசாரம் எல்லாத் துறைகளிலும் பணியாற்றி உயர்ந்து விளங்கியவர் சேர்.பொன்.இராமநாதன் எனும் கட்டுரையை எழுதியவர் பண்டிதை திருமதி வை.கணேசபிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியை இராமநாதன் கல்லூரி). தவறுதலாக அவரது பெயர் கட்டுரையில் பிரசுரமாகவில்லை.**

# தவிர்க்கமுடியாத.....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

இன்றைய அளவில் ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதியின் அனுமதியு டன் உத்தியோகபூர்வமாகவே பதவியி லிருந்து விலகியுள்ளதால் மேற்படி கண் ணோட்டம் அர்த்தமற்றதொன்றாகிறது.

**மஹிந்த எதிர்நோக்கும் சவால்**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று முகம் கொடுத்திருப்பது, எவ்விதத்திலும் விலகிச் செல்ல இயலாத அரசியல் சவாலொன்றுக்கேயாகும். யுத்தவெற்றி யின் மூலம் இராட்சதப் பலவானாகி விட்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கு எதிரான ஆத்மபலத்துடன் போட்டி யிடத்தக்கதொரு ஆற்றல் மிக்க வேட்பா ளர் ஐ.தே.கட்சியிலோ அல்லது ஜே.வி. பியிலோ இருக்கவில்லை. அதன் காரணமாகவே அதே யுத்தம் உருவாக்கி விட்ட வீரர்களுள் ஒருவரான ஜெனரல் சரத் பொன்சேகாவை முன்நிறுத்தும் எத்தனத்தை அவை மேற்கொண்டுள்ளன. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யுத்தம் ஒன்றுக்குத் தலைமை தாங்கியிருந்த தலைவர்கள் இருவர் ஒருவருக்கொருவர் எதிராக நின்று போட்டியிடும் நிலைப்பா டொன்று உருவாகியுள்ளதை துரதிஷ்டவ சமானதே எனக் கருத முடிந்தாலும் கூட, இந்த இருவருக்கும் இடையில் நிகழும் போட் டியானது சிலவேளை, நாட்டின் சுபீட்சத் துக்குக் காரணமாகவும் அமையக்கூடும்.

மேற்படி சவாலைத் தைரியமாக எதிர் கொள்வதேயல்லாது ஓர் அடியைக்கூட பின்வைக்க இயலாத நிலையிலேயே இன்று ஜனாதிபதி உள்ளார். இச்சவாலின் முன்னால் நாடாளுமன்றத் தேர்தலொன்றுக் குச் செல்லும் ஆற்றலும் அவருக்கில்லை. எனவே, முதலில் ஜனாதிபதித் தேர்தல் என்பதைத் த்விர்த்து விடவும் இயலாது. அது தவிர்க்கப்படுமானால் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு முகம் கொடுக்க இய லாத பீதியின் காரணமாக ஜனாதிபதித் தேர் தலை விடுத்து நாடாளுமன்றத் தேர்த லுக்கு ஜனாதிபதி செல்கிறார் என்றே நாட்டு மக்கள் எண்ணமிடக்கூடும். அது, ஜனாதிபதியின் கௌரவத்துக்கு ஏற்புடை யதல்ல. எனவே, ஜனாதிபதி ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டு நின்று இக் குழப்பநிலையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டியுள்ளது. அவசியப் படின் இவ் இரண்டு தேர்தல்களையும் ஒன்றாகவே இடம்பெறச் செய்வதன் மூலம் தேர்தல் செலவினத்தைப் பெரு மளவில் குறைத்துக்கொள்ள முடியும். ஆனால், இவ்விரு தேர்தல்களும் அதிகபட்ச மட்டத் தில் சுதந்திரமான, நியாயமான தேர்தல் களாக அமைவதற்கான நிபந்தனைகளை உருவாக்குவதன் மூலம் அரசியல் நல்லொழுக்க சீலத்தின் மேம்பாட்டைப் புலப்படுத்திவிட முடியும்.

இன்றைய அரசியல் முறைமையினுள் அரச அதிகார பலம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியைச் சூழவே மையப் படுத்தப் பட்டுள்ளது. எனவே, அதிகார பலம் தொடர்பாக நிகழும் போட்டியில் பெரிதும் முன்னிலை வகிப்பது ஜனாதி பதித் தேர்தலேயாகும். இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறும் கூட்டணிக்குக் குறைந்தோ கூடிய விதத்திலோ நாடாளு மன்றத் தேர்தலையும் வெற்றி கொள் வதற்கு வாய்ப்புக் கிட்டுகிறது.

இன்றைய அளவில் நாட்டில் நிலவும் அரசியல் நிலைப்பாட்டுக்கு அமைய அரசு தொடர்பான மக்களின் கண்டனக்கணை கள் முன்னெழுந்து நிற்கும் நிலையிலும் கூட,ஜனாதிபதிக்கிருக்கும் மக்கள் செல் வாக்கு பலமான நிலையிலேயே காணப் படுகிறது. எதிர்க்கட்சியின் பொது வேட்பாள ரின் மக்கள் பலமென்ற அடித்தளம் அந்தளவுக்குத் தெளிவானதாக இல்லை. மேற்படி பொது வேட்பாளருக்கு - ஐ.தே. கட்சியின் ஜே.வி.பியின் மற்றும் முஸ்லிம் காங்கிரஸின் வாக்கு வங்கியிலுள்ள அனைத்து வாக்குகள் செலுத்தப்பட்டாலும் கூட, அந்த ஒட்டுமொத்த வாக்குத் தொகைக் கும் ஜனாதிபதியின் மக்கள் பலமென்ற அடித்தளத்துக்கும் இடையில் விசாலமானதொரு இடைவெளி நிலவு கிறது. இந்நிலையில் மேற்குறிப்பிடப்பட்ட மூன்று கட்சிகளினதும் வாக்கு வங்கிகள் மூலம் தமக்கு உதவியாகக் கிட்டும் வாக்குத் தொகையை விடவும், அதே போன்ற தொரு விசாலமான வாக்குத் தொகையை ஜனாதிபதிக்கு அமையும் வாக்குப்பலத்தி லிருந்து கைப்பற்றிக்கொள்ள முடிந்தால் மட்டுமே எதிர்க் கட்சியினால் முன்நிறுத் தப்படும் பொதுவேட்பாளரால் ஜனாதி பதித் தேர்தலில் கடும் போட்டியொன்றை முன்நிறுத்த முடியும். மேலும், ஐ.தே.கட் சியின் பணபலம் மற்றும் ஜே.வி.பியின் ஒன்றுதிரட்டிவிடும் பலம் என்ற இவை யிரண்டும் ஒருமுகப்படும் போது பெரும் போட்டி நிலவும். மேலும் ஈர்ப்பு நிலவு மொரு தேர்தல்களத்தை முன்நிறுத்த எதிர்க் கட்சிக்குத் திறமையிருந்தாலும் கூட, ஜனா திபதி வசமுள்ள மக்கள் பலமென்ற அடித் தளத்தில் ஆழமானதொரு மாற்றத்தை ஏற்படுத்த அதன் மூலம் ஆற்றல்கிட்டுமா என்பது சந்தேகத்துக்குரியதே.

ஐ.தே.கட்சி மற்றும் ஜே.வி.பி.என்ற தரப்புக்களுக்கிடையில் இதுவரை நிலவிய பகைமையுணர்வு எண்ணக் கருவிலிருந்து விடுபட்டு இவ் இரு தரப்புக்களும் அரசி யல் ரீதியில் ஒத்துநின்று கொடுக்கல் வாங்கல்களைப் பரிமாறிக் கொள்ளும் நிலைவரை சென்றிருப்பதானது வரவேற் கத்தக்கதும் முற்போக்கான இலட்சண தொன்றாகவே தென்படுகிறது.

இருந்தபோதிலும், இவ் எதிர்க்கட்சி களின் கூட்டணிக்கே உரிய மிகப் பெரும் வரையறையொன்றாகத் தென்படுவது, அவர்கள் அனைவரும் ஒரேயொரு சாத கத்தை மட்டுமே- அதாவது அவர்கள் அனைவருமே மஹிந்த ராஜபக்ஷவைத் தோல்வியுறச் செய்யும் குறிக்கோளில் மட்டுமே ஒருமுகப்பட்டுநிற்கும் தீவிர சக்தியாகிவிட்டுள்ளதாகும். இங்கு, நிறை வேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்துவிடுவது தொடர்பான அவர்களது பொதுவான இணக்கப்பாடு வரவேற்கத்தக் கதும் சிறப்பானதுமே என்றாலும், இது விடயத்தில் ஐ.தே.கட்சி எதிர்பார்க்கும் மாற்றம் எத்தகையது என்பது வெளிப்படுத்தப் பட்டிருந்தாலும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்குப் பதிலாக ஜே.வி.பி எந்த விதத்திலான முறைமையை எதிர்பார்க் கிறது என்பது தெளிவற்றதாகவே உள்ளது.

இந்த ஜனாதிபதி போட்டியில் ஐ.தே.கட்சி தனது வெளிப்படையான அரசியல் நியாயாதிக்கத்தைக் கொண் டுள்ள போதிலும் ஜே.வி.பியின் அரசியல் நியாயாதிக்கத்தைப் போன்றே பொது வேட்பாளராகப் போட்டியிடும் ஜெனரல் சரத் பொன்சேகாவின் நியாயாதிக்கமும் வெளிப்படையானதாக இல்லை, தெளி வற்றதாகவே உள்ளது. தமது தரப்பால் முன்நிறுத்தப்படும் ஜனாதிபதி வேட்பாளர் வெற்றிபெறுவாரானால்,தம்மைப் பிரத மராக்கி எதிர்கட்சியின் ஏனைய தரப்பு பிரதிநிதிகளும் உள்ளடங்கும் அமைச் சரவையொன்று உருவாக்கப்பட வேண்டி யுள்ளது என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அத்தகையதொரு செயல்திட்டத்துக்கு ஜே.வி.பி இணங்குகிறதா?- என்பதும் இங்கு பிரச்சினைக்குரியதே. தாம் பிரதமராகி நாடாளுமன்றத் தேர்தலில் நின்று அதில் வெற்றிபெறுவதே ரணில் விக்கிரமசிங்க வின் எதிர்பார்ப்பாகியிருப்பதும் தெரி கிறது. அதுபற்றி ஜே.வி.பியின் கருத்து என்ன? பொது வேட்பாளரின் கருத்து என்ன? - என்பதும் தெளிவில்லை.

பொது வேட்பாளர் ஈட்டிக் கொள்ளும் வெற்றியின் பின்னர் முழுமையாக ரணில் விக்கிரமசிங்கவின் செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதைக் காண்பதற்கு ஜே.வி.பி விரும்புமெனக் கருதவும் இயலாது. அதேபோன்று வெற்றிபெறும் பொது வேட்பாளர் முழுமையாக ஜே.வி.பியின் செயல்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு ரணில் விக்கிரமசிங்க இணங்கக்கூடுமா? என்பதையும் எண்ணிப்பார்க்க இயலாது.

மறுபுறத்தில், வெற்றிபெறும் பொது வேட்பாளர், வெற்றிவாகை சூடிக்கொண்ட ஐ.தே.கட்சிக்கோ அல்லது ஜே.வி.பிக்கோ அடிபணிந்து நிற்காது தனதேயான செயல்திட்டமொன்றினை முன்னெடுப் பாரானால் அதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஐ.தே.கட்சிக்கோ, அல்லது ஜே.வி.பிக்கோ இருக்கும் திறனாற்றல் எதுவென்பதும் தெளிவற்றதாகவே உள்ளது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு: வடநம்பி, ஹரிஸ்

# வடமராட்சி வார வலம்

# குடிசைக் கைத்தொழில் மீட்சி பெறுமா




யாழ். குடாநாட்டின் பொருளாதாரத்தில் வடமராட்சிப் பிரதேச குடிசைக் கைத்தொழில் பெரும் பங்கு வகிக்கின்றது. அந்த வகையிலே தோல்கள் மூலமான உற்பத்திகள் குறிப்பிடத்தக்க இடம் வகிக்கின்றன. விலங்கிலிருந்து பெறப்படும் தோற்பொருள்களில் இருந்தோ அல்லது வேறு செயற்கைப் பொருள்களில் இருந்தோ செருப்புகள், மிதியடிகள் போன்ற இன்னோரன்ன உற்பத்திப் பொருள்கள் வடமராட்சியில் குடிசைக் கைத்தொழிலாக உற்பத்தி செய்துயரப்படுகின்றன. இது கொழும்பில் உள்ள பறங்கிய இத் தொழில் மக்களின் மூலமாக வடமராட்சி வதிரிப் பகுதிக்கு கொண்டு வரப்பட்டதாக அறியப்படுகின்றது. இப்பிரதேசத்தில் செருப்புக்கைத்தொழிலில் நிபுணத்துவம் பெற்றவர்கள் வதிரிப்பிரதேசத்தில் 'வதிரி ஐக்கிய சப்பாத்து தொழிற்சாலை'யை நிறுவி, கிராம மக்களுக்கு இத்தொழில் பரப்பப்பட்டதாக அறியப்படுகின்றது. இதன் பெறுபேறாக வதிரிக் கிராமத்தைச் சேர்ந்த மா.இலட்சுமிகாந்தன் என்பவர் ஜனாதிபதி விருதை இத்துறைக்காகப் பெற்றுள்ளார்.

செருப்புக் கைத்தொழிலில் வதிரிப் பகுதியில் 22 முகவர்களுக்கு கீழ் சுமார்250 பேர் இத்தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இத்தொழிலாளர்கள் கடந்த காலங்களில் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பல லட்சக் கணக்கான ரூபா நஷ்டத்தை எதிர் நோக்கிய போதும் இன்றும் நஷ்டங்களுக்கு மத்தியில் விடாமுயற்சியுடன் இத்தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். அண்மையில் தொழில்அமைச்சின் மூலமாக சுமார் 2½ லட்சம் ரூபா பெறுமதியான இயந்திரங்கள் இவர்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன. இக்கிராம மக்களுக்கு சிறு கைத்தொழில் அமைச்சால் தற்போது பொது நோக்கு மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றது.

(வளரும்)

# 600 வருடங்களாக ஆன்மீகம் பரப்பும் உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில்





வடமராட்சிப் பகுதியில் உடுப்பிட்டிக் கிராமத்தில் 600 வருடங்கள் பழைமை வாய்ந்த கோயிலாக உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி ஆலயம் திகழ்கின்றது. இக்கிராமம் நீர்வளம், நிலவளம் செறிந்த பூமியாகும்.

தென்னிந்தியாவில் காஞ்சிமா நகரில் பண்டார தோட்டம் என்னும் கிராமத்தில் வீரபத்திரரைக் குலதெய்வமாகக் கொண்டவர். சேதுகாவல சேனாதிராச மாப்பாணமுதலியார் அரசு நிலையிட்ட சந்திரசேகர மாப்பாணமுதலியார் ஒரு கொடிய நோயால் பீடிக்கப்பட்டு அவஸ்தைப்பட்டதை அறிந்த இவரின் நண்பனும் குளக்கோட்டு மகாராசனின் பரம்பரையினருமாகிய இளவரசன் ஒருவன் அவரிடம் வந்து யாழ்ப்பாணத்திலுள்ள கீரிமலைப் புனிதத் தீர்த்தத்தில் நீராடி வர இந்நோய் குணமாகும் எனக் கூறியதன் பிரகாரம் சந்திரசேகரன் பாரியார் பார்வதி தனது புத்திரர்களாகிய தனபாலசிங்கம், குணபாலசிங்கம் மற்றும் தனது பரம்பரைப் புரோகிதர் காசிப்பிராமணர், கோபாலகுருக்கள் மற்றும் பதினென் வரிசையுடன் 1365ஆம் ஆண்டு வைகாசி மாதம் 20ஆம் நாள் நாகபட்டினத் துறைமுகத்தில் கப்பல் ஏறி யாழ்ப்பாணத்தில் வீரமாகாளியம்மன் துறையில் வந்திறங்கினர். கீரிமலைக்குச் செல்லவேண்டிய சந்திரசேகரனும் அவனது பரிவாரங்களும் மேற்கே செல்வதற்குப் பதிலாகத் தென்கீழ்த்திசையில் நகர்ந்த காரணத்தால் உடுப்பிட்டியை வந்தடைந்தனர். இவ்விடத்தில் ஒரு குளத்தையும் நன்கு செழித்த மாமரம் நிறை காய்களுடன் இருப்பதைக் கண்ணுற்று அவ்விடத்தில் தங்கினர். இவ்விடமே முருகன் தற்போது பரிவாரமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் இடமாகும்.

(இன்னும் வரும்)



# மாணவர் மாண்பினை உயர்த்தி நிற்கும் திருஇருதயக் கல்லூரி

(சென்றவாரத் தொடர்ச்சி)

இக்கல்லூரியின் மைந்தர்களாக Dr.கேதீஸ்வரன், Dr.ச.வீஜேம்ஸ் ஞானந்தராசா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மேலும் பல அரசியல் விற்பனர்களையும் அறிஞர்களையும் இக்கல்லூரி தந்து வருவது பாரிய வரலாற்று உண்மையாகும்.

இக்கல்லூரி பௌதீக வளங்களைப் பொறுத்தவரை பாரிய சவால்களைத் தொடர்ந்தும் சந்தித்து வருகின்றது. வகுப்பறைகள் நிலையாக மூடப்படாத சுண்ணாம்புக் கட்டடத்திலேயே இயங்கிவருகின்றன. விளையாட்டுத்துறையைப் பொறுத்தவரையில் விளையாட்டு மைதானம் இல்லாத குறையின் காரணமாகப் பின்தங்கிய நிலையில் உள்ளது கவலைக்குரிய அம்சமாகும்.

இதன் வளர்ச்சிப் போக்கை எடுத்துநோக்கினால் 1913 ஆம் ஆண்டு தொடக்கம் ஆண்கள் பாடசாலையாக இயங்கிவந்த இக்கல்லூரி, 1917 முதல் கலவன் பாடசாலையாக இயங்க ஆரம்பித்தது. இக்கல்லூரியின் ஆரம்பப்பிரிவு ஒரு மாதிரிப் பாடசாலையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 1978 முதல் இப்பாடசாலையில் உயர்தர வகுப்புகளும் இயங்கிவருகிறது.

இக்கல்லூரியின் மாணவ, மாணவிகள் பாடவிதான, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்று வருவது சிறப்பு அம்சமாகும். புலமைப் பரிசில், கல்விப் பொதுத்தராதர சாதாரணம், உயர்தரம் போன்ற பரீட்சைகளில் இக்கல்லூரி மாணவர்கள் சிறந்த அடைவுகளைப் பெற்றுவருகின்றனர்.

2007 ஆம் ஆண்டு சிறுவர் நாடகத்தில் மாவட்டத்தில் இரண்டாம் இடத்தை இக்கல்லூரி மாணவர்கள் பெற்றதுடன், அதே காலகட்டத்தில் தேசிய மட்ட சிறுவர் பிரிவு பேச்சுப் போட்டியில் பங்குபற்றியது முக்கிய அம்சம் ஆகும். 2006 ஆம் ஆண்டு முதல் இக்கல்லூரியில் பொறுப்பேற்று செயற்பட்டுவரும் அதிபரான வ. கணபதிப்பிள்ளையின் நிர்வாகத் திறமை காரணமாக இக்கல்லூரி அபிவிருத்திப் பாதையில் பயணித்து வருகின்றது.

பாரிய பௌதீக வளப் பற்றாக்குறை உடைய இப்பாடசாலையைச் சிறந்த ஒரு பாடசாலையாக உருவாக்க சமூகத்திடமும், கல்வித்திணைக்களத்திடமும் உதவியை எதிர்பார்த்து நிற்கின்றனர். அவ்வாறு கண்திறந்தால் இப்பாடசாலை எழுச்சி பெற்று, அனைத்து வளங்களையும் உடைய சிறந்த ஒரு பாடசாலையாக மாறுமென எதிர்பார்க்கலாம். ***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிஸ் மினரல் நிறுவனத்தின் (யாழருவி)

Swiss Mineral

# ஐந்தாம் ஆண்டு பூர்த்தி சிறப்பிதழ்

## மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு பணியாற்றுவதை பாராட்டுகிறேன்



யாழ்.குடாநாட்டிலிருந்து யாழருவி என்னும் சுத்தமான குடி தண்ணீரை சந்தைப்படுத்தி, இன்றுடன் ஐந்து ஆண்டுகள் பூர்த்தியடைவதினையிட்டு அந்நிறுவனத்திற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்.குடாநாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, குறைந்த வசதிகளுக்கு மத்தியிலும் சுத்தமான குடி தண்ணீர்.ஐந்து வருட காலமாகத் தயாரித்து வழங்கி வரும் நிறுவனத்தின் பணிகளைப் பாராட்டுவதுடன், உள்ளூரிலிருந்து யாழருவி குடிநீரைத் தயாரிப்பது போன்று மக்களுக்குப் பயன்படும் விதத்திலான பல்வேறு உற்பத்திப் பொருட்களைத் தயாரித்து சந்தைப்படுத்துவதின் மூலம், எமது பிரதேசத்தின் பொருளாதாரம் செழிப்படைவதுடன்,மக்களின் அத்தியாவசியத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியுமென்பதை இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகின்றேன்.

அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா,
*சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு.*

## அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி



''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்'' என்ற வள்ளுவன் சொல்லுக்கினங்க மிகுந்த உளத்திண்மையுடன் தொடங்கப்பட்ட''யாழருவி சுவிஸ் மினரல்'' இன்று எமது மண்ணில் சேவையில் மகத்தான வெற்றியுடன் ஐந்தாண்டுகளை நிறைவு செய்துள்ளது.

Global Business Network என்ற நிறுவனத்தின் கீழ் செயற்படும் ''யாழருவி சுவிஸ் மினரல்'' இன்று எம்மக்களின் அன்றாட வாழ்வுடன் இரண்டறக் கலந்து விட்டது. பல அத்தியாவசிய சேவைகள், நிவாரணப் பணிகள் என்பவற்றிற்கு உறுதுணையாய் நின்று செயற்பட்ட ''யாழருவி சுவிஸ் மினரலின்'' சேவை சுனாமி மற்றும் வெள்ள அனர்த்தங்களின் போது எம் மக்களின் மத்தியில் உன்னதமாய் உணரப்பட்டது.

உள்ளூர் மூலவளங்களைக் கொண்டு,எம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தொடங்கப்பட்ட இக்கைத்தொழில் நன்முயற்சிகளுக்கு நல்லதொரு சான்றாய் அமைந்துள்ளது.''யாழருவி சுவிஸ் மினரல்'' தூய அருவியாய் தொடர்ந்தும் செயற்பட்டு, நாடளாவிய ரீதியில் தனது உற்பத்திகளை சந்தைப்படுத்தி,எமது மக்களுக்கு சிறந்த தொழில் வாய்ப்புக்களை வழங்கிடவும், உள்ளூர் வளங்களுடன் புதிய கைத்தொழில்களை தொடங்குவோர்க்கு நல்லதோர் எடுத்துக்காட்டாய் விளங்கிடவும், இந்நாளில் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

அரச அதிபர் கே.கணேஷ்

## மக்கள் சேவை பயன்மிக்க தார்மீக சேவையாகும்



யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களின் சுத்தமான குடிநீர் தேவையை நிவர்த்தி செய்து வருகின்ற 'சுவிஸ் மினரல்' நிறுவனம் இவ்வருடம் ஐந்தாவது ஆண்டு நிறைவை கொண்டாடுவது அறிந்து மனமகிழ்வடைகின்றேன். மனிதரின் உடல் நலத்திற்கு சுத்தமான நீர் இன்றியமையாததாகும் அந்த வகையில் யாழ்ப்பாண மக்களின் ஆரோக்கியமான வாழ்வை எண்ணக்கருவாகக் கொண்டு சேவையாற்றி வரும் இந்நிறுவனம் நல்லூர் பிரதேசத்தில் அமைந்து ஆற்றுகின்ற பணிகள் நன்றியுடன் பாராட்டப்பட வேண்டியவையாகும்.

கடந்த ஐந்து ஆண்டுகால சேவையில் இந்நிறுவனம் தனது உற்பத்தியை குடாநாடு முழுவதும் விநியோகித்து மக்கள் தாகம் தீர்த்தது மட்டுமல்லாமல் குடாநாட்டு மக்கள் சந்தித்த பல அனர்த்தங்களில் அவர்களுக்கு மகத்தான சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் சுனாமி வெள்ள அனர்த்தம், நிஷா புயல் அனர்த்தம் மற்றும் மக்களின் மீள்குடியமர்வு போன்ற விசேட சந்தர்ப்பங்களில் 'சுவிஸ் மினரல்' நிறுவனம் தனது மகோன்னதமான சேவையை காலத்தின் தேவை அறிந்து ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் யாழ மாவட்டத்தில் இடம் பெறும் அரச தனியார் வைபவங்கள் மற்றும் விழாக்கள் என்பவற்றில் 'சுவிஸ் மினரல்' தண்ணீர் போத்தல்களின் இருப்பை கண்டு கொள்ள முடிகின்றது. யாழ் மக்களின் அன்றாட வாழ்வில் இந்நிறுவன உற்பத்திகள் நீக்க முடியாத இடத்தை பிடித்துள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். பணத்தை வீணே செலவு செய்யாது மக்கள் சேவையையும்,பயன்மிக்க தார்மீகக் கடமையாகவும் காலத்திற்கேற்ப பணியாற்றிவரும் 'சுவிஸ் மினரல்' நிறுவனத்தை முன்மாதிரியாகக் கொண்டு பல நிறவனங்கள் யாழ் மண்ணில் உருப்பெறல் அவசியமானதாகும். அந்த வகையில் சுவிஸ் மினரல் நிறுவனம் தமது சுத்தமான குடிநீர் சேவையை போல வேறும் பல பயன்மிக்க மனிதாபிமான வர்த்தக முயற்சியில் ஈடுபடுதல் வேண்டும் என கேட்டுக் கொண்டு இனிவரும் காலங்களில் இந்நிறுவனம் பற்பல முயற்சிகளுக்கு இடமளித்து யாழ் மக்களின் நன்மதிப்பை பெற்று வளர வேண்டும் என்பதோடு தேசிய மட்டத்தில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் தமது படைப்புக்கள் மூலமாக புகழ் பரப்ப வேண்டும் என கேட்டுக் கொள்வதுடன் அவர்களால் வெளியிடப்படுகின்ற 'யாழருவி' என்னும் சிறப்பு மலர் பல்வேறு மட்டத்தினையும்சென்றடைந்து புகழ் பரப்பவேண்டும் என உளமாரவாழ்த்துகின்றேன்.

பா.செந்தில்நந்தனன், பிரதேச செயலர்,நல்லூர்.




## சர்வதேச தரத்தில் குடிதண்ணீர் வழங்குகிறோம்

அன்பார்ந்த உறவுகளே வணக்கம்!

2004 ம் ஆண்டு சமாதானத்தின் அடையாளமாக யாழ்குடாநாட்டில் எமது அயராத முயற்சியாலும் சுவிஸ் நாட்டு அதிகாரிகளினது ஆதரவினாலும் , யாழ்.குடாநாட்டு அதிகாரிகளினதும், பணியாளர்களது ஒத்துழைப்புடனும் பல தடைகளை தாண்டி சுவிஸ் மினரல் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

சர்வதேச தரத்தில் உள்ளூரில் மினரல்கள் அடங்கிய குடிநீரைத் தயாரித்து எமது மக்களுக்கு வழங்கும் எமது குறிக்கோள்களை அடைவதற்கு எமது நிறுவனம் சந்தித்த தடைகளையும், சாவால்களையும், நடைமுறை சிக்கல்களையும் வார்த்தைகளுக்குள் அடக்கி விடமுடியாது.

இத்தடைகளையும் சவால்களையும் கண்டு நாம் எமது முயற்சியை இடை நடுவில் விட்டுவிடாமல் தொடர்ந்தும் அயராது உழைத்தோம். அதன் பலனாக முதற்தடவையாக நாம் சுனாமி அனர்த்தத்தின்போது குடாநாட்டு மக்களுக்கு ஏற்பட்ட குடி தண்ணீர் தட்டுப்பாட்டை எமது சுவிஸ்மினரல் நிறுவனம் மூலம் உடன்டியாக நிவர்த்தி செய்தோம். யாழ். குடாநாட்டுக் கான போக்குவரத்துகள் தடைப்பட்டபோது யாழ். மருத்துவமனையினதும், மின்சாரசபையினது புதிய இயந்திரங்களை இயக்குவதற்கும் சுவிஸ்மினரல் நிறுவனத்தின் மூலம் யாழ்குடாநாட்டு மக்களின் அத்தியாவசிய தேவைகளை இன்றுவரை பூர்த்திசெய்து வருவது எமது நிறுவனத்தின் குறிக்கோள்களுக்கு கிடைத்த வெற்றியாகவே நாம் கருதுகின்றோம்.

எமது நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இன்றுவரை யாழ் குடாநாட்டு மக்களுக்கான அனைத்து நிவாரணப்பணிகளுக்குமான எமது முழுமையான ஆதரவை வழங்கி வருவது எமக்கு மிகப் பெரும் ஆத்ம திருப்தியையும் முழுமையான மனநிறைவையும் தருகின்ற இவ்வேளையில் இலங்கை தரநிர்ணைய சபை எமது நிறுவனத்திற்கு SLS என்று அழைக்கப்படும் இலங்கை தரநிர்ணய சபையின் தரச்சான்றிதழ்களை பெறும் முதலாவது குடாநாட்டு குடி தண்ணீர் தயாரிக்கும் நிறுவனமாக எமது நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருப்பது எமது நிறுவனத்திற்கும், எமது நிறுவனத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட அனைவருக்கும் கிடைத்த வெற்றியாகவே சுவிஸ்மினரல் நிறுவனம் கருதுகின்றது.

கடந்த 5 வருடங்களாக எமது நிறுவனத்திற்கு அனைத்து வழிகளிலும் ஆதரவு தந்துதவிய அதிகாரிகளுக்கும், ஊடக நிறுவனத்தாருக்கும்,வியாபார நிறுவனங்களுக்கும், முக்கியமாக வாடிக்கையாளர்களுக்கும், எமது நிறுவன பணியாளர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன்.

5வது வருடத்தில் கால்பதிக்கும் எமது நிறுவனம் எதிர்காலத்தில் யாழ்குடாநாட்டு உற்பத்தியாளர்களின் உற்பத்தி பொருள்களை வெளிநாடுகளில் சந்தைப்படுத்தும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதை உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நன்றி

உள்ளூர் உற்பத்திகளை சர்வதேச தரத்தில் உருவாக்குவோம்.

மேலதிக விவரங்களுக்கு:
**Global Business Network**
*231,Temple Road, Nallur, Jaffna.*

## தொழில்துறை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கட்டும்



உள்ளூர் உற்பத்திகளை சர்வதேச தரத்தில் உருவாக்கும் நோக்குடன் 2004 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட 'சுவிஸ் மினரல்' என்ற தங்கள் நிறுவனம் கடந்த 5 ஆண்டு காலத்தில் நாட்டில் ஏற்பட்ட பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து இம்மாதம் 24 ஆம் திகதி 5 ஆவது ஆண்டில் வெற்றிகரமாக கால்பதிப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

மழைக்காலத்தில் முளைக்கும் காளான்களைப் போல காலத்துக்குக்காலம் பெரும் எடுப்போடு ஆட்டமாடும் பல நிறுவனங்கள் வந்த வேகத்திலேயே மடிந்து விடுவதையும் கண்டிருக்கின்றோம். அந்த வகையில் இல்லாது நாட்டின் அரசியல், பொருளாதார பிரச்சினைகளுக்கும், சுனாமி ,நிஷா போன்ற இயற்கைப் பேரழிவுகளுக்கும் முகங்கொடுத்து மக்களின் சேவையை மனதில் கொண்டு 5 ஆண்டு காலம் வெற்றிகரமாக தங்கள் வர்த்தக சேவையை முன்னெடுத்துச் சென்றுள்ளீர்கள். மேல் நாட்டுத் தயாரிப்புகளுக்கு இணையாக நம் நாட்டிலும் தயாரிக்க நம்மால் இயலும் என்பதை கடந்த 5 ஆண்டு காலத்தில் அனுபவரீதியாக நிரூபித்துக் காட்டியுள்ளீர்கள்.

தங்கள் முயற்சி மென்மேலும் 'ஆல்போல் தழைத்து' நாட்டின் தொழிற்துறை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என இதயம் மலர வாழ்த்துவதுடன், தங்கள் முயற்சிகளுக்கு மேலும் பல்வளமும், பல நலமும் கிடைக்க இறையாசி வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

திருமதி.யோ.பற்குணராசா,
*மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்.*

## மக்கள் வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ள நிறுவனம்



இன்று உலகம் மிகவும் வேகமாக மாற்றமடைந்து கொண்டிருக்கின்றது. இந்த மாற்றத்திற்கேற்ப சேவைத்துறையும் மாற்றமடையவேண்டியது காலத்தின் தேவையாகும். ஒரு நாட்டின் அபிவிருத்தியில் சேவைத்துறையின் பங்கு முக்கியமானது.அந்தவகையில் ''மக்கள் சேவையே மகேசன் சேவை'' என்ற தாரக மந்திரத்தினைத் தனதாக்கிய சுவிஸ் மினரல் நிறுவனமானது அளப்பரிய சேவையை எம்மவருக்கு ஆற்றி வருவது யாவரும் அறிந்ததே

குறுகிய காலப்பகுதியில் நிறைவான தரமான சேவையினை ஆற்றி உயர்ந்து நிமிர்ந்து நிற்கும் இந்நிறுவனத்தின் வளர்ச்சி கண்டு அகமகிழ்கின்றேன். ஐந்தாண்டுகள் சேவை புரிந்து சுவிஸ் மினரல் நிறுவனமானது பெருமைக்குரிய நிறுவனமாக விளங்குவதுடன் வணிக உலகிலே தனக்கென முத்திரையைப்பதித்துக் கொண்ட இந்நிறுவனத்தின் ஐந்தாண்டு நிறைவுநாளில் வாழ்த்துகளை வழங்குவதில் மகிழ்கின்றேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். மக்களின் அன்றாடவாழ்வில் நீர்முக்கிய இடத்தினை வகிக்கின்றது சுத்தமான நீர் அருந்துவதால் மனிதன் சுகதேகியாக வாழமுடியும். யாழ்ப்பாணமக்களின் அன்றாட வாழ்விற்கு மட்டுமன்றி அல்லல்படும் மக்களின் இன்னல் போக்கும் நிறுவனமாகவும் திகழந்து வருகின்றது.

அத்தியாவசியதேவைகள் மின்சார உற்பத்தி மற்றும் நிர்வாகப்பணிகள் எனப் பல்வேறு பயன்பாட்டிற்கும் இந்நிறுவனம் உந்துசக்தியாக இருந்து உதவுகின்றது.

ஆழிப்பேரலையின் போது அவதிப்பட்ட எம்மவர்களிற்கு அபயக்கரம் நீட்டியது மட்டுமன்றி அண்மையில் வன்னியில் இருந்து யாழ் வந்த மக்களினதும் உடனடித் தேவைக்குதவியதை நான் அறிவேன். உள்ளூர் உற்பத்தியினைச் சர்வதேச தரத்திற்கு உயர்ந்தும் பணியில் இந்நிறுவனம் அரும்பாடுபட்டு வெற்றியும் கண்டுள்ளது.

இவ்வாறன சிறப்புகள் நிறைந்து யாழ்ப்பாண மக்களின் வாழ்வில் பின்னிப்பிணைந்து இந்நிறுவனம் எமது நல்லூர் பிரதேசத்தில் அமைந்திருப்பது எமக்கெல்லாம் பெருமை சேர்க்கும் ஒரு விடயமாகும்.

செயற்கரிய சேவையால் தனக்கென இடம் பிடித்து உயர்ந்த இந்நிறுவனத்தின் வளர்ச்சி கண்டு மகிழ்வதுடன் ஐந்தாண்டு அகவையை அகமகிழ்ந்து கொண்டாடும் இந்நிறுவனம் இன்னும் பல நூற்றாண்டு காலம் சேவையினை வழங்கி சுகதேகிகளாக மக்கள் உருவாக்கத்தில் சிறப்புடன் பிரகாசிக்க இறையருள் வேண்டி வாழ்த்துகள் பலவும் கூற இன்புறுகின்றேன்.

இ.இராகினி,கிராம உத்தியோகத்தர்
*ஜே/108 நல்லூர் தெற்கு.*

## சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் வழங்கும்பணி தொடரட்டும்

எமது யாழ்.மாநகரசபைப் பகுதியில் இருந்து உற்பத்தியாகும் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் கடந்த 5வருடங்களாக பல தடைகளைத் தாண்டி தொடர்ந்தும் செயற்பட்டு வருவது பாராட்டிற்குரியது. இந்த அளப்பரிய முயற்சி தொடர்ந்தும் தனது செயற்பாட்டினை தொடர்ந்து ஆற்றுவதற்கு எமது பாராட்டுகளைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

Dr. ம.மரியதாஸ், சுகாதார வைத்திய அதிகாரி,
*மாநகரசபை, யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்திய 2 ஆவது டெஸ்ட் பலத்த பாதுகாப்பின் மத்தியில் இன்று

## கான்பூரில் வீரர்கள் தீவிர பயிற்சி

கான்பூர், நவ. 24

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி உத்தரப்பிரதேசத்திலுள்ள கான்பூரில் இன்று தொடங்குகிறது.

கான்பூர் டெஸ்ட் போட்டியில் பங்குபெறும் இந்திய வீரர்கள் நேற்றுமுன்தினம் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர். இதில், முன்னணி வேகப்பந்துவீச்சாளர் ஜாகிர் கான் இடம்பெறவில்லை.

இந்தியா, இலங்கை அணிகள் முதல் கட்டமாக 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் மோதுகின்றன. அகமதாபாத்தில் நடந்த முதல் டெஸ்ட் சமனிலையில் முடிந்தது. இரண்டாவது டெஸ்ட் உத்தரப்பிரதேசத்தில் உள்ள கான்பூரில் இன்று தொடங்குகிறது. இதில் சாதிக்க, இந்திய வீரர்கள் நேற்றுமுன்தினம் பயிற்சியில் ஈடுபட்டனர்.

கடந்த போட்டியில் சதம் கடந்த சச்சின் நீண்ட நேரம் பயிற்சி செய்தார். பயிற்சியாளர் கேரி கிறிஸ்டன் பந்துவீச, மிக நேர்த்தியாக



துடுப்பாட்டம் செய்தார். இவரை தொடர்ந்து சேவாக், லட்சுமணும் மிகுந்த பொறுப்புடன் பயிற்சி பெற்றனர். யுவராஜ் சிங் பந்துவீச்சில் மட்டும் ஈடுபட்டார்.

டெஸ்ட் வாய்ப்பை எதிர்நோக்கி காத்திருக்கும் ஸ்ரீசாந்த், பிரக்யான் ஓஜா, பத்ரிநாத், முரளி விஜய் ஆகியோர் முறையாக பயிற்சி பெற்றனர். ஆனால், காயத்தில் இருந்து மீண்ட ஜாகிரை காண முடியவில்லை. இவர் பயிற்சியில் இருந்து விலகியதற்கான காரணம் தெரியவில்லை.

இப்படி அனைத்து வீரர்களும் பொறுப்பாக பயிற்சி செய்தபோது ஹர்பஜன் மட்டும் குறும்புத்தனமான செயல்களில் ஈடுபட்டு நேரத்தை வீணடித்தார்.

இப்போட்டிக்காக இலங்கை வீரர்கள் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பயிற்சியில் ஈடுபட்டனர். நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு இலங்கை வீரர்கள், உடற்பயிற்சி செய்தனர். அடுத்து மஹேல ஜெயவர்த்தன, டில்ஷான் மற்றும் சங்ககரா உள்ளிட்ட வீரர்கள் உள்ளூர் பந்துவீச்சாளர்களின் உதவியுடன் துடுப்பாட்டப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

அடுத்து முரளிதரன், மெண்டிஸ் போன்றவர்கள் பந்துவீச்சுப் பயிற்சி செய்தனர்.

இங்கு துப்பாக்கியுடன் மர்ம மனிதன் பிடிபட்டதை அடுத்து, வீரர்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. துப்பாக்கி ஏந்திய பொலிஸார், மைதானம் முழுவதும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

இதேவேளை, கான்பூர் டெஸ்ட் போட்டிக்கு இதுவரை 10 சதவீத டிக்கெட்டுகள் மட்டும்தான் விற்பனையாகியுள்ளன. போட்டி நடக்கும் கிரீன் பார்க் மைதானத்தில் மொத்தம் 25 ஆயிரத்து 598 ரசிகர்கள் அமர்ந்து போட்டியைப் பார்க்கலாம். ஆனால் இதுவரை 2528 டிக்கெட்டுகள்தான் விற்பனையாகியுள்ளன. அதிலும் மாணவர்கள்தான் டிக்கெட்டுகள் வாங்குவதில் ஆர்வமாக உள்ளனராம்.

இதுகுறித்து உத்தரப்பிரதேச கிரிக்கெட் சங்க இணைச்செயலாளர் பி.டி.பதக் கூறியது:

போட்டி நடக்கும் நாளில்தான் ரசிகர்கள் வரிசையில் நின்று டிக்கெட்டுகள் வாங்குவார்கள். பெரும்பாலான மக்கள் டெஸ்ட் போட்டியை காண ஆர்வமில்லாமல் உள்ளனர். இந்தப் போட்டியை நடத்துவதற்காக நாங்கள் மாநில அரசுக்கு 50 லட்சம் ரூபா கொடுத்துள்ளோம் - என்றார்.

# சென்னைப் பொலிஸிடம் சிக்கிய நியூஸி. வீரர்கள்



வெலிங்டன், நவ. 24

சென்னை வந்த நியூஸிலாந்து வீரர்கள் நீல் புரூம், ஆரன் ரெட்மாண்ட் ஆகியோர் குடித்து விட்டு போதையில் சர்ச்சை கிளப்பிய விடயம் தற்போது அம்பலமாகியுள்ளது. பொலிஸ் விசாரணைக்குப் பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடந்த புச்சிபாபு கிரிக்கெட் தொடரில் பங்கேற்க நியூஸிலாந்து 'ஏ' அணியினர் சென்னை வந்தனர்.

இந்த அணியில் ஷேன் பாண்ட், கைல் மில்ஸ், புரூம், ரெட்மாண்ட் உள்ளிட்ட நட்சத்திர வீரர்கள் இடம்பெற்றிருந்தனர்.

இதில் முன்னணித் துடுப்பாட்டக்காரர்களான புரூம், ரெட்மாண்ட் பாதுகாப்பு விதிமுறைகளை மீறி ஹோட்டலை விட்டு ரகசியமாக வெளியேறியுள்ளனர். பின்னர் இரவு விடுதிக்குச் சென்ற இவர்கள் குடித்துள்ளனர். அருகில் இருந்த ஏ.டி.எம்., சென்று பணம் எடுத்துள்ளனர். போதை தலைக்கேற தெருவோரத்தில் தங்கியிருந்த ஏழைகளுக்கு பணத்தை வாரி வழங்கியுள்ளனர்.

இதனைப் பார்த்ததும் அங்கு மக்கள் கூட்டம் திரள, பெரும் அமளி ஏற்பட்டுள்ளது. தகவல் அறிந்ததும் அங்கு வந்த பொலிஸார், இருவரையும் அழைத்துச் சென்று விசாரணை நடத்தியுள்ளனர்.

இதில் நியூஸிலாந்து வீரர்கள் என்பது உறுதி செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

### விளையாட்டு அரங்குகளில்

# மராட்டிய வீரர்களுக்கு சச்சின் உதவவில்லை

## பால்தாக்கரே மீண்டும் தாக்கு



இந்தியக் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர், மராட்டிய வீரர்களுக்கு உதவவில்லை - என்று சிவசேனைக் கட்சி கூறியுள்ளது.

மும்பை நகரம், இந்தியர் அனைவருக்கும் சொந்தம். நான் மகாராஷ்டிரத்தில் பிறந்தாலும் முதலில் இந்தியன் என்று சச்சின் டெண்டுல்கர் சமீபத்தில் கூறியிருந்தார். இதற்கு சிவசேனை கடும் ஆட்சேபனை தெரிவித்திருந்தது.

இந்நிலையில் மீண்டும் சச்சினைத் தாக்கி சிவசேனைக் கட்சியின் எம்.பி.யான சஞ்சய் ரெத், சாம்னா பத்திரிகையில் எழுதியுள்ளார். அந்தக் கட்டுரையில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு -

சச்சின் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் மராட்டிய வீரர்களுக்கு அவர் உதவவில்லை. சச்சினை மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த சுனில் காவஸ்கருடன் ஒப்பிடும் போது காவஸ்கர் சிறந்தவர்.

காவஸ்கர் ஏராளமான மராட்டிய வீரர்களுக்கு டெஸ்ட் போட்டிகள் விளையாடும் வாய்ப்பைப் பெற்றுத் தந்தார். அவர் அணித் தலைவராக இருந்த போது தான் மகாராஷ் டிரத்தைச் சேர்ந்த சுரு நாயக், சுல்பிகர் பார்க் கர் போன்ற டெஸ்ட் போட்டியில் விளையாடும் வாய்ப் பைப் பெற்றனர்.

ஆனால் சச்சினோ மராட்டிய வீரர்கள் ஒருவருக்கும் உதவவில்லை. மற்றவர்களை விட்டுவிடுங்கள். சச்சின் தனது ஆருயிர் நண்பர் வினோத் காம்ப்ளிக்குக் கூட ஆதரவாகப் பேசவில்லை.

இந்த விடயத்தில் காவஸ்கர், நிஜமான மராட்டியர். இப்போதும் கூட அவரை நாட்டு மக்கள் விரும்புகின்றனர். கிரிக்கெட் மூலம் மிகப் பெரிய பணக்காரராக மாறியுள்ளார் சச்சின் - என்றார்.

# பிலிப்பைன்ஸில் அரசியல்வாதிகள் - பத்திரிகையாளர் துப்பாக்கிதாரிகளால் கடத்தப்பட்டு சுட்டுப் படுகொலை!

## உள்ளூராட்சி தேர்தல் மோதலின் எதிரொலி

மணிலா, நவ. 24

தென் பிலிப்பைன்ஸில் துப்பாக்கிதாரிகளால் கடத்தப்பட்ட 21 அரசியல்வாதிகளும், பத்திரிகையாளர்களும் சடலங்களாக மீட்கப்பட்டனர் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ள வேட்பாளர் ஒருவருக்கான வேட்பு மனுவைத் தாக்கல் செய்யப் புறப்பட்ட இவர்கள், ஆயுததாரிகளால் கடத்தப்பட்டுள்ளார்கள் என்றும் இவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன.

பிலிப்பைன்ஸின் தென் தீவான மிண்டானாவோவில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை இக்கடத்தல் சம்பவமும் படுகொலைச் சம்பவமும் இடம்பெற்றுள்ளன.

உள்ளூராட்சித் தேர்தலில் உள்ளூர் நகரபிதா இஸ்மாயில் மங்கு டடாட்டு போட்டியிடவுள்ளார். இவருக்கான வேட்பு மனுவைத் தாக்கல் செய்வதற்காக மாகுயிண்டானாவோ என்னுமிடத்திலுள்ள தேர்தல் அலுவலகத்தை நோக்கி இவர்கள் பயணித்துக் கொண்டிருந்தபோது கடத்தப்பட்டுள்ளார்கள் என அதிகாரிகள் விவரித்தார்கள்.

முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட இம்மாகாணத்தின் ஆளுநர் பதவிக்கே, நகரபிதா மங்கு டடாட்டு போட்டியிட திட்டமிட்டிருந்தார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இவர்கள் மூன்று வாகனங்களில் தேர்தல் அலுவலகத்தை நோக்கிப் புறப்பட்டுள்ளார்கள். அச்சமயம் துப்பாக்கிதாரிகள் இவர்களின் வாகன அணியை நிறுத்தி, வாகனங்கள் சகிதம் அனைவரையும் கடத்திச் சென்றுள்ளனர் என இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தார். எதிரணியினருக்கு ஆதரவான ஆயுதக் கும்பலே இதனை செய்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடத்தப்பட்டவர்களும், வாகனங்களும் தடுத்துவைக்கப்பட்டிருந்த இடம் தொடர்பான தகவல் எட்டியது. இதையடுத்து, அவ்விடத்துக்கு எமது துருப்புகள் விரைந்தன. எனினும், கடத்தப்பட்டவர்கள் அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளமையைக் கண்டு துருப்புகள் அதிர்ச்சியடைந்துள்ளன'' என மேஜர் ஜெனரல் அல்-பிரட்டோ கேடொன் உள்ளூர் வானொலிக்குத் தெரிவித்தார்.

''நாங்கள் 21 சடலங்களை மீட்டுள்ளோம். ஏனையோரைக் கண்டுபிடிப்பதற்கான தேடுதல் பணி நீடிக்கின்றது. 13 பெண்களினதும், 8 ஆண்களினதும் சடலங்களே மீட்கப்பட்டுள்ளன. கொலையுண்ட பெண்களில் உள்ளூர் நகரபிதா மங்கு டடாட்டுவின் பாரியாரும் அடங்குவார்'' என்றும் மேஜர் ஜெனரல் மேலும் விவரித்தார்.

30 ஆயுததாரிகளைக் கொண்ட குழுவொன்றே இவர்களைக் கடத்திச் சென்றது என்ற தகவலும் வெளியாகியுள்ளது. மிண்டானோவோ தீவின் பல பகுதிகளிலும் மகுயின்டானோவோவிலும் தேர்தல்கால வன்முறைகள் தலைதூக்கி வருகின்றன.

கம்யூனிஸவாதிகளும், முஸ்லிம்களும் துருப்புகளுக்கு எதிராகப் போராடி வருகிறார்கள். அதேவேளை, உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு தனிப்பட்ட ஆயுதக் குழுக்கள் ஆதரவு அளித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

### உலக அரங்கில்

# சர்வதேச விண்வெளி நிலையத்தில் புதிய சாதனங்கள் பொருத்தப்பட்டன

வாஷிங்டன், நவ. 24

அட்லாண்டிஸ் விண்வெளி ஓடத்தில் தாம் கொண்டு சென்ற புதிய சாதனங்களை சர்வதேச விண்வெளி நிலையத்தில் விண்வெளி வீரர்கள் சனிக்கிழமை பொருத்தினர். அதற்காக அவர்கள் விண்ணில் நடந்தனர். சில பராமரிப்புப் பணிகளையும் மேற்கொண்டனர்.

இந்தப் பயணத்தின்போது மொத்தம் 3 தடவைகள் விண்ணில் நடை மேற்கொள்ள அவர்கள் திட்டமிட்டு 2 ஆவது நடையில் இந்தப் பணிகளை முடித்தனர். அடுத்த நடைப் பயணத்தை நேற்று திங்கட்கிழமை முடித்தனர்.

சாதனங்களைப் பொருத்தும் பணியில் விண்வெளி வீரர்கள் மைக் போர்மேன், ராண்டி பிரெஸ்னிக் ஆகியோர் ஈடுபட்டனர். இவர்களில் பிரெஸ்னிக் அப்பாவாகும் மகிழ்ச்சியில் தனக்கு இட்ட பணியில் முதலில் ஆர்வம் காட்டவில்லை.

அவரது மனைவிக்கு எந்த நேர்த்திலும் இரண்டாவது குழந்தை பிறக்கலாம் என்ற நிலை இருந்தது. எனினும், ஞாயிற்றுக்கிழமை அவரது மனைவி ரெபேக்கா, ஹுஸ்டனில் இரண்டாவது குழந்தையைப் பிரசவித்தார். அதுவும் பெண் குழந்தை. அதனால் விண்வெளியில் அப்பாவான இரண்டாவது நபர் என்னும் பெருமை பிரெஸ்னிக்குக்கு கிடைத்துள்ளது.

முதல் விண்வெளி வீரர் மிக்கி பிங்கி, 2004 ஆம் ஆண்டு விண்வெளியில் இருந்த சமயம், அவரது பாரியார் குழந்தை ஒன்றை பிரசவித்தார். அதனால் அவர், விண்வெளி முதல் தந்தை என்ற பெருமையைப் பெற்றார்.

தற்போது இரு விண்வெளி வீரர்களும் விண்வெளி நடைப்பயண நேரத்தைக் குறைத்துக் கொண்டபோதிலும் தமக்குக் கொடுக்கப்பட்ட பணிகளை நேரத்துக்கு முன்னரே முடித்துவிட்டனர் என நாசா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

# அழுத்தங்களால் சிறுவர்கள் விரைவில் முதுமை அடைகின்றனர்

## அமெ. ஆய்வாளர்கள் கண்டுபிடிப்பு

வாஷிங்டன், நவ. 24

துஷ்பிரயோகம் மற்றும் அழுத்தங்களால் பாதிக்கப்படும் சிறுவர், சிறுமியர் விரைவில் முதுமையை அடைந்துவிடுகின்றனர் என அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வு மூலம் புலனாகியுள்ளது.

சிறுவர் பராயத்தில் ஏற்படக்கூடிய உடல், உள ரீதியான துஷ்பிரயோகங்களால் உடல் விரைவில் முதுமையடைந்து விடுகிறது என அமெரிக்க ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அமெரிக்காவின் பிறவுண் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மரபணுக்களில் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர், சிறுமியரது கலங்கள் விரைவில் முதுமையடைந்து விடுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. உள ரீதியான அழுத்தங்களும் விரைவில் முதுமையடைவதற்கான ஓர் காரணி என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# இஸ்ரேல் - பலஸ்தீன மோதல்; 20 ஆண்டுகளில் 8,900 பேர் பலி!

ஜெருசலேம் (இஸ்ரேல்), நவ. 24

இஸ்ரேல் - பலஸ்தீன நாடுகளுக்கிடையே நடைபெற்றுவரும் சண்டையில் கடந்த 20 ஆண்டுகளில் 8 ஆயிரத்து 900 பேர் பலியாகியுள்ளனர் என மனித உரிமை அமைப்பினர் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர்.

இஸ்ரேல் மனித உரிமைகள் அமைப்பின் பி குழுவின் நிர்வாகி டெஸ்லேம் ஞாயிற்றுக்கிழமை இது குறித்துக் குறிப்பிடுகையில், ''இரு நாடுகளுக்கிடையிலான பிரச்சினையால் அவ்வவ்போது மோதல்கள் இடம்பெற்று வந்துள்ளன. இஸ்ரேல் படைகள் மேற்கொண்ட தாக்குதல்களில் இதுவரை 7 ஆயிரத்து 398 பலஸ்தீனர்கள் பலியாகியுள்ளனர். இதில் ஆயிரத்து 537 பேர் சிறார்கள்'' என்றார்.

''பலஸ்தீன படையின் தாக்குதலில் இஸ்ரேலைச் சேர்ந்த 139 சிறார்கள் உட்பட ஆயிரத்து 483 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 2009 ஆம் ஆண்டில் நடந்த போரில் மட்டும் ஆயிரத்து 33 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இப்போருக்காக கடந்த டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி படைகள் குவிக்கப்பட்டன. தொடர்ந்து மூன்று வாரங்கள் போர் நடைபெற்றது. இப்போரில் காஸாவில் பெரும்பாலான கட்டடங்களும், குடியிருப்பு வீடுகளும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. பெருமளவில் பெண்களும், பிள்ளைகளும் கொல்லப்பட்டுள்ளார்கள்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாம் செய்த ஊழலை மறைக்கவே கச்சதீவை இலங்கைக்கு தாரைவார்த்தார் கருணாநிதி

## குற்றம் சாட்டுகிறார் விஜயகாந்த்

சென்னை, நவ. 24



தாம் செய்த ஊழலை இந்திரா காந்தி வெளிப்படுத்தி விடுவாரோ என நினைத்து 1974 இல் கச்சதீவை இலங்கைக்கு கருணாநிதி தாரைவார்த்தார் - என்று தே.மு.தி.க்வின் தலைவர் விஜயகாந்த் குற்றம் சாட்டியுள்ளார்.

1983 முதல் இலங்கைத் தமிழர்கள் பாதிக்கப்படுகின்றனர், பேரவலப்படுகின்றனர். அவர்களுக்காக கருணாநிதி என்ன செய்தார்? - என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

புதுவை முன்னேற்ற காங்கிரஸ் செயலாளர் கோ.ராமதாஸ் மற்றும் பல கட்சியை சேர்ந்தவர்கள் தே.மு.தி.கவில் நேற்றுமுன்தினம் இணைந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளுக்கு தே.மு.தி.க. சார்பில் உதவச் சென்றால் அதற்கு தடை விதிக்கப்படுகிறது. நாங்கள் இலங்கை அகதிகளுக்கு உதவ முன்வந்தவுடன் அவர்களுக்காக இப்போது 100 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளார். 1983 முதல் இலங்கைத் தமிழர்கள் பாதிக்கப்படுகின்றனர். அப்போது அவர்களுக்காக கருணாநிதி என்ன செய்தார்?

தமிழர்களுக்காக பல ஆண்டுகளாக உழைக்கிறேன் என்று கருணாநிதி கூறுகிறார்.

ஆனால் காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி கூறிவிட்டார் என்பதற்காக 1972 இல் உச்ச நீதிமன்றத்தில் எதுவும் பேசாமல் வந்துவிட்டார்.

அதன் பின்னர் தாம் செய்த ஊழலை இந்திரா காந்தி வெளிப்படுத்தி விடுவாரோ என நினைத்து 1974 இல் கருணாநிதி கச்சதீவை இலங்கைக்கு அளித்தார்.

உச்ச நீதிமன்ற தீர்ப்புப்படி முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டம் 136 அடி என்பதை 142 அடியாக உயர்த்தாமல் காலம் கடத்தி வருகிறார். இப்படியே போனால் நிச்சயம் முல்லைப் பெரியாறையும் அளித்து விடுவார் கருணாநிதி. இதுதான் தமிழர்களுக்காக கருணாநிதி உழைத்த உழைப்பு.

தமிழகத்தில் கருணாநிதி 5 முறையும், ஜெயலலிதா 2 முறையும் ஆட்சி செய்துள்ளனர். அவர்களது ஆட்சியால் ஏழை மக்களுக்கு எந்த நல்ல காரியமும் நடைபெறவில்லை என்றுதான் தே.மு.தி.க.வில் இணைகின்றனர்.

நிலைமை இப்படி இருக்கையில் ஜெயலலிதாவை ஆட்சியில் அமர்த்தவோ, கருணாநிதியை ஆட்சியில் அமர்த்தவோ நான் (விஜயகாந்த்) கட்சி ஆரம்பிக்கவில்லை. எனவே யாருடனும் கூட்டு என்ற பேச்சுக்கே இடமில்லை. திருச்செந்தூர், வந்தவாசி பேரவை தொகுதிகளுக்கான இடைத் தேர்தலில் தே.மு.தி.க. தனித்துப் போட்டியிடும் - என்றார்.

# இலங்கைக் கடற்படைக்குப் பயந்து இருளில் மீன்பிடிக்கும் மீனவர்கள்

மண்டபம், நவ. 24

இலங்கைக் கடற்படையின் தாக்குதலுக்கு பயந்து தமிழக மீனவர்கள் விசைப்படகில் இரவில் - இருட்டில் மீன்பிடித்தொழில் செய்யும் அவலம் அரங்கேறியுள்ளது.

இலங்கைக் கடற்படை இராமேஸ்வரம், மண்டபம் விசைப்படகு மீனவர்களை தாக்குவது தொடர்ந்து நடக்கிறது. மத்திய,மாநில அரசுகள் கண்டு கொள்ளாத நிலையில், மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாக கொண்டுள்ள மீனவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது.விசைப்படகில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள், இரவில் மீன் பிடிக்கும் போது வெளிச்சத்திற்காக போகஸ் லைட், தீப்பந்தங்களை உபயோகிப்பர்.

ஆனால், மண்டபம் மீனவர்கள் தற்போது இலங்கைக் கடற்படைக்குப் பயந்து, நடுக்கடலில் இரவில் விசைப்படகில் எவ்வித வெளிச்சமுமின்றி, இருளில் மீன்பிடித் தொழில் செய்கின்றனர்.

இதுகுறித்து மீனவர்கள் கூறுகையில் -

நம் பகுதியில் மீன் பிடிக்கும் உரிமைகளை நாம் இழந்து வருகிறோம். இலங்கைக் கடற்படை அத்து மீறி நுழைந்து எங்கள் மீது தாக்குதல் நடத்துகிறது. இலங்கைக் கடற்படை இரவில் எங்களை அடையாளம் கண்டு தாக்குவதால், வெளிச்சமின்றி இருளில் மீன் பிடித்து வருகிறோம். வெளிச்சம் இல்லாததால் மீன்பிடிக்க மிகுந்த சிரமமாக உள்ளது. அரசு தலையிட்டு மீனவர்கள் வாழ்வில் வெளிச்சத்தைக் கொண்டுவர வேண்டும் - என்றனர்.

# இன்னொரு குழந்தை பிறக்கும் அதுவரை பொறுத்திரு தாயே!

## ஈழம் குறித்து நடிகர் கமல் கவிதை



சென்னை, நவ. 24

ஈழத்தின் சோகம் குறித்து போருக்கெதிரான பத்திரிகையாளர்கள் வெளிக் கொணர்ந்துள்ள 'மௌனத்தின் வலி' என்ற நூலில் பிரபல நடிகர் கமல்ஹாசன் கவிதை ஒன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கவிதை இங்கு பிரசுரமாகிறது -

காக்க ஒரு கனக (ஏ.கே.) 47
நோக்கவும் தாக்கவும் ஒரு நொடி நேரம்
தோற்கவும் அதே கண் நேரம்தான்
ஈயம் துளைத்துக் கசிந்து சிவந்த
காயம் தொட்டுக் கையை நனைத்து
விண்ணே தெரிய மண்ணில் சாய்ந்தேன்
முன் காக்க மறந்த அமைதியைக் காத்து.
மாட்டுத் தோலில் தாய்மண் அறைபட
பூட்ஸுக் கால்களால் கடந்தனர் பகைவர்.
விட்ட இடத்தில் கதையைத் தொடங்கச்
சட்டென இன்னொரு குழந்தை பிறக்கும்
அதுவரை பொறுத்திரு தாயே, தமிழே
உதிரம் வடியும் கவிதை படித்து
காணாமல் போகும் படப் பிரதிகள்.

# லிபரான் அறிக்கை வெளியான விடயம்: நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகள் அமளி

புதுடில்லி, நவ. 24

பாபர் மசூதி இடிப்பு தொடர்பான லிபரான் கமிஷன் அறிக்கை விவரங்கள் ஆங்கிலப் பத்திரிகையில் வெளியான விவகாரம் தொடர்பாக மக்களவையில் நேற்று அமளி ஏற்பட்டது.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக நீதிபதி லிபரான் கமிஷன் விசாரித்து வந்தது. சுமார் 17 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தக் கமிஷன் விசாரணை அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்தது. எனினும் இந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்நிலையில், லிபரான் அறிக்கையில் உள்ள விவரங்கள் குறித்து ஆங்கிலப் பத்திரிகையொன்றில் நேற்று செய்தி வெளியானது. பா.ஜ.க. தலைவர்கள் வாஜ்பாய், அத்வானி, முரளி மனோகர் ஜோஷி ஆகியோருக்கு பாபர் மசூதி இடிப்பில் தொடர்பு இருக்கிறது என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நேற்று மக்களவை கூடியதும் எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி இந்த விவகாரத்தை எழுப்பினார். லிபரான் அறிக்கையை உடனடியாக அவையில் தாக்கல் செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தினார். இதையடுத்து, பேசிய முலாயம்சிங் உள்ளிட்டோரும் இதே கருத்தை வலியுறுத்தினர்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், லிபரான் அறிக்கை நாடாளுமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்யப்படும் - என்றார்.

இதைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன.

# பசு வதை செய்தால் மரண தண்டனை..!

## விஸ்வ இந்து பரிஷத் வலியுறுத்து

திருச்சி, நவ. 24

பசு வதை செய்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கும் கடும் சட்டம் தேவை - என்று விஸ்வ இந்து பரிஷத்தின் அகில உலகப் பொதுச் செயலர் பிரவீண்பாய் தொகாடியா வலியுறுத்தியுள்ளார்.

இந்தியா முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் விஸ்வ மங்கள கோமாதா ரத யாத்திரை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை திருச்சி வந்தடைந்ததை அடுத்து, நடைபெற்ற பொது நிகழ்ச்சியில் பேசியபோதே அவர் ,இதைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

நமது நாட்டில் பசு வதை செய்தால் ஒரு காலத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. அதுபோல, பசு வதை செய்தால் மரண தண்டனை விதிக்கும் சட்டம் தேவை.

பசு ரத்தம் சிந்தும் நாட்டில் வளம் இருக்காது. உணவுப் பஞ்சம், குடும்பத்தில் அமைதியற்ற சூழ்நிலை போன்றவையும் நிலவும்.

எனவே, எந்த இடத்திலும் பசு வதையைச் செய்யமாட்டோம் என்ற உறுதி மொழியை எடுத்துக்கொள்ள வேண்டும். நம் நாட்டில் 15 கோடி பசுக்கள் உள்ளன.

50 ஆண்டுகளுக்கு முன்பு வரை பசுக்கள் மேய தனியாக நிலம் இருந்தது. ஆனால், தற்போது பசுக்களுக்குச் சொந்தமான நிலங்களை அரசும், தனியாரும் எடுத்துக் கொண்டனர் - என்றார்.

# இலட்சியத்துக்காகப் போராடுவோருக்கு தோல்வி கிடையாது; தமிழீழம் மலரும்!

## நம்பிக்கையே வாழ்க்கை என்கிறார் வைகோ

கரூர், நவ. 24

இலட்சியத்துக்காக போராடுபவர்களுக்கு தோல்வி என்பதே கிடையாது. ஈழம் மீண்டும் மலரும் என்ற நம்பிக்கையில் எல்லோரும் உள்ளனர். எனவே, நம்பிக்கையே வாழ்க்கை - என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தெரிவித்தார்.

கரூரில் நேற்றுமுன்தினம் சென்னையில் நடந்த அரிமா சங்கங்களின் மண்டல மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

அரிமா சங்கம் இந்தியாவில் 1956 ஆம் ஆண்டும், தமிழகத்தில் 1987 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இது, அரசியல், ஜாதி, மதம் ஆகியவற்றைக் கடந்து மனிதநேயத்தை உன்னத குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் சங்கம்.



எல்லாவற்றையும் கடந்து செயற்படுவது நட்பு. அதுபோல, இந்த அரிமா சங்கம் நட்புறவுடன் செயற்பட்டு வருகிறது. தமிழக வரலாற்றில் அழியாத புகழ் பெற்ற ஊர் கரூர். இது சோழ மன்னர்களின் தலைநகரங்களில் ஒன்றாக இருந்தது.

இலட்சியத்துக்காக போராடுபவர்களுக்கு தோல்வி என்பதே கிடையாது. ஈழம் மீண்டும் மலரும் என்ற நம்பிக்கையில் எல்லோரும் உள்ளனர். எனவே, நம்பிக்கையே வாழ்க்கை - என்றார்.

# நடுக்கடலில் புதுவை மீனவர் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல்?

புதுக்கோட்டை, நவ. 24

நடுக்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த புதுக்கோட்டை மீனவர்கள் மீது, இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தினர். அத்துடன், மீனவரை நிர்வாணப்படுத்தி ஐஸ் கட்டிகளில் படுக்க வைத்து சித்திரவதை செய்தனர் எனவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

கடந்த வெள்ளியன்று காலை 200இற்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் புதுக்கோட்டை மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். மதியம் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையின் ரோந்துப் படகு அங்கு வந்தது.

அதிலிருந்த இலங்கைக் கடற்படையினர், சல்மான் பாரிஸ் என்பவருக்கு சொந்தமான படகில் இருந்த ஹக்கீம், ரஹ்மத் அலி, சீனி முகமது ஆகிய மூவரையும் தாக்கினர். பின்னர், அவர்களை நிர்வாணப்படுத்தி ஐஸ் கட்டிகளில் படுக்க வைத்து சித்திரவதை செய்தனர்.

மூன்று மணி நேரம் இவ்வாறு சித்திரவதை செய்த அவர்கள், தமிழக மீனவர்களிடம் இருந்த மீன்களையும் பறித்துக் கொண்டு விரட்டி விட்டனர்.



நேற்றுமுன்தினம் கரை திரும்ப வேண்டிய அவர்கள், கடந்த வெள்ளியிரவே கரை திரும்பினர். இதுகுறித்து கோட்டைப்பட்டினம் விசைப்படகு மீனவர்கள், சங்கத் தலைவர் சின்ன அடைக்கலத்திடம் முறையிட்டனர். இதுகுறித்து மீன்வளத்துறை அதிகாரிகள் மற்றும் பொலிஸாரிடம் அவர் முறைப்பாடு செய்தார்.

மேலும், கடலுக்கு செல்லும் மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து தாக்கி வருவதால், அவர்களிடம் இருந்து பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றவர்கள் மீது [illegible] நடத்தப்பட்ட சம்பவம் மீனவர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## இந்தியச் செய்திகள்

# முல்லைப்பெரியாறுப் பிரச்சினையில் தமிழக உரிமைக்காகப் போராடுவோம்

## காங். தலைவர் தங்கபாலு தெரிவிப்பு

திருப்பூர், நவ.24

முல்லைப்பெரியாறு அணைப் பிரச்சினையில் தமிழக மக்களின் உரிமையை பெற்றுத்தர தமிழகக் காங்கிரஸ் தொடர்ந்து போராடும். இப்பிரச்சினையில் சுமுகத் தீர்வு காண இரு மாநில அரசுகளையும் அழைத்துப் பேச வேண்டும் என பிரதமரிடம் வலியுறுத்தப்படும் - என்று தமிழக காங்கிரஸ் தலைவர் கே.வீ.தங்கபாலு தெரிவித்தார்.

இதுகுறித்து திருப்பூரில் செய்தியாளர்களிடம் நேற்றுமுன்தினம் அவர் கூறியவை வருமாறு -

வந்தவாசி, திருச்செந்தூர் சட்டப் பேரவை தொகுதிகளுக்கான இடைத் தேர்தலில் கூட்டணித் தர்மப்படி மீண்டும் தி.மு.க. வேட்பாளர்களே நிறுத்தப்படவுள்ளனர்.

முல்லைப்பெரியாறு அணை 142 அடி நீரைத் தாங்கக் கூடிய வலிமையிலேயே உள்ளது.

இருப்பினும், கேரள அரசு தொடர்ந்து நீதிமன்ற உத்தரவு மற்றும் தமிழக விவசாயிகளின் நலனுக்கு எதிராகவே செயற்பட்டு வருகிறது.

இப்பிரச்சினையில் தமிழக மக்களின் உரிமையைப் பெற்றுத்தர தமிழக காங்கிரஸ் தொடர்ந்து போராடும்.

தற்போதைய நிலையில் தி.மு.க. கூட்டணி வலிமையுடனே உள்ளது. பா.ம.கவை கூட்டணியில் சேர்ப்பது என்பது தேர்தல் நேர விவாதம். மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்துள்ளதால் விலைவாசியும் அதிகரித்துள்ளது.

ஆனால், இடதுசாரிகள் கற்பனையான குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின் போராட்டம் மக்கள் மத்தியில் எடுபடவில்லை - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - மட்டக்களப்பு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## விஞ்ஞானம் - I

34-T-I


01. பின்வருவனவற்றுள் எதன் PH பெறுமானம் 7 ஆக இருக்கக்கூடும்?
1) அற்ககோல். 2) எலுமிச்சம் பழச்சாறு.
3) வினாகிரி. 4) அமோனியக்கரைசல்.

02. இரசாயனச்சக்தியை மின்சக்தியாக மாற்றும் ஓர் உபகரணம் எது?
1) மின்குமிழ். 2) உலர்கலம்.
3) தைனமோ. 4) தொலைப்பண்ணி.


03. ஒரே மூலகத்தின் சமதானிகளின், அணுக்கள் அனைத்தினதும் பொது இயல்பு அல்லாதது,
1) அவ்வனைத்து அணுக்களதும் கருக்களில் புரோத்தோன் எண்ணிக்கை சமனான தாயிருத்தல் ஆகும்.
2) அவ்வனைத்து அணுக்களதும் இலத்திரன் எண்ணிக்கை சமனானதாயிருத்தல்.
3) அவ்வனைத்து அணுக்களதும் திணிவெண் சமனானதாயிருத்தலாகும்.
4) அவ்வனைத்து அணுக்களதும் இலத்திரனியலமைப்பு சமனானதாயிருத்தல்.

04. முலையூட்டிக் குருதித் தொகுதி இரட்டைச் சுற்றோட்டத்தைக் கொண்டுள்ளதனால் கருதப்படுவது எது?
1) ஒவ்வொரு உறுப்புக்கும் ஒரு சோடிக் கலன்கள் வீதம் காணப்படலாகும்.
2) குருதித் தொகுதியில் இரண்டு வகையான குருதி காணப்படலாகும்.
3) இதயம், நுரையீரல் ஆகிய இரண்டு உறுப்புக்களின் ஊடாகவும் குருதி பாய்தலாகும்.
4) குருதி உடம்பினூடாக ஒரு தடவை சுற்றோட்டமாகச் செல்லும்போது இதயத்தின் ஊடாக ஒரு தடவை பாய்தலாகும்.


05. சேர்வையின் கீழ் U வேகத்துடன் நிலைக்குத்தாகக் கீழ்நோக்கி எறியப்பட்ட துணிக்கையொன்றின் இயக்கத்தைக் காட்டும் வேக-நேர வரைபு பின்வருவனவற்றில் எது?




06. காபன் அணுவின் புது ஒட்டில் உள்ள இலத்திரன்களை X3 இனாலும் ஒட்சிசன் அணுவின் புறவோட்டில் உள்ள இலத்திரன்களை X இனாலும் குறிக்கும்போது காபனீரொட்சைட்டு மூலக்கூற்றின் பங்கீட்டு வலுப்பிணைப்பில் இலத்திரன்களில் பங்கீட்டு பின்வருவனவற்றுள் எவ்வாறு காட்டலாம்?




07. தொடர் நிலையிலுள்ள இரு தடைகளினூடாக மின் செல்வதைக் கீழுள்ள படம் காட்டுகிறது. $a_1$, $a_2$ அம்பியர்மானியின் வாசிப்புகளாகும். $V_1$, $V_2$ வோற்றுமானிகளின் வாசிப்புகளாகும்.




அம்பியர்மானியிலும் வோற்றுமானியிலும் வாசிப்புகளை பின்வருவனவற்றுள் எது சரியாகக் குறிக்கிறது?

| | அம்பியர்மானி | வோற்றுமானி வாசிப்பு |
|---|---|---|
| 1) | $a_1$இன் வாசிப்பு $a_2$ இலும் குறைவு | $V_1$ இன் வாசிப்பு $V_2$ இலும் குறைவு |
| 2) | $a_1$இன் வாசிப்பு $a_2$ இலும் குறைவு | $V_1$ இன் வாசிப்பு $V_2$ இலும் அதிகம் |
| 3) | $a_1$இன் வாசிப்பு $a_2$ இலும் குறைவு | $V_1$ இன் வாசிப்பு $V_2$ இலும் குறைவு |
| 4) | $a_1$இன் வாசிப்பு $a_2$ இலும் குறைவு | $V_1$ இன் வாசிப்பு $V_2$ இலும் அதிகம் |

08. பின்வருவனவற்றுள் எது நிலக்கீழ்தண்டல்ல?
1) இஞ்சி. 2) மஞ்சள்.
3) மணிவாழை. 4) வத்தாளை.


09. உடல் நலமுடைய ஒருவரின் குருதியில் பின்வருவனவற்றில் எதை அவதானிக்க முடியாது?
1) நுண்ணங்கி. 2) பிறபொருளெதிரி.
3) குளுக்கோசு. 4) யூரியா.

10. உலோகங்களை உருக்கி ஒட்டுவதற்கு பயன்படுத்தப்படும் வாயு?
1) ஒட்சிசன். 2) ஒட்சி அசற்றலீன்.
3) காபனீரொட்சைட். 4) மேற்கூறிய யாவும்.

11. பின்வருவனவற்றில் எண்ணக்கனியம் எது?
1) திணிவு. 2) நிறை. 3) விசை. 4) ஆர்முடுகல்.

12. ஒரு மாணவன் 20 N விசையை பிரயோகித்து ஒருபொருளை 200m தூரம் தள்ளிச் சென்றான். அவன் செய்த வேலை யூலில்,
1) 200×20J 2) 200+ 20J 3) 2×20J 4) 2+ 20J

13. மேசையொன்றின் மீது வைக்கப்பட்ட மரக்குற்றியின் மீது அம்புக்குறி இடப்பட்ட திசையில் A, B, C என்றும் 3 விசைகள் படத்தில் காட்டியவாறு தாக்குகின்றன. மரக்குற்றி அசையும் திசையும் பருமனும்,
1) A யின் திசை 250N
2) A யின் திசை 50N
3) B யின் திசை 350N
4) B யின் திசை 50N




14. வளியிலுள்ள காபனீரொட்சைட்டின் அளவை அதிகரிக்கச் செய்யாத தொழிற்பாடு,
1) சுவாசம். 2) ஒளித்தொகுப்பு.
3) எரிபொருள் எரிதல். 4) தாவரங்கள் அழுகுதல்.

15. வேலை, விசையில் சர்வதேச அலகுகள் முறையே,
1) நியூற்றன், யூல். 2) யூல், நியூற்றன்.
3) வோற்று, கிலோவாற்று. 4) கிலோவாற்று, வோற்று.

16. தாவரத்தண்டில் உணவைச் சேமித்து வைத்திருப்பது,
1) கரட். 2) வற்றாளை.
3) முள்ளங்கி. 4) உருளைக்கிழங்கு.

17. மூலகம் ஒன்று வெப்பமேற்ற முன் வெள்ளி போன்ற பிரகாசமான நாடாப்போன்றது. வெப்பமேற்றும்போது மிகப் பிரகாசமான வெள்ளொளிர்வுடன் எரிந்து வெண்மையான தூளை உண்டாக்குகிறது. அவ்லோகம்,
1) Pb 2) Ag 3) Mg 4) S

18. தாவரக்கலங்கள், விலங்குக்கலங்கள் ஆகியவற்றுக்கிடையே வேறுபட்டு காணப்படும் இயல்பு,
1) கருக்காணப்படுதல். 2) கலச்சுவர் காணப்படுதல்.
3) முதலுருமென்சவ்வு காணப்படுதல். 4) புன்வெற்றிடம் காணப்படுதல்.

19. உருவிற் காட்டப்பட்டிருக்கும் மூக்குத்திப்பூண்டின் சிறு பூவின் ஒழுங்கமைப்பு காணப்படுவது,
1) அரும்பும் கட்டத்தில்.
2) அயன் மகரந்த சேர்க்கைக்கு தயாரான கட்டத்தில்.
3) தன் மகரந்த சேர்க்கைக்கு தயாரான கட்டத்தில்.
4) சிறு பூவின் எல்லாக்கட்டங்களிலும்.



20. அணுக்களுக்கிடையே பிணைப்புக்கள் உண்டாவது,
1) கருக்களுக்கிடையிலாகும். 2) இலத்திரன்களுக்கிடையிலாகும்.
3) புரோத்தன்களுக்கிடையிலாகும்.
4) நியூத்திரன்களுக்கிடையில் ஆகும்.

21. காழ்க்கலத்தின் இயல்பு அல்லாதது எது?
1) தடித்த கலச்சுவருடையவை. 2) உருளை வடிவானவை.
3) நீர், கனியுப்பு, உணவு கடத்தும். 4) நீளமான குழாயுருவானவை.

22. ஆர்முடுகலைக் குறிக்கும் சர்வதேச அலகு பின்வருவனவற்றில் எது?
1) $ms^{-1}$ 2) $ms^{2}$ 3) $ms^{-2}$ 4) $m^2s^{-1}$

23. ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமனும் எதிருமான மறுதாக்கம் உண்டு என்ற கருத்துடன் தொடர்புடைய விஞ்ஞானி யார்?
1) ஆர்க்கிமிடீஸ் 2) ஜோஸப் பிரிஸ்ஸி.
3) ஐசக் நியூட்டன். 4) பிளெமிங்.

24. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் வேலை செய்வதாகக் கருதப்படுகிறது?
1) சுவர் ஒன்றைத் தள்ள முயலும்போது சுவரின் மீது.
2) நீர்ப்பாத்திரம் ஒன்றை தலையில் வைத்துச் சுமந்து செல்லும்போது.
3) நெல்மூடை ஒன்றை தோளில் சுமந்து செல்லும்போது மூடை மீது.
4) கிணற்றில் இருந்து நீர் அள்ளும்போது நீர் வாளி மீது.

25. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் சக்தி ஒலியாக வீண் விரயமாகிப் போகின்றது?
1) வாயு அடுப்புகளில் குறை தகனம் ஏற்படும்போது.
2) இழை மின்குமிழ் ஒளிரும்போது.
3) மண்ணெய் விளக்கு எரியும்போது.
4) பொறிகளின் செயற்பாட்டின்போது மிகை அதிர்வு ஏற்படும்போது.

26. அந்த மின் சங்கிலி மூலம் சக்தியை ஊடு கடத்தும் சாதனம் யாது?
1) நெல் குற்றீம் அலை. 2) துவிச்சக்கர வண்டி.
3) கடிகாரம். 4) வாகனகியர்.


27. Cl 35/37இல் அடங்கிய துணிக்கைகள் தொடர்பாக சரியான கூற்று எது?
1) Cl அணுவில் 17 இலத்திரன்கள் உண்டு. 18 நியூத்திரன்கள் உண்டு.
2) Cl அணுவில் 18 இலத்திரன்கள் உண்டு. 17 நியூத்திரன்கள் உண்டு.
3) Cl அணுவில் 35 இலத்திரன்கள் உண்டு. 17 நியூத்திரன்கள் உண்டு.
4) Cl அணுவில் 17 இலத்திரன்கள் உண்டு. 35 நியூத்திரன்கள் உண்டு.

28. தூய பதார்த்தத்தின் இயல்பு அல்லாதது,
1) ஏகவினமானது. 2) பல்லினமானதல்ல.
3) குறித்த கொதி நிலையுடைய.
4) அப்பதார்த்தத்தில் காணப்படும் கூறுகளின் இயல்புகளைக் காட்டும்.

29. பின்வருவனவற்றுள் மூலகம் எது?
1) செம்பு. 2) சுண்ணாம்பு. 3) கொண்டிஸ். 4) கறியுப்பு.

30. தாவரங்களின் ஆவியுயிர்ப்பு வீதம் குறைவாக நிகழ்வது,
1) நன்கு சூரிய ஒளி கிடைக்கும்போது.
2) வேகமாகக் காற்று வீசும்போது.
3) வளியில் ஈரப்பதம் குறையும்போது.
4) வளியில் ஈரப்பதம் உயர்வாக உள்ளபோது.

31. குருதி வழங்கும் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய இயல்புகளாவன,
1) A - நிறை 20 கிலோ கிராம் முதல் 40 கிராமுக்கு உட்பட்டிருத்தல்.
2) B- மோகுளோபின் சதவீதம் 80%இற்கு மேற்பட்டிருத் தல்.
3) C - நீரிழிவு நோய் இல்லாதவராயிருத்தல்.
4) D - 20 வயதிற்கு குறைந்தவராக இருத்தல்.
1) Aயும் Bயும் 2) Bயும் Cயும்.
3) Cயும் Dயும். 4) Aயும் Dயும்




11 ஆம் பக்கம் பார்க்க....

இன்றைய விஞ்ஞான பாட மாவட்டவல செயற்றிட்டத்திற்கு அனுசரணை வழங்குவது
NSP®
ஸ்ரீ லங்கா
அப்பியாசக் கொப்பிகள்
எழுத்துக்களுக்கு மேலும் அழகு சேர்க்கும்
உங்கள் தோழன்
★ இறக்குமதி செய்யப்பட்ட உறுதியான தரமான வெள்ளை கடதாசி
★ இருபக்கத்திலும் எவ்வித தடையும் இல்லாமல் அழகாக எழுதக் கூடிய தடிப்பம்
★ ஒவ்வொரு பக்கமும் புதியது போன்ற உணர்வு
★ எழுதத்தூண்டுவதுடன் உங்கள் சிந்தனை வேகத்தையும் தூண்டும்
இன்றே NSP கொப்பிகளை வாங்கி ஏனைய அப்பியாசக் கொப்பிகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்
NSP இன் சிறப்பை நீங்களாகவே உணர்வீர்கள்
N0.5, Sangamitta Mawatha, Colombo 13, Sri Lanka. Tell: 94-11-2 323 581, Fax: 94-11-2 342 911

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த "பக்றீரியா" வகைகள் இறக்குமதி

## ஜனவரியில் கொண்டு வரப்படும் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, நவ. 24

டெங்கு நோயைக் கட்டுப்படுத்த ஜனவரி மாதமளவில் பி.டி.ஐ. நோய் எதிர்ப்புக் கிருமிகள் (பக்றீரியா) வகைகள் கொண்டு வரபடவுள்ளன - என சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

டெங்கு நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த பி.டி.ஐ. நோய் எதிர்ப்புக் கிருமி மருந்துகள் 30 ஆயிரம் லீற்றர் கியூபாவில் இருந்து கொள்வனவு செய்யப்படவுள்ளது என்று அமைச்சர் கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இத் தகவலை அவர் வெளியிட்டார்.

இதற்கான நடவடிக்கைகள் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும், எந்த ஒரு மருந்து உற்பத்தி பொருள்களையும் சுயாதீனமாக நாட்டுக்குள் கொண்டு வர முடியாது என்பதனால் கியூப நாட்டுத் தூதுவருடன் இதுகுறித்து தற்சமயம் கலந்துரையாடப்பட்டு வருகிறது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைக்குக் கொண்டு வரப்படவுள்ள நோய் எதிர்ப்புக் கிருமி மருந்துகளைப் பதிவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட விவசாய திணைக்கள நுகர்வோர் பாதுகாப்பு பதிவாளர் சம்ப மாஹமஹே தெரிவித்தார்.

இந்த "பக்றீரியா"வை பதிவுசெய்வதற்கென 30 ஆயிரம் லீற்றர் நாட்டுக்கு கொண்டு வர திணைக்களத்தின் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

# பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பிரதமர் உரை

கொழும்பு, நவ். 24

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று முன்தினம் பகல் ஜமெய்க்கா பயணமானார்.

மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான ட்றினிடாட் அன்ட் டுபேக்கோவில் நடைபெறவுள்ள இந்த மாநாடு அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ளது.

இம்மாநாட்டில் எதிர்வரும் 27 ஆம் திகதி பிரதமர் விசேட உரையாற்றவுள்ளாரென பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் விசேட சந்திப்பொன்றை மேற்கொண்ட ஜனாதிபதி, நேற்றுப் பிற்பகல் ஜனாதி பதித் தேர்தலை நடத்துவது குறித்து உத்தி யோகபூர்வமாக தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்தார்.

ஜனாதிபதியின் இந்த முடிவை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். அத்துடன் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆணையிலும் அவர்கள் கைச்சாத்திட்டுள்ளனர் என்று கூட்டமைப்பின் செயலர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார்.

கூட்டமைப்பின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடுவார் என்றும், அவருக்கு கூட்டமைப்பைச் சேர்ந்த சகல கட்சிகளும் ஆதரவு வழங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலா, பொதுத் தேர்தலா முதலில் நடைபெறும் எனக் கடந்த சில மாதங்களாகக் காணப்பட்ட குழப்பம் இப்போது முடிவுக்கு வந்திருக்கிறது.

இவ்வாறிருக்க, ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதியின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவே என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் லக்ஷ்மன் செனிவிரத்ன இணையத்தளச் செய்திச் சேவையொன்றுக்குக் குறிப்பிட்டுள்ளார். (அ)

## பன்றிக் காய்ச்சல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

8 ஆக உயர்ந்துள்ளது எனவும், 260 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் நோய் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை இதனைவிட அதிகமாக இருக்கலாம் என அமைச்சு எச்சரித்துள்ளது.

இதேவேளை, மத்திய மாகாணத்தில் பன்றிக்காய்ச்சல் வேகமாக பரவி வரும் நிலையில், அங்கு விசேட வைத்திய நிபுணர்கள் குழுவொன்று விஜயம் செய்ய உள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, பொலன்னறுவை, அனுராதபுரம் ஆகிய வைத்தியசாலைகளில் பன்றிக் காய்ச்சல் தாக்கத்துக்குள்ளான 15 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## வடக்குக் கிழக்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரங்கள் மூலமும் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவுடனும் நிரந்தரமாக இணைக்குமாறு இந்தியா, மஹிந்த ராஜபக்ஷவை வலியுறுத்தியுள்ளது.

வடக்கு - கிழக்கை தனித்தனியாக வைத்துக் கொண்டு அரசியல் தீர்வினை முன்வைக்க முடியாது என்பதே இந்தியாவின் நிலைப்பாடாக உள்ளது.

வடக்கு - கிழக்கை இணைப்பதன் மூலம் பெரும்பாலான தமிழ் அரசியல் கட்சிகளை திருப்திப்படுத்திவிட முடியும் என்பதால் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று இந்தியா கருதுகின்றது.

இதனை பிராணப் முகர்ஜி தமது சமீபத்திய இலங்கை விஜயத்தின் போதும் மஹிந்த ராஜபக்ஷவிடம் தெளிவுபடுத்தியுள்ளார்.

வடக்கு - கிழக்கை இணைப்பதற்கு இணங்கினால் எதிர்வரும் தேர்தல்களில் இந்தியாவின் ஆதரவு மஹிந்த ராஜபக்ஷவிற்கு கிடைக்கும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது

வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது தமது தேர்தல் வெற்றிகளை பாதிக்கும் என்பதால் தேர்தல்கள் முடிந்த பின்னர் அவற்றை இணைப்பதாக மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு உறுதியளித்துள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-சி)


வெளிவந்து விற்பனையாகிறது

SLAS
P.உமாசங்கர்

இலங்கை நிருவாக சேவைக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி நூல் - ரூபா - 500/=

★ பொது விவேகம் :- கடந்த 10 ஆண்டு வினா விடைகள்.
★ பொது அறிவு :- கடந்தகால வினா விடையுடன் பல்லாயிரம் அண்மைக்கால தகவல்கள்.
★ கட்டுரையும் சுருக்கமும் :- விளக்கக்குறிப்புகளுடன் அண்மைக் கால விடயங்களைத் தழுவிய 15 கட்டுரைகள்.
★ முகாமைத்துவ உளச்சார்பு:- விளக்கக்குறிப்புகளுடன் கடந்தகால விடைகள்.

இப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் சிறப்புப் புள்ளிகளைத் தரக்கூடிய பிரமாண்டமான நூல்.

(ஓ/562695)

ஏக விநியோகஸ்தர்.
பூபாலசிங்கம் புத்தகசாலை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6693/4374


# இலங்கையின் மனித உரிமை மீறல்கள்; தான் தலையிடாது என்று மலேஷியா அறிவிப்பு

கொழும்பு,நவ. 24

இலங்கையின் மனித உரிமை மீறல் செயற்பாடுகள் அந்த நாட்டின் உள்நாட்டு விவகாரம். அதனால் அந்தப் பிரச்சினைகளில் மலேஷியா ஒருபோதும் தலையிடாது என்று மலேஷிய அரசு அறிவித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமை மீறல் செயற்பாடுகள் இலங்கையினுடைய உள்நாட்டு விவகாரமாக இருப்பதால் அதனைத் தான் கண்டுகொள்ளப் போவதுமில்லை. கண்டிக்கப் போவதில்லை என்று மலேசியா அறிவித்துள்ளது.

மலேசிய நாடாளுமன்றத்தின் சனப் பிரதிநிதிகள் சபையில் வைத்து மலேசியாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஏ.கோகுலன் பிள்ளே நேற்று திங்கட் கிழமை இவ்வாறு தெரிவித்தார்.

மலேசியாவின் வெளியுறவுக் கொள்கையின் படி இலங்கையில் நிலவும் பிரச்சினைகள் இலங்கையினுடைய உள்நாட்டு விவகாரங்களே என்று அவர் அங்கு ஆணித்தரமாக வலியுறுத்தினார்.

மலேசியாவின் சனப்பிரதிநிதிகள் சபையில் இலங்கை விவகாரம் குறித்து அவரிடம் நேற்று கேள்வி எழுப்பப்பட்டது.

மலேசியாவின் பெனாங் மாநிலத்தின் பிரதி முதலமைச்சரான பேராசிரியர் கலாநிதி பி.இராமசாமி இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு மோதல்களின் போதே ஏராளமான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். சுமார் 3 இலட்சம் தமிழர்கள் அகதிகளாக அந்தரிக்கின்றனர். மலேசிய அரசு ஏன் இலங்கை மீது கண்டனம் வெளியிட மறுத்து வருகின்றது என்று பிரதி வெளிநாட்டு அமைச்சரிடம் சபையில் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த போது பிரதி வெளிநாட்டமைச்சர் இலங்கையில் நிலவும் நெறுக்கடி அந்நாட்டின் உள்வீட்டு விவகாரமாகும். அதில் மலேசியா ஒரு போதும் தலையிடாது - என்றார். (அ-சி)

## ஜனாதிபதித் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவு, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய பிரதான எதிர்க்கட்சிகளின் சின்னத்தில் போட்டியிடாது அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட பொதுச்சின்னத்தில் சரத் பொன்சேகா போட்டியிட உள்ளார்.

ஜே.வி.பி. புதிய கட்சியொன்றைப் பதிவு செய்து சின்னம் ஒன்றை பெற்றுக் கொள்ளும் நோக்கில் கட்சியொன்றை பதிவு செய்ய விண்ணப்பத்திருந்த போதிலும் தேர்தல் ஆணையாளர் அதனை நிராகரித்ததை தொடர்ந்து பொதுவேட்பாளரைக் களமிறக்கும் பொதுச் சின்னம் தொடர்பில் சிக்கல் நிலைமை ஏற்பட்டது.

இந்த நிலையில் பொதுச் சின்னத்தில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சரத் பொன்சேகாவை சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தும் பிரசாரப் பணிகளை மேற்கொள்ள எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

தேர்தல் குறித்த அறிவிப்பைத் தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட பின்னர், சரத் பொன்சேகாவின் பெயர் மற்றும் தேர்தல் சின்னம் ஆகியன குறித்து அறிவிக்க எதிர்க்கட்சிகள் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

## வன்னி மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளன என்றும் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

அவர், 'ஸ்ரீலங்கா வாற்ச்' இணையத்தள செய்திச் சேவைக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அப்பேட்டியில் முக்கியமாகத் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நாம் சாக்குப் போக்குக்காகவோ, கண்துடைப்புக்காகவோ பொதுமக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கையில் ஈடுபடவில்லை. மீள் குடியேற்றப்பட்டவர்களின் வாழ்வாதாரத்துக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளோம்.

பொதுமக்கள் அனைவரும் எதிர்வரும் ஜனவரி மாத இறுதிப் பகுதிக்குள் முழுமையாக மீள் குடியேற்றம் செய்யப்படுவர் என்பது எனது நம்பிக்கை. எமது மீள் குடியேற்ற செயற்பாடுகள் நூறு சதவீத வெற்றியைச் சுவீகரித்துக்கொள்ளும். ஏனெனில், மீள் குடியேற்றம் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் மிகவும் துரிதகதியில் இடம்பெற்ற வண்ணம் உள்ளன.

ஒட்டுமொத்தமாக தற்போது 800 பேர் வரை கண்ணிவெடி அகற்றல் சம்பந்தப்பட்ட பல பணிகளில் அங்கு அயராது ஈடுபட்டுள்ளனர். அடுத்த வாரமளவில் இன்னும் 200 பேர்வரைஇணைவர். முகாம்களில்சர்ச்சைக்குரிய சம்பவங்கள் பெரியஅளவில்இடம் பெறவே இல்லை - என்றார். (ஒ-சி)


வெளிவந்துவிட்டது

பரீட்சை வழிகாட்டி..
தரம் - 1
தரம் - 2
தரம் - 3
தரம் - 4

ஆக்கம், ந. சந்திரகுமார் (மட்டக்களப்பு)

அன்னை புத்தகசாலை,
யாழ்ப்பாணம் 2229881


## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கத்தின் உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் மற்றும் அதிபர் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கென ஒதுக்கீடு செய்யபட்ட நிதியினை இவ்வருட இறுதிக்குள் பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கை உட்பட மற்றும் சில கோரிக்கைகளை முன்வைத்து இந்த தொழிற்சங்க ஆர்ப்பாட்டம் நடத்தப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (அ-சி)

## மாவீரர் நாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

மாவீரர் நாள் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வருவதால் அதனை முன்னிட்டு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களில் படை யினர் பாதுகாப்பை பலப்படுத்தி உள்ளனர் என்று இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடற்கரைப் பகுதிகளிலும் அவற்றை அண்டிய பகுதிகளிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## யுத்தக் குற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமை மீறல்கள் குறித்து ஊடகவியலாளர்களிடம் உரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தெரிவித்தவை வருமாறு:-

யுத்தத்தின் போது இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணைகள் கட்டாயம் நடத்தப்பட வேண்டும். அது வரைக்கும் நான் இந்தச் சர்வதேச விசாரணைக்காகத் தொடர்ந்தும் குரல் கொடுத்துக் கொண்டே இருப்பேன்.

யுத்தக் குற்றங்களை பாரதூரமான அளவில் மேற்கொள்பவர்கள் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும். இக்குற்றவாளிகளுக்குத் தண்டனைகளிலிருந்து விலக்களிக்கும் கலாசாரம் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். எனவேதான் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கையைப் போன்ற நாடுகளில் கட்டாயம் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று நான் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறேன். நான் இலங்கை விடயத்தில் மாத்திரம் இவ்விசாரணைகள் தேவையென்று கூறவில்லை.

அதேநேரம், எல்லா நாடுகளும் அந்தந்த நாடுகளின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகப் பொறுப்பு கூறுவதற்குத் தயங்கக் கூடாது - என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ-சி)

## மரண அறிவித்தல்



### நடேசு பரஞ்சோதி

செங்குந்தர் வீதி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு பரஞ்சோதி (முன்னாள் உத்தியோகத்தர், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை) 22.11.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

தற்போது அன்னாரது பூதவுடல் அவர் இறுதியாக வசித்த கத்தாப்படி வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி என்னும் முகவரியில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P.:- 0771606957.

தகவல்:
நண்பர்கள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org